Registered as Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36
கதிர் : 246
ஞாயிற்றுக்கிழமை
ஆடி 16 நாள்
01 ஒகஸ்ட் 2021
வள்ளுவர் ஆண்டு 2052
பக்கங்கள்: 16+16
விலை : ரூ.40
செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

# இலங்கையில் கொவிட் மீண்டும் தீவிரமாகிறது!

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

**கொழும்பு, ஒக. 1**

**இலங்கை உள்ளிட்ட உலக நாடுகள் பலவற்றில் கொரோனா வைரஸ் தொற்று மீண்டும் அதிகரித்து வருகின்றது என உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

15 >

## கிணற்றுக்குள் வீழ்ந்து சிறுமி பரிதாபச் சாவு!

வவுனியா, ஒக. 1

வவுனியா கனகராயன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலங் குளம் பகுதியில் கிணற்றுக்குள் வீழ்ந்த சிறுமி பரிதாபமாக உயிரிழந்தார். நேற்றுச் சனிக்கிழமை இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றது. நிசாந்தி (வயது 7) என்ற சிறுமியே உயிரிழந்தவர். குறித்த சிறுமியை நீண்ட நேரமாகக் காணவில்லை என்று அவருடைய பெற்றோர்கள் தேடியபோது சிறுமி

15 >

அபாயகரமான சூழ்நிலையில்

## நாட்டை மீண்டும் திறக்கும் முடிவில் மாற்றம் வரலாம்!

கொழும்பு, ஒக. 1

கொரோனாத் தொற்றின் தீவிரத்தால் நாட்டை நாளை மீண்டும் திறக்கும் முடிவில் மாற்றங்கள் ஏற்படலாம் என்று இராஜாங்க அமைச்சர் விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே

15 >

வீட்டுத்திட்ட விவகாரம்

## இறுதிப் பட்டியலிலிருந்து 304 பயனாளிகள் மாற்றம்

### முறைகேடுகள், குளறுபடிகள் தொடர்ந்து அம்பலம்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 1

யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வீட்டுத்திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவில் முறைகேடுகள், குளறுபடிகள், குழப்பங்கள் இடம்பெற்றுள்ளமை உறுதியாகியுள்ளது. இறுதிப் பட்டியல் என்று பிரதேச செயலர்களால் சமர்ப்பிக்கப்பட்ட மூலப் பட்டியலிலிருந்து தற்போது

15 >

| பிரதேச செயலகம் | ஒதுக்கப்பட்ட வீடுகள் | | வித்தியாசம் | | வித்தியாச சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | ரூ.1 மில். | ரூ.0.6 மில். | ரூ.1 மில். | ரூ.0.6 மில் | |
| நெடுந்தீவு | 20 | 8 | 2 | 3 | 17.8 |
| வேலணை | 53 | 25 | 0 | 2 | 2.5 |
| ஊர்காவற்றுறை | 53 | 21 | 2 | 2 | 5.4 |
| காரைநகர் | 53 | 21 | 13 | 12 | 33.7 |
| யாழ்ப்பாணம் | 53 | 25 | 0 | 0 | 0 |
| நல்லூர் | 73 | 42 | 2 | 2 | 3.4 |
| சண்டிலிப்பாய் | 93 | 42 | 9 | 2 | 8.1 |
| சங்கானை | 93 | 42 | 28 | 9 | 27.4 |
| உடுவில் | 93 | 42 | 15 | 10 | 18.5 |
| தெல்லிப்பழை | 183 | 84 | 13 | 13 | 4.8 |
| கோப்பாய் | 163 | 84 | 33 | 22 | 22.2 |
| சாவகச்சேரி | 163 | 84 | 44 | 9 | 21.4 |
| கரவெட்டி | 73 | 25 | 2 | 5 | 7.1 |
| பருத்தித்துறை | 93 | 34 | 19 | 7 | 20.4 |
| மருதங்கேணி | 41 | 21 | 20 | 4 | 38.7 |
| மொத்தம் | 1300 | 600 | 202 | 102 | |

## 36 ஆண்கள் உட்பட மேலும் 61 பேர் சாவு

### கொரோனா சாவு 4,441

கொழும்பு, ஒக. 1

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 61 பேர் சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்த 61 பேரில் 25 பெண்களும், 36

13 >

## மோட்டார் சைக்கிளிலிருந்து வீழ்ந்த முதியவர் உயிரிழப்பு

*அவருக்கு முன்னெடுத்த சோதனையில் கொரோனாத் தொற்று உறுதியானது*

யாழ்ப்பாணம், ஒக. 1

மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த முதியவர் திடீரெனத் தடுமாறி வீதியில் வீழ்ந்த நிலையில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று அதிகாலை உயிரிழந்தார். அங்கு அவருக்கு மேற்கொள்ளப்பட்ட

15 >

## பொலிஸாரின் வன்முறைகளை அனுமதிக்கப் போவதில்லை!

*யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் காட்டம்*

யாழ்ப்பாணம், ஒக. 1

பணத்துக்காகவும் சலுகைகளுக்காகவும் பொலிஸார் வன்முறைகளில் ஈடுபடுவது கவலைக்குரியது. அதை அனுமதிக்கப் போவதில்லை என்று யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த லியனகே தெரிவித்தார்.

15 >

செஞ்சோலையில் நடந்த விமானக்குண்டு வீச்சில்

## 50க்கும் மேற்பட்ட சிறார்கள் கொல்லப்பட்டது உண்மையே!

*அரச சாட்சி பரபரப்பு சாட்சியம்*

கொழும்பு, ஒக. 1

இலங்கை விமானப்படையினர் முல்லைத்தீவு செஞ்சோலை சிறுவர் இல்லம் மீது கடந்த 2006ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடத்திய தாக்குதலில் 18 வயதிலும் குறைந்த 50க்கும் அதிகமான

15 >

## காலை, மாலை மட்டுமே மாகாணப் போக்குவரத்து

கொழும்பு, ஒக. 1

மாகாணங்களுக்கு இடையிலான பொதுப்போக்குவரத்து சேவைகள் இன்று முதல் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன. எனினும், ஆரம்பக் கட்டமாக காலை மற்றும் மாலை நேரங்களில் மட்டுமே பொதுப்போக்குவரத்து

15 >


## பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபருடன் மதுவிருந்தில் கோப்பாய் பொலிஸார்!

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 1

நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபருடன் கோப்பாய் பொலிஸார் மதுவிருந்தில் கலந்து கொள்கின்றனர் என்றும், பொலிஸாருடன் மதுவிருந்தில் கலந்துகொள்பவர்கள் தம்மை சிவில் உடை தரித்த பொலிஸார் என்று அடையாளப்படுத்தி

13 >

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பல்துறைத் திறன்களோடு
# முன்னோக்கிப் பயணிக்கும் 82 ஆண்டுகள்!

**வங்கித்துறையின் முன்னோடியான இலங்கை வங்கி 82 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடுகின்றது**

இலங்கையின் முதலாவது அரச வங்கியாக மக்களின் அதிஉயர் நம்பிக்கையையும் அங்கீகாரத்தையும் பெற்று வங்கித்துறையின் பல்துறைத் திறன்களோடு, வளர்ச்சிப் பாதையில் இலங்கையின் முதற்தர வங்கியாக, முற்போக்கு இலட்சியங்களுடன் பயணிக்கும் இலங்கை வங்கி தனது கீர்த்தி மிக்க 82 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடுகின்றது.

நவீன உலகின் புதிய தொழிநுட்பத்தை பரம்பரை பரம்பரையாக தன்னகத்தே கொண்டு தொடர்ச்சியான நிலைப்பாட்டுடன் உள்ளத்தோடு இணைந்த நினைவுகளுடன் நாளைய தினத்தை வென்றிடும் வங்கிச் சேவையின் புதிய அனுபவங்களை உங்களுக்கு வழங்க இலங்கை வங்கி என்றென்றும் அர்ப்பணிப்போடு காத்திருக்கின்றது.

1975 BOC CALL CENTRE

www.boc.lk

தலைமை அலுவலகம், BOC சதுக்கம்,
இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்மீதான தோல்விகளை மறைக்கவே ரிஷாத் விடயம்

## அரசுமீது ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 1

**நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனுடைய இல்லத்தில் பணிக்கமர்த்தப்பட்டு உயிரிழந்த சிறுமியின் விவகாரத்தை, அரசு தன்மீதான தோல்விகளை மறைப்பதற்காக பயன்படுத்திக்கொண்டிருக்கிறது.**

அதன் காரணமாகவே அந்த விடயத்துக்கு முக்கியத்துவமளிக்கப்படுவதைப் போன்று காண்பிக்கப்படுகிறது. எனினும், சம்பவம் தொடர்பான விசாரணைகளின் நிறைவில் குற்றவாளி யாராக இருந்தாலும் நிச்சயம் தண்டிக்கப்படவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹிணி கவிரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசு அதன் தோல்விகளை மறைப்பதற்காக டயகம சிறுமியின் விவகாரத்தை பயன்படுத்திக் கொண்டிருக்கிறது.

இந்த விவகாரத்தை பெரிதாகக் காண்பித்து அதனை பேசுபொருளாக்கி தனது தோல்விகளை மறைப்பதையே இதன் ஊடாக அரசு எதிர்பார்க்கிறது.

குறித்த சிறுமியின் பெயர், ஒளிப்படங்கள், குடும்ப அங்கத்தவர்களின் ஒளிப்படங்கள், விவரங்கள் என்பவற்றை வெளியிட்டு அந்த சிறுமி இறந்த பின்னரும்கூட மீண்டும் மீண்டும் துஷ்பிரயோ கத்துக்கு உட்படுத்தப்படுகிறார்.

இது தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்பதையே நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றோம். விசாரணைகளின் நிறைவில் குற்றமிழைத்தவர் ரிஷாத் பதியுதீனாக இருந்தாலும் சரி அல்லது யாராக இருந்தாலும் அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும். அவ்வாறில்லை என்றால் இந்த விவகாரமும் வித்தியா உள்ளிட்ட சிறுமிகளுக்கு நிகழ்ந்ததைப் போன்று வரலாற்றில் ஒரு சம்பவமாக மாத்திரமே இடம்பிடிக்கும்- என்றார். (த-இ)

# ஆசிரியர்களின் கோரிக்கைகளுக்கு தீர்வை முன்வைக்கத்தெரியாத அரசு

## சஜித் பிரேமதாச விசனம்

கொழும்பு, ஓக. 1

நாடு முழுவதும் ஆசிரியர்கள் முன்னெடுத்துவரும் போராட்டத்துக்கு உரிய தீர்வைக் காணமுடியாத அரசுதான் நாட்டின் அதிகாரத்தில் உள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி தனது முழுமையான ஆதரவை வழங்க உள்ளது என்று தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அரசு மீது கடும் அதிருப்தியையும் வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ,

எதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் அல்லது எதற்கு முன்னுரிமை வழங்கக்கூடாது என்பது குறித்து அரசுக்கு எந்தவொரு திட்டமும் நோக்கமும் இல்லை. நாட்டில் மாணவர்கள் கல்வி சவிடயத்தில் பயங்கரமான அபாயத்தை எதிர்கொண்டுள்ளனர்.

மறுபுறம் இணையவழிக் கல்வி முறைமை இன்னும் முறையாக இடம்பெறுவதாக இல்லை. அரசுக்கு சொந்தமான ஊடக நிறுவனங்களைப் பயன்படுத்தி மாணவர்களின் கற்றல் பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிக்கவும் இல்லை. இவ்வாறான பொறுப்பற்ற செயற்பாடுகளால் அரசுமீது கடும் அதிருப்தியை வெளிப்படுத்தவேண்டியுள்ளது- என்றார். (த-இ)





# வவுனியாவில் உத்தரவாத விலையில் நெல் கொள்வனவு

வவுனியா, ஓக. 1

வவுனியாவில் உத்தரவாத விலையில் நெல் கொள்வனவு நடவடிக்கை நான்கு இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரசால் நெல்லை உத்தரவாத விலையில் கொள்வனவு செய்து அரிசியைக் கட்டுப்பாட்டு விலையில் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக நெல் கட்டுப்பாட்டு சபையால் சிறுபோக நெல் கொள்வனவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வவுனியாவில் பூங்கா வீதி, மாமடு, நெடுங்கேணி, வேப்பங்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள நெல் களஞ்சியசாலைகளில் நெல் கொள்வனவு நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. இதன்படி ஒரு கிலோ நாடு 50 ரூபாவுக்கும், சம்பா 52 ரூபாவுக்கும், கீரிச் சம்பா 55 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படுவதுடன் போக்குவரத்து கூலியாக கிலோ ஒன்றுக்கு 1.50 சதம் வழங்கப்படுகின்றது.

எனவே, விவசாயிகள் உலர்ந்த நெல்லை அரசின் உத்தரவாத விலையில் நெல் களஞ்சியசாலைகளில் விற்பனைசெய்ய முடியும் என நெல் கட்டுப்பாட்டு சபையினர் தெரிவித்துள்ளனர். (ப-18)

# அரசு எடுக்கின்ற தீர்மானங்கள் கொரோனாவைப் பரப்புகின்றன

கொழும்பு, ஓக. 1

அரசு தற்போது எடுக்கும் தீர்மானங்கள், நாட்டில் கொவிட் தொற்று பரவல் அபாயத்தை மேலும் அதிகரிக்கும் வகையிலேயே அமைந்துள்ளன. சரியான நேரத்தில் உரிய தீர்மானங்களை எடுக்காமல் ட்ரம்பினுடைய கொள்கையை பின்பற்ற முற்பட்டால் நாடு மீண்டும் பாரதூரமான நிலைமையை அடையும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் எச்சரித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

இறப்பவர்கள் இறக்கட்டும். தம்மை பாதுகாத்துக் கொள்ளக் கூடியவர்கள் வாழட்டும் என்ற ரீதியில் டொனால்ட் ட்ரம்ப் எடுத்த பிழையான தீர்மானமே அமெரிக்கா பெரும் அழிவுக்குச் செல்ல வழிவகுத்தது. தற்போது எமது அரசும் அவ்வாறானதொரு கொள்கை ரீதியான தீர்மானத்தையே எடுத்துள்ளது.

டெல்டா உட்பட பல்வேறு வைரஸ் திரிபுகள் பரவ ஆரம்பித்துள்ளமையால் தடுப்பூசி ஏற்றிக்கொள்வது மாத்திரமின்றி சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளை முறையாக பின்பற்றுமாறு உலக சுகாதார ஸ்தாபனம் வலியுறுத்தி வருகிறது.

ஆனால் அரசு அதற்கு முரணாக சகல அரச உத்தியோகத்தர்களையும் சேவைக்கு அழைத்துள்ளது. இதனால் கொழும்புக்கு பெருமளவானோர் வரக்கூடும். அத்தோடு பொதுப்போக்குவரத்துக்களும் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்றாமல் அளவுக்கதிகமான பயணிகளை ஏற்றிவரக்கூடும்.

இதனால் நாடு மீண்டும் பாரதூரமான நிலைக்குச் செல்லும். நாட்டில் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வேண்டும் என்பதா அரசின் எதிர்பார்ப்பு? என்றும் கேள்வியெழுப்பியுள்ளார். (த-இ)

# சுகாதார சேவைகள் பணிமனைக்கு ஒரு தொகுதி பொருள்கள்

முல்லைத்தீவு.ஓக.1

முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு ஒரு தொகுதி அத்தியஅவசியப் பொருள்கள் வழங்கப்பட்டன.

பெரண்டினா நிறுவனத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகிய நோயாளிகளுக்கு அடிப்படை வசதிகள் கருதி மருத்துவம் சாராத, மருத்துவத்துக்கு துணைநிற்கின்ற துணைப்பொருள்கள் வழங்கும் செயற்றிட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்தவகையில் குறித்த செயற்றிட்டத்தின் ஒரு அங்கமாக நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதாரசேவைகள் பணிமனைக்கு அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்பட்டன.

பெரண்டினா நிறுவனத்தின் வட பிராந்திய இணைப்பாளர் ச.விஜிந்தனால், முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மு.உமாசங்கரிடம் குறித்த பொருள்கள் கையளிக்கப்பட்டன. (ஐ-246)

# தாக்குதலில் இருவர் காயம்

தாக்குதலுக்கு இலக்கான இரு இளைஞர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கைதடி தெற்குப் பகுதியில் நேற்று முன்தினம் மதியம் இடம்பெற்றுள்ளது. தாக்குதலில் 27 மற்றும் 21 வயதுடைய இரு இளைஞர்களே இவ்வாறு காயமடைந்தனர். (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## தடுப்பூசியிலும் தெரிவுகள் தேவை

இலங்கையில் தற்போது தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. சீனத் தயாரிப்பான சைனோஃபோர்ம் தடுப்பூசிகளே பெரும்பான்மையான இலங்கை மக்களுக்கு ஏற்றப்படுகின்றன. வடக்கிலும் இப்போது சைனோஃபோர்ம் தடுப்பூசி ஏற்றல் தீவிரமாக நடக்கின்றது.

முழு உலகையும் மிரட்டிவரும் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான கடைசி ஆயுதம் தடுப்பூசிதான். அனைவரும் தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்வதன் ஊடாக கொரோனா வைரஸ் தாக்கத்தைக் குறைக்க முடியும் என்று நம்பப்படுகின்றது. ஏனைய நாடுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட வகைத் தடுப்பூசிகள் ஏற்றப்படுகின்றன. தங்களுக்குப் பொருத்தமான தடுப்பூசிகளை மக்கள் தெரிவு செய்யக்கூடியதாக இருக்கின்றது.

அனைவருக்கும் தடுப்பூசியை ஏற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் இலங்கை அரசு செயற்படுகின்றது. அது வரவேற்கத்தக்கது, ஆனால் மக்கள் மத்தியில் சில குழப்பங்களும் இருக்கின்றன. அவற்றைத் தெளிவுபடுத்த வேண்டிய கடப்பாடு அரசுக்கும், சுகாதார அதிகாரிகளுக்கும் நிச்சயம் இருக்கின்றது.

இலங்கையின் பொருளாதார நிலைமைகளால் பைஸர், ஸ்புட்னிக் போன்ற தடுப்பூசிகளை இறக்குமதி செய்ய முடியாத நிலைமை இருக்கின்றது. நன்கொடையாகக் கிடைத்த தடுப்பூசிகளே மக்களுக்கு வழங்கப்படுகின்றன. சீனத் தயாரிப்பான சைனோஃபோர்ம் தடுப்பூசிகளே 90 சதவீதமான இலங்கையர்களுக்கு ஏற்றப்படுகின்றன.

பெரும்பாலான மேற்கத்தேய நாடுகள் தங்கள் நாடுகளுக்குள் உள்நுழைவோருக்கு கடும் கட்டுப்பாடுகளை விதித்திருக்கின்றன. பைஸர், அஸ்ட்ராஜெனகா போன்ற வீரியம் மிக்க தடுப்பூசிகளை ஏற்றியவர்களே தங்கள் நாடுகளுக்குள் நுழைய முடியும் என்ற இறுக்கமான நடைமுறைகளை அந்த நாடுகள் பின்பற்றுகின்றன.

தங்களுக்கான தடுப்பூசியைத் தெரிந்தெடுத்து ஏற்றிக்கொள்ளும் வாய்ப்பு இலங்கை மக்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை. இலங்கையில் பெரும்பான்மையாக ஏற்றப்படும் தடுப்பூசியை மேற்கத்தேய நாடுகள் ஏற்றுக்கொள்ளாத நிலையில், எதிர்காலத்தில் இலங்கை மக்களின் வெளிநாட்டுப் பயணங்கள் சிக்கலாகலாகக் கூடும்.

இப்படியான சிக்கல்களால், வெளிநாட்டு கற்கைநெறிகளுக்காக, ஏனைய தேவைகளுக்காக வெளிநாட்டுப் பயணங்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்போர் சைனோஃபோர்ம் தடுப்பூசியை ஏற்றிக்கொள்வதா? இல்லையா? என்ற குழப்பத்தில் இருக்கின்றனர். ஒரு தடுப்பூசியை ஏற்றிக்கொண்டால் ஓராண்டுக்குப் பின்னரே பிறிதொரு தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள முடியும் என்று மருத்துவத் துறை சார்ந்தவர்கள் கூறும் நிலையில், சைனோஃபோர்ம் தடுப்பூசியை ஏற்றிக்கொள்வதில் தயக்கம் காட்டுக்கின்றனர்.

தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாதவர்களுக்கு கட்டுப்பாடுகளை விதிப்பது தொடர்பாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆலோசித்துள்ளார் என்று கூறப்படுகின்றது. மக்கள் மத்தியில் உள்ள சந்தேகங்களைத் தீர்க்காமல் – மக்களுக்கு தெரிவுகளை வழங்காமல் இலவசமாகக் கிடைக்கின்றது என்பதற்காக கட்டாயப்படுத்துவது சரியானதல்ல.

சைனோஃபோர்ம் தடுப்பூசிகளை அனைத்து நாடுகளும் ஏற்றுக்கொள்ளும் நிலைமையை ஏற்படுத்த அரசு முயல வேண்டும், அல்லது மக்கள் தங்கள் எதிர்காலத் திட்டங்களுக்கு ஏற்ப தங்களுக்குப் பொருத்தமான தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளும் வழிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இது தொடர்பான விளக்கங்களை சுகாதார அதிகாரிகள் உடனடியாக வழங்க வேண்டும். இல்லாவிடில் சைனோஃபோர்ம் தடுப்பூசியை ஏற்றுவதில் மக்களுக்குள்ள தயக்கம் நீண்டுகொண்டே செல்லும்.

இவை எதையும் செய்யாது – மக்களைப் பற்றி சிந்திக்காது சைனோஃபோர்ம் தடுப்பூசிகளைத்தான் ஏற்றிக்கொள்ள வேண்டும் என்று கோத்தாபய ராஜபக்ச அரசு வற்புறுத்துமானால், இந்தத் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளும் மாணவர்கள் உட்பட பலரது வாய்ப்புக்கள் [illegible] கலாம். அதுவும் ஒரு வகையில் மிகப் பெரிய [illegible] உரிமை மீறலே.




## தகவல் அறியும் உரிமைக் கோரிக்கையை திருப்பி அனுப்பியது கிளி. டி.ஐ.ஜி அலுவலகம்

### ஊடகவியலாளர் கவலை

**கிளிநொச்சி, ஓக. 1**

**கிளிநொச்சி இரணைமடுவில் அமைந்துள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்துக்கு அனுப்பப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மேன்முறையீட்டு விண்ணப்பம், ஏற்றுக்கொள்ள மறுக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது;

கிளிநொச்சியைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக கிளிநொச்சி - முல்லைத்தீவு பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகத்திடம் கடந்த ஏப்ரல் 30ஆம் திகதியிட்டு சில தகவல்களைக் கோரி விண்ணப்பித்தார். இதற்கான பதில் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட கால எல்லையைக் கடந்தும் அனுப்பப்படவில்லை. இந்த நிலையில் சட்டத்தின் பிரகாரம் ஊடகவியலாளர் குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு கடந்த 20ஆம் திகதி மேன்முறையீட்டு விண்ணப்பத்தை தகவல் அறியும் படிவம் 10இன் ஊடாக பதிவுத் தபாலில் அனுப்பியிருந்தார். இந்த விண்ணப்பத்தையே கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் ஏற்க மறுத்து திருப்பி அனுப்பியுள்ளது. கோரிக்கை அனுப்பப்பட்ட தபாலுறையில் பொலிஸ் திணைக்களத்தால் ஏற்க மறுத்துள்ளார்கள் என எழுதப்பட்டுள்ளது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி அலுவலகங்கள், நிறுவனங்களில் உள்ள தகவல் அறியும் அலுவலருக்கு விண்ணப்பித்து அவரிடமிருந்து உரிய காலத்தில் தகவல் ஏதேனும் கிடைக்கவில்லை என்றால் அவ்வலுவலகத்தில் சட்டத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ள குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு மேன்முறையீடு செய்யவேண்டும். இதற்கும் பதில் இல்லை எனில் தகவல் அறியும் ஆணைக்குழுவுக்கு முறையீடு செய்ய முடியும். ஆனால் சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற பொலிஸ் திணைக்களமே சட்டத்தின் படி நடக்காமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது என்று குறித்த ஊடகவியலாளர் கவலை தெரிவித்துள்ளார். (ப-214)

## வீடுவீடாகச் சென்று மக்களை விழிப்பூட்டும் கிராம அலுவலர்கள்

சாவகச்சேரி, ஓக.1

தேர்தல் வாக்களிப்பு தினத்தன்று செயற்படும் கட்சிகளின் முகவர்கள் போல நேற்று தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த கிராம அலுவலர்கள் செயற்பட்டதைக் காணமுடிந்தது.



கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் பணிகள் இடம்பெற்ற நிலையில் மக்கள் தடுப்பூசி செலுத்துவதில் அக்கறை காண்பிக்கவில்லை என்று சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் பிரதேச செயலருக்கு அறிவித்திருந்தனர்.

இதனையடுத்து நேற்றுமுன்தினம் அனைத்து கிராம அலுவலர்களையும் பிரதேச செயலகத்துக்கு அழைத்த பிரதேச செயலர், பொது மகள் தடுப்பூசி ஏற்றிக்கொள்வதை ஊக்குவிக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

இதனையடுத்து கிராம அலுவலர்கள் மற்றும் கிராம மட்ட அலுவலர்கள் நேற்றுமுன்தினம் தொடக்கம் வீடு வீடாகச் சென்று தடுப்பூசி ஏற்றிக் கொள்ளுமாறு ஊக்குவித்து வருகின்றனர். இதன் பயனாக பிரதேசத்தில் நேற்று தடுப்பூசி ஏற்றும் நிலையங்களுக்கு காலையிலேயே பெருமளவான மக்கள் வருகை தந்து தடுப்பூசி ஏற்றிக்கொண்டதை காணமுடிந்தது. (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கிராம அலுவலகங்களுக்கு இடையில் போட்டிகள்

சாவகச்சேரி, ஓக. 1

தேசிய அளவில் கிராம அலுவலர் அலுவலகங்களுக்கு இடையிலான முகாமைத்துவப் போட்டிகள் நாளை ஆரம்பமாகவுள்ளன.

கிராம அலுவலர்களின் செயற்பாடுகளை மேம்படுத்தும் வகையில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் வருடாந்தம் கிராம அலுவலர் அலுவலகங்களுக்கு இடையில் முகாமைத்துவ போட்டிகள் நடத்தப்படுகின்றன.

குறித்த போட்டிகளில் தெரிவு செய்யப்படும் அலுவலகங்களுக்கு பரிசில்கள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9)



## ஒவ்வாமை ஏற்படுவோருக்கு நேற்று கொவிட் தடுப்பூசி

சாவகச்சேரி, ஓக.1

ஒவ்வாமை ஏற்படுவோருக்கான கொரோனா தடுப்பூசி நேற்று சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் வைத்து ஏற்றப்பட்டது. நேற்று மதியம் வரை 100 க்கு மேற்பட்டோர் தடுப்பூசியை பெற்றுக்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பிரதேசத்தில் உணவு மற்றும் மருந்து பாவனையில் ஒவ்வாமை ஏற்படுவோருக்கான தடுப்பூசி எதிர்வரும் 7 ஆம் திகதியும் ஏற்றப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)


# விலை மதிப்புள்ள வர்த்தகச் சொத்து விற்பனைக்கு



சந்தா சந்தை வீதி கொட்டாவத்தை உடுப்பிட்டி நெல்லியடி சந்தியில் இருந்து அல்வாய் (திக்கம் வீதி) வீதி வதிரி சந்தி இருந்து சுமார் 800m இடது புறமாக வதிரி உடுப்பிட்டி வீதி, சந்தி சந்தை சந்தி வரை 2km மேற்கு நோக்கி சென்று பின்னர் மீண்டும் வலது புறம் திரும்பி சந்தி சந்தை சந்தியில் இருந்து 800m தூரத்தில் இச்சொத்தானது சாலையின் வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

**Land : 1Lms V.V and 9 kulies (15 Perches)**
**Extent : 2, 678 Sq.ft**

உங்களின் முத்திரை இடப்பட்ட ஏலத்திற்கான பத்திரத்தை 06.08.2021 அன்று அல்லது அத்திகதிக்கு முன் கீழ் காணும் DFCC வங்கிக் கிளைகளில் உள்ள ஏலத்திற்கான ஒப்பந்த பெட்டியில் போடவும்.

**Nelliady Branch :**
076 647 8298 (mariyathas)

**Ramanayake Mawatha Branch :**
011 237 1447/ 011 237 1418 (jayanath / Dulaj)
(Office Hours only)

**எந்த ஒரு ஏலத்தையும் ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ DFCC வங்கிக்கு முழு உரிமையும் உள்ளது.**

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk
DFCC வங்கி




## 35 பேருக்கு நேற்று கொவிட் பரிசோதனை

சாவகச்சேரி, ஓக.1

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் நேற்று 35 பேருக்கு கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. 18 பேருக்கு அன்டிஜென் பரிசோதனையும், 17 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டன.

அன்டிஜென் பரிசோதனையில் எவருக்கும் தொற்று ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

பி.சி.ஆர். பரிசோதனையில் 17 பேரிடம் பெறப்பட்ட மாதிரிகள் ஆய்வுக்காக யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கப்பட்டன. (ஐ-9)



## வவுனியாவில் தொடர்ச்சியாக செலுத்தப்படுகின்றது தடுப்பூசி

வவுனியா, ஓக.1

வவுனியா மாவட்டத்தில் கடந்த 28ஆம் திகதி தொடக்கம் கொவிட் 19 தடுப்பூசி வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், ஆசிரியர்கள், 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இத் தடுப்பூசி வழங்கப்படுகின்றது.

இச் செயற்பாட்டை சுகாதாரப் பகுதியினர், கிராம அலுவலர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் இராணுவத்தினர் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர்.

அந்த வகையில் நேற்று வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயத்திலும் தடுப்பூசி வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. ஈச்சங்குளம், புதுக்குளம், கல்மடு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் ஆர்வத்துடனும் சுகாதார நடைமுறைகளைப் பேணியும் தடுப்பூசியை பெற்றுக்கொண்டனர். புதுக் குளம் மகா வித்தியாலயத்தில் 2 ஆயிரம் வரையான தடுப்பூசி போடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ப-110)

# 170 பேருக்கு பி.சி.ஆர். 35 பேருக்கு தொற்று

## தாழ்வுப்பாடு கிராமத்தை தனிமைப்படுத்த முடிவு

**மன்னார், ஓக.1**

**மன்னார் தாழ்வுபாடு கிராம அலுவலர் பிரிவில் ஒரே நாளில் 35 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர், இதனால் அந்தக் கிராமத்தை தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மன்னார் சுகாதார தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு மருத்துவ அதிகாரி சுதாகர் கதிர்காமநாதன் தெரிவித்தார்**

அவர் மேலும் தெரிவிக்கையில்; மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட ஆயிரத்து 200 பி.சி.ஆர். பரிசோதனைகளில் மன்னார் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவான தாழ்வுப்பாடு கிராமத்தில் இருந்து பெறப்பட்ட 170 மாதிரிகளில் 35 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் 35 பேரும் மன்னாரில் மீன் பதனிடும் தொழிற்சாலை ஒன்றில் கடமைபுரிபவர்கள். இது மிகவும் ஆபத்தான நிலையாக உள்ளதால், குறித்த பிரதேசத்தை தனிமைப்படுத்தல் செயற்பாட்டுக்கு உட்படுத்துமாறு தேசிய கொரோனாத் தடுப்பு செயலணிக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. விரைவில் குறித்த பிரதேசம் தனிமைப்படுத்தப்பட்டு அந்த மக்களின் பாதுகாப்பு உறுதிசெய்யப்படும் -என்றார். (ப-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களுக்கான தீர்வு அடுத்த வருடமே

## கூறுகின்றார் அரச திறைசேரியின் செயலாளர்

**கொழும்பு, ஓக. 1**

**நாடு தற்போது முகம்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு கொரோனா வைரஸ் பரவலை மாத்திரம் காரணமாகக் கூறிவிடமுடியாது. கடந்த 3 - 4 வருடங்களாக பொருளாதாரத்தில் பல்வேறு பிரச்சினைகள் காணப்பட்டன. கொரோனா வைரஸ் பரவல் அதனை ஊக்குவிக்கும் ஒரு காரணியாக அமைந்துள்ளது. எனினும், மிகவும் அர்ப்பணிப்புடன் செயலாற்றக்கூடிய புதிய நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவின் கீழ் பொருளாதாரம் மீட்சியடையும் என்று எதிர்பார்க்கின்றோம்.**

இவ்வாறு தெரிவித்திருக்கின்றார், அரச திறைசேரியின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல.

ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்புக் கோரிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு சுமார் 68 பில்லியன் ரூபா தேவைப்படும். இருப்பினும், தற்போதைய நெருக்கடிக்கு மத்தியில் கொவிட் - 19 தடுப்பூசியைக் கொள்வனவு செய்வதற்கும் நிதியை ஒதுக்கவேண்டியிருப்பதனால், அடுத்தவருட வரவு-செலவுத் திட்டத்தில் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடிக்கு மத்தியில் நாட்டின் பொருளாதார நிலைவரம் மற்றும் அதன் முகாமைத்துவம் தொடர்பில் அரச தகவல் திணைக்களத்தின் ஊடாக நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

### வருட இறுதியில் வரவு அதிகரிக்கும்

இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்கள் காலத்தில் கிடைக்கப்பெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தில் குறிப்பிடத்தக்களவான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. வருட இறுதியிலேயே வருமான வரி கிடைக்கப்பெறும் என்பதால், எதிர்வரும் ஆறு மாதங்களின் முடிவில் வருமானத்தில் அதிகரிப்பொன்று ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### தடுப்பூசி ஊடாகவே தொற்றைத் தடுக்கலாம்

அனைத்து மக்களுக்கும் தடுப்பூசியை வழங்குவதன் ஊடாகவே கொவிட் தொற்றை ஓரளவுக்கு சுமுகமான முறையில் கையாளமுடியும். தடுப்பூசி வழங்கலின் ஊடாக கொவிட் 19 இறப்புகளின் எண்ணிக்கையைக் குறைக்க முடிந்தால், அது பொருளாதார மீட்சியை இலகுபடுத்தும்.

### இருப்பு வீழ்ச்சி

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு இருப்பில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி இப்போது பொருளாதாரம் முகங்கொடுத்துள்ள முக்கிய பிரச்சினையாகும். எனவே அந்த இருப்பை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் தொடர்பில் சிந்திக்கவேண்டும். கடன்பெறுவதன் மூலம் இருப்பை அதிகரிக்க முடிந்தாலும், அது நாட்டுக்கு மீண்டும் சுமையையே ஏற்படுத்தும். எனவே ஏற்றுமதிகளை அதிகரிப்பதன் ஊடாக இருப்பை அதிகரிப்பதென்பது சிறந்த விடயமாக அமையும். இருப்பினும் ஒரே இரவில் ஏற்றுமதிகளை அதிகரிக்கமுடியாது.

### ஏற்றுமதி பின்னடைவு

நாட்டுக்கான இறக்குமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அதனால் உள்நாட்டு உற்பத்திகளுக்கு அவசியமான மூலப்பொருள்களைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இவை ஏற்றுமதி நடவடிக்கைகளிலும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளன.

### அலைபேசிக்கு தடையிராது

அத்தியாவசியமற்ற மற்றும் அவசர தேவையற்ற மேலும் சில பொருள்களின் இறக்குமதியையும் இடைநிறுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கியால் முன்வைக்கப்பட்ட பரிந்துரையையடுத்து அலைபேசி, ஏனைய இலத்திரனியல் உபகரணங்கள் தடைசெய்யப்படுமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. எனினும், தற்போதைய சூழ்நிலையில், கல்வி உள்ளிட்ட அனைத்து செயற்பாடுகளும் இணையவழியிலேயே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனவே மேற்குறிப்பிட்ட இலத்திரனியல் உபகரணங்கள் தடைசெய்யப்படுவதற்கான வாய்ப்பு இல்லை.

**கேள்வி** : சர்வதேச தரப்படுத்தல் நிறுவனங்களின் தரப்படுத்தலால் இலங்கையின் பொருளாதாரத்தில் பின்னடைவு வெளிப்படுத்தப்பட்டுள்ளது அல்லவா?

**பதில்** : இவற்றில் பெரும்பாலானவை நாடுகளின் வர்த்தகக் கடன்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற தரப்படுத்தலாகும். அதே போன்று இவற்றில் சில தரப்படுத்தல்கள் பக்கச்சார்பானவையாக உள்ளன. எனினும், பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான செயற்றிட்டத்தை வகுத்து, தரப்படுத்தல்களை முறியடிப்போம்.

### பணம் அச்சிட காரணம்

**கேள்வி**: அண்மையில் ஒரே நாளில் பெருமளவான பணம் அச்சிடப்பட்டமை தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் கூறப்படுகின்றன?

**பதில்**:கடன்களை மீளச் செலுத்துவதற்கான டொலர் அரசதிறைசேரியிடம் இல்லாத நிலையில், அதனை மத்திய வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளவேண்டிய நிலையேற்படும். அவ்வாறு மத்திய வங்கியிடமிருந்து டொலர் பெறும்போது அதற்கு மாற்றீடாக ரூபாவைச் செலுத்த வேண்டும். எனினும், அந்தப் பணம் மீண்டும் கொடுக்கல், வாங்கல்களுக்குப் பயன்படுத்தப்படாது. எனவே அவ்வாறு அச்சிடப்பட்ட நிதியால் பணவீக்கத்தில் எவ்வித தாக்கங்களும் ஏற்படாது.

**கேள்வி** : ஆசிரியர்களால் முன்வைக்கப்பட்டுள்ள சம்பள அதிகரிப்பு தொடர்பான கோரிக்கையை நடைமுறைப்படுத்துவதற்குப் போதுமான நிதி அரசிடம் இருக்கின்றதா?

**பதில்** : ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்புக் கோரிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு சுமார் 68 பில்லியன் ரூபா தேவைப்படும். தற்போதைய நெருக்கடிக்கு மத்தியில் கொவிட் - 19 தடுப்பூசியைக் கொள்வனவு செய்வதற்கும் நிதியை ஒதுக்கவேண்டியிருப்பதனால், ஆசிரியர்களுக்கான சம்பள அதிகரிப்புக்கு நிதிப்பற்றாக்குறை ஏற்படக்கூடும். எனவே அடுத்த வருட வரவு செலவுத் திட்டத்தில் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அரச கூறியுள்ளது - என்றார். (த-இ)

# விபத்தில் நடிகை சாவு



கொழும்பு, ஓக. 1

நுவரெலியா தலவாக்கலை, லிந்துலை நகரத்துக்கு அருகாமையில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கையின் பிரபல நடிகையான பிரென்சிஸ்கு ஹட்டிகே தெரஸ் ஹயசிந்த விஜயரத்ன (வயது 75) உயிரிழந்துள்ளார்.

இவர் பயணம் மேற்கொண்ட வான், லிந்துலை நகரத்துக்கு அருகில் பிரதான வீதியை விட்டுவிலகி சுமார் 300 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்கு உள்ளாகியுள்ளது என்று லிந்துலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் வானை செலுத்தி சென்ற சாரதிக்கு ஏற்பட்ட தூக்கக் கலக்கமே விபத்துக்கு காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த விபத்து தொடர்பாக வான் சாரதியை கைதுசெய்துள்ள லிந்துலை பொலிஸார், அவரை நுவரெலியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன், விபத்தில் உயிரிழந்த நடிகையின் சடலம் கண்டெடுக்கப்பட்டு, உடற்கூற்றுப் பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (த-இ)

# நாளாந்த வீதி விபத்துகளின் சாவுகள் 12 ஆக அதிகரிப்பு

## பொலிஸ் பேச்சாளர் எச்சரிக்கை



கொழும்பு, ஓக. 1

வீதி விபத்துகள் காரணமாக நேற்றுக்காலை 6 மணி வரையான 24 மணித்தியாலங்களில் 12 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தநிலைமையானது வழமைக்கு புறம்பாக காணப்படுவதுடன், பொதுமக்கள் இது தொடர்பில் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

வீதி விபத்துகள் காரணமாக உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இந்தநிலையில் நேற்றுக்காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள்களில் பயணித்த 7 பேரும், மூன்று பாதசாரதிகளும், வேறு வாகனங்களில் பயணித்த இருவரும் உயிரிழந்தவர்களில் உள்ளடங்குகின்றனர்.

வீதி விபத்துகள் காரணமாக நாள் ஒன்றுக்கு 8 பேர் வரையிலேயே உயிரிழந்து வந்தநிலையில், தற்போது 12 உயிரிழப்புகள்வரை அதிகரித்துள்ளது. இந்த நிலைமை வழமைக்கு புறம்பானதாகும். அதனை தடுப்பதற்கு அனைவரும் முயற்சிக்க வேண்டும்.

இதேவேளை, வாகன சாரதிகளின் கவனக்குறைவு மற்றும் அக்கறையின்மை காரணமாகவே இவ்வாறு அதிகளவான விபத்துகள் பதிவாகி வருகின்றன.

வீதிகளில் போக்குவரத்து நடவடிக்கையில் ஈடுபடும் வாகன சாரதிகள் மட்டுமன்றி பயணிகளும் விபத்துகளை தடுப்பதற்காக ஒத்துழைப்பு வழங்கி செயற்பட வேண்டும்.

இந்தநிலையில் இரவு வேளைகளில் வாகனங்களை செலுத்தும் சாரதிகள் தூக்க மயக்கத்திலோ, சோர்வாகவோ இருந்தால் வாகனங்களை செலுத்துவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். வீதி விபத்துகளை தடுப்பதற்காக பொலிஸார் தொடர்ந்தும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், சாரதிகள் மற்றும் பயணிகள் பொலிஸாரின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி செயற்பட வேண்டும் - என்றார். (த-இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org







# 82ஆவது ஆண்டில் கால்பதிக்கும் இலங்கை வங்கி




இலங்கையின் வங்கித் துறையையும் நிதித் துறையையும் தலைமைதாங்கி வழிநடத்தி வரும் "தேசத்தின் வங்கியாளரான" இலங்கை வங்கி தனது வெற்றிப் பயணத்தில் 82 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. காலாதி காலமாக ஈடிணையற்ற செயற்றிறன் கொண்ட வங்கி என்ற பெருமையைக் கொண்டுள்ள இலங்கை வங்கி வெளிநாட்டுச் சந்தைகளில் தன் ஊடுருவலை விரிவுபடுத்தியவாறே முற்போக்கானதும் வலுவானதும் காலத்தால் முந்தியதுமான நிதிச் சேவைகளை நாட்டுக்காற்றி வருகிறது.

1938ஆம் ஆண்டு 'இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இலங்கை வங்கி, ஆளுநர் சேர். அண்ட்ரு கல்டெகோட் அவர்களால் இன்று சேர். பரோன் ஜெயதிலக்க மாவத்தை என்று அறியப்படும் இல. 41 பிரிஸ்ரல் வீதியில் 1939ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை வங்கியின் தலைவர் திரு. காஞ்சனா ரத்வத்தே அவர்கள் இவ்வளவு ஆண்டு காலமும் வங்கி கண்டுவரும் மகத்தான வெற்றியை நினைவுகூருகையில் "ஒரு பொறுப்புள்ள பெருநிறுவனமாக அதன் அனைத்து விதமான கடமைகளையும் கடப்பாடுகளையும் ஆற்ற வேண்டியதன் அவசியத்தை நன்குணர்ந்த இலங்கை வங்கி கடந்த 82 ஆண்டுகளாக நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக்குத் தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வருகிறது. வெறுமனே மக்களின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் மக்களின் மனதை வென்றெடுக்கவோ அவர்களது குடும்பத்தில் ஒருவராகவோ முடியாது. இலங்கை வங்கியோ துல்லியமான நோக்கும் குறிக்கோளும் கொண்டு செயற்பட்டமையால் எந்தத் தயக்கமும் இல்லாமல் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு இலங்கை மக்களின் மனதில் வளர்ந்து அவர்களின் ஆன்மாவரை ஆழமாக வேரூன்றியுள்ளது.

வங்கியின் நீண்ட நெடிய வரலாறு ஒவ்வொரு தசாப்தத்திலும் அது எவ்வாறு மக்களின் விருப்பத் தேர்வாக மாறியது என்பதற்கு மீண்டும் மீண்டும் சான்று பகர்கிறது. இலங்கை மக்கள் எம்மீது கொண்ட அன்பையும் எமக்களிக்கும் ஆதரவையும் நாங்கள் பெரிதும் மதிக்கிறோம். இந்த அன்பும் ஆதரவுமே எம்மை இவ்வளவு காலமாக வலுவுடன் நிலைகொள்ள வைத்தது. பொதுமக்களுக்குச் சேவை செய்வதில் வங்கி காட்டிய அர்ப்பணிப்பும் இன்னல்மிகு சூழ்நிலைகளிலும் துணிச்சலுடன் மக்களின் தோழொடு தோழ் நின்றமையும் வங்கி இத்துணை பங்கீடுபாட்டாளர்களை ஈட்டக் காலாயிருந்தன. இதுவே எமது பலம். ஆண்டாண்டு காலத்துக்கும் இப்பலம் பெருகிக்கொண்டேதான் செல்லும் " என்றார். இலங்கையின் வங்கி வரலாற்றில் இலங்கை வங்கி கறைபடியாப் பக்கங்களைக் கொண்டுள்ளமையை நினைவு கூர்ந்த பொது முகாமையாளர் திரு. டி. பி. கே. குணசேகர, "எந்த விதமான வரலாற்றுக் கறைகளும் இல்லாமல் 82 ஆண்டுகளை எட்டுவதே வங்கியின் வெற்றியின் இரகசியத்தைக் கூறிவிடுகிறது. சூழல் சார் தடைகள், பிற எதிர்பாராத் தடைகள் என்பவற்றின் மத்தியில் துவண்டுவிடாது பயணிப்பது என்பது நெருப்பாற்றை நீந்திக் கடப்பதற்கு ஒப்பாகும். அந்த வகையில் இதுவோர் பன்னெடுங்கால வெற்றிப் பயணமாகும். மக்களுக்குச் சேவை செய்வதற்காக முதன் முதலில் இலங்கை வங்கியை நிறுவிய வங்கியின் முன்னோடிகளின் முயற்சியையும், நாட்டின் சிறந்த செயற்திறன் மிக்க வங்கியாகவும், ஏனைய வங்கிகளுக்கெல்லாம் முன்மாதிரியா கவும் அதனைக் கட்டியெழுப்புவதற்கான அவர்களின் தூரநோக்கையும் நன்றியுடன் நினைவுகூரும் நேரம் இதுவாகும். இலங்கையின் முன்னணி அரச வங்கியான இலங்கை வங்கி, அரசாங்கம் தொடங்கியுள்ள பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளில் எதிர்காலத்திலும் தொடர்ந்து பெரும் பங்காற்றும் என்று நான் நம்புகிறேன்" என்று குறிப்பிட்டார்.

இலங்கை வங்கியானது கடந்த 82 ஆண்டுகளாக, வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட வங்கித் தீர்வுகளை வழங்குவதன் மூலம் நாட்டின் நம்பிக்கைக்கும் அபிலாசைகளுக்கும் உயிரூட்டும் சக்திமுதலாகத் தன்னை நிலைநிறுத்தியுள்ளது. இலங்கை முழுவதுமாக 2000 வாடிக்கையாளர் சேவை மையங்களை எட்டியுள்ள வங்கி, சென்னை, மாலே, ஹூங்ஹூமாலே, சீஷெல்ஸ் முதலான நகரங்கள் வரை தன் கிளைகளைப் பரப்பியுள்ளதோடு இலண்டன் நகரில் ஓர் முழுநேர வங்கித் துணைநிறுவனம் ஒன்றையும் நடாத்தி வருகிறது. இந்த ஆண்டுகளில் மக்களின் அனைத்துத் தேவைகளுக்குமான நிதித் தீர்வுகளை வழங்கும் தேசத்தின் முதன்மை வங்கியாக உயர்ந்து நிற்பதோடு பல உள்ளூர், சர்வதேச அரங்குகளின் அங்கீகாரத்தையும் வென்றுள்ளது.

இலங்கையில் மிகவும் புகழ்பூத்த நிறுவனங்களுள் ஒரே ஒரு அரச நிறுவனமாக ஓங்கி உயர்ந்து நிற்கும் இலங்கை வங்கியின் சாதனைக்கு ஈடு இணையே கிடையாது எனலாம். வங்கியின் சாதனைகள் பிராந்தியத்தின் வங்கித் துறையில் அது எட்டியுள்ள உயரங்களைப் பறைசாற்றுகின்றன.

இங்கிலாந்தில் இருந்து வெளியாகும் 'த பாங்கர்ஸ்' எனும் புகழ்பெற்ற சிற்றிதழ் 2020ஆம் ஆண்டும் உலகின் தலைசிறந்த 1000 வங்கிகளுள் ஒரு வங்கியாகவும் இலங்கையிலுள்ள வங்கிகளில் முதல்தர வங்கியாகவும் இலங்கை வங்கியைத் தெரிவு செய்தது. பெருநிறுவன மூலோபாயத்தில் நிலைத்தன்மையின் அவசியத்தைத் திரும்பத் திரும்பப் புகுத்துவது தொழிற்றுறையில் மிகவும் மெச்சத்தக்க பெருஞ் சாதனையாகும். பிராண்ட் பைனான்ஸ் லங்கா, மீடியா சேவீசஸ் பப்ளிகேஷன்ஸ் ஆகிய இரண்டு நிறுவனங்களும் இணைந்து நாட்டின் முதற்தர வங்கியியல் நாமமாக இலங்கை வங்கியைத் தெரிவுசெய்தன.

வங்கியின் வணிகக்குறி மதிப்பு முந்தைய ஆண்டை விட 12% வளர்ச்சி பெற்று 53 பில்லியன் ரூபாயாக இருந்தது. கடந்த 13 ஆண்டுகளாக வங்கி இந்நிலையைத் தக்க வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 2020ஆம் ஆண்டு வரிக்கு முந்தைய இலாபமாக 23.6 பில்லியன் ரூபாய் என்ற ஆகக்கூடிய தொழிற்றுறை இலாபத்தையும் 3 டிரில்லியன் சொத்துக்களையும் எட்டியமையும் 2.8 பில்லியனுக்கும் அதிகமான உள்வரும் பண அனுப்புதல்கள் பதிவானமையும் வங்கியின் ஈடு இணையற்ற வெற்றிகளில் சில.

கொவிட் 19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட பெருநிறுவனத் துறை வணிகத்தை மேம்படுத்தி மறுசீரமைப்பதையும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் தடுப்பூசித் திட்டத்திற்கு ஆதரவாக தடுப்பூசி இறக்குமதி செய்வதற்கு உதவிகளை வழங்குவதையும் இலக்காகக் கொண்டு செயற்பட்டு வரும் வணிக மறுசீரமைப்பு மற்றும் மீளெழுச்சிப் பிரிவு இலங்கை வங்கி வங்கியியற் துறைக்களித்த அறிமுகங்களில் இன்னொன்று. இவற்றுடன், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சித் துறையில் குறிப்பிட்டளவு இலாபத்தை ஈட்டி அதன் மூலம் தேசிய பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களித்து வரும் வங்கியின் 'திவி உதான ' கடன் திட்டத்தின்கீழ் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சியாளர்களுடன் ஆகச்சிறிய தொழில் முயற்சியாளர்களும் தமது கனவுகளை நனவாக்கிக் கொண்டு அதன்மூலம் நாட்டின் பொருளாதாரத்துக்கும் பங்களிக்கும் வகையில் சிறப்பு அபிவிருத்திக் கடன்கள் வழங்கப்பட்டன. இக்கடன் திட்டம் பின்னர் 'சௌபாக்கியா' தொழிற்படு மூலதனக் கடன்திட்டத்தின்கீழ் மேலும் மெருகேற்றப்பட்டு மொத்தமாக 39 பில்லியன் ரூபாய்க்கும் அதிகமான கடன்கள் வழங்கப்பட்டதோடு 800 பில்லியன் ரூபாய்க்கும் அதிகமான கடன் தவணைத் தள்ளுபடிகளும் வழங்கப்பட்டன.

இந்த வகையில் நாட்டின் நிதி மூலமாக விளங்கும் இலங்கை வங்கி பல ஆண்டுகளாக அதற்குப் பெருமையையும் வெற்றிகளையும் ஈட்டித்தந்த தனது வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட வணிகத் தத்துவத்தின் மீது பெருநம்பிக்கை வைத்துள்ளது. பன்நெடுங் காலமாக நாட்டுக்கு ஆற்றிவரும் சேவை குறித்து மனநிறைவு கொள்ளும் இலங்கை வங்கி இனிவரும் ஆண்டுகளிலும் அதன் செயற்திறனை இன்னும் மேம்படுத்துவதற்கு உறுதி பூண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடுமையான நோய் நிலைமைகளை டெல்டா கொவிட் திரிபு ஏற்படுத்துகிறது

## பெரியம்மை போல எளிதில் பரவக்கூடியது என்றும் அமெரிக்க நோய்க் கட்டுப்பாடு மையம் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஓக. 1

**டெல்டா கொவிட் திரிபானது அனைத்து வைரஸ்களை விடவும் கடுமையான நோய் நிலைமைகளை ஏற்படுத்துவதுடன், பெரியம்மை போல எளிதில் பரவக்கூடியது என்றும் அமெரிக்க நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையத்தின் ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.**

பகிரங்கப்படுத்தப்படாத குறித்த ஆய்வறிக்கையில் நகலொன்றை நியூயோர்க் டைம்ஸ் வெளியிட்டுள்ளது. தடுப்பூசி செலுத்திக்கொள்ளாத நபர்களை போன்றே முழுமையாக தடுப்பூசி செலுத்திக் கொண்ட நபர்களாலும் இந்த டெல்டா வைரஸ் பரவும் ஆற்றல் காணப்படுகின்றது என்று அந்த அறிக்கை கூறுகிறது.

தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்களின் மூக்கிலும் தொண்டையிலும், தடுப்பூசி செலுத்திக்கொள்ளாதவர்களிடையே காணப்படும் அதே அளவு வைரஸை காவிச் செல்வதால் இந்த நிலைமை ஏற்படுவதாக சி.டி.சி. எனப்படும் அமெரிக்க நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையத்தின் பணிப்பாளர் மருத்துவர் ரோசெல் வலென்ஸ்கி முன் வைத்துள்ள அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


டெல்டா கொவிட் வைரஸ் திரிபானது சார்ஸ், அம்மை, எபோலா, பெரியம்மை ஆகியவற்றைவிட அதிகமாக பரவுகிறது.

இந்தியாவில் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்ட பி.1.617.2 என பெயரிடப்பட்டுள்ள டெல்டா கொவிட் திரிபு வைரஸுக்கு எதிரான தடுப்பு நடவடிக்கை மேலும் வலுவடைந்துள்ளது என்று அமெரிக்க உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முழுமையாக தடுப்பூசி செலுத்திக்கொண்ட சுமார் 35 ஆயிரம் அமெரிக்கர்கள் டெல்டா கொவிட் திரிபால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இருப்பினும், கொவிட் தொற்றால் ஏற்படக்கூடிய பாரதூரமான நோய் நிலைகளில் 90 சதவீதத்தை கொவிட் தடுப்பூசிகள் கட்டுப்படுத்துகின்றன - என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-இ)





# கூட்டுறவுச் சங்கங்கள் முல்லையில் கலந்தாய்வு

முல்லைத்தீவு, ஓக.1

முல்லைத்தீவு மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் 50 சிறு கைத் தொழிற்சாலைத் திட்டம் மற்றும் அரிசியாலை கொண்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களுடனான கலந்துரையாடலானது முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் கடந்த வியாழக்கிழமை நண்பகல் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அரிசி உற்பத்தி அதிகமாக இருப்பதால் அதனை விரைவாக சந்தைப்படுத்துவதற்காக மாகாணத்தின் ஏனைய சங்கங்களுடன் சந்தைப்படுத்துதல் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல் தொடர்பாக இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

கொரோனா பேரிடர் காலத்தில் நிவாரணப் பொதிகள் வழங்கும் திட்டத்தை முல்லைத்தீவு மாவட்டச் செயலர் கூட்டுறவுச் சங்கங்களூடாக மேற்கொண்டமை மற்றும் அதனால் கூட்டுறவுச் சங்கங்கள் நன்மையடைந்தமையை சுட்டிக்காட்டிய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் குறித்த பொருள்களை விரைவாக விநியோகித்த கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார். ஐம்பது சிறு கைத்தொழில் சாலைகள் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு கிடைக்கப்பெற்ற 13 திட்டங்களின் தற்போதைய நிலைப்பாடு தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளரால் விளக்கமளிக்கப்பட்டு துரிதமாக முன்னேற்றமடைய மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டது. கூட்டுறவாளர்களின் தேவைப்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கேட்டறிந்தார்.

இக் கலந்துரையாடலில் வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான மு.நந்தகோபாலன், முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.சிவகுமார், மாவட்ட கூட்டுறவு உத்தியோகத்தர் ஜெயந்தன், கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சமாசங்களின் தலைவர், செயலாளர்கள், பிரதிநிதிகள் என பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டனர். (ப-19)



# 93 பேர் கைது

கொழும்பு, ஓக. 1

தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறும் வகையில் செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் 93 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று சனிக்கிழமை காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதி தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் 52 ஆயிரத்து 719 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன. (த-இ)

# சுற்றுலாத்துறையை கட்டியெழுப்பத் தயார்

*நிதி அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 1



உலகம் எதிர்கொண்டுள்ள வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் சுற்றுலாத்துறை சேவை கைத்தொழிலை கட்டியெழுப்புவதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அரசு தயாராக உள்ளது என நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை சேவை கைத்தொழிலுடன் தொடர்புடைய ஹொட்டல் உரிமையாளர்கள், விமான சேவை நிறுவனத்தினருடன் நிதியமைச்சில் நேற்று முனம் நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை சேவையை கட்டியெழுப்ப பிற நாடுகள் நிவாரணப் பொதி முறைமையை சுற்றுலாத்துறை சேவையில் அறிமுகப்படுத்தியுள்ளன.

இவ்வாறான செயற்றிட்டங்கள் குறித்து அரசு கவனம் செலுத்தியுள்ளது. தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையிலிருந்து மீள்வதற்கு அரசு பொறுப்புடன் செயற்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறை சேவை கைத்தொழிலை மீள கட்டியெழுப்ப அரசு முன்னெடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் சேவை துறையினர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்- என்றும் பஸில் மேலும் தெரிவித்தார். (த-இ)

# தென்மராட்சியில் ஓர் இடத்திலேயே இன்று தடுப்பூசி

சாவகச்சேரி, ஓக. 1

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு இன்று சாவகச்சேரி நகரசபை பொன் விழா மண்டபத்தில் மட்டும் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்படும் என்று சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

அரச திணைக்கள அலுவலகங்களில் கடமையாற்றும் அனைத்து அலுவலர்களையும் நாளை கடமைக்கு சமூகமளிக்க வேண்டும் என்று அரசு அறிவித்துள்ள நிலையில் இன்று ஒரு நிலையத்தில் மட்டும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# மசகு எண்ணெய் விலை 2 சதவீதத்தால் அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 1

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலைகளில் வார இறுதிகளில் சிறியளவான வீழ்ச்சி காணப்பட்ட போதிலும், கடந்த வார நாள்களில் 2 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்று சர்வதேச சந்தை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் விலை தற்போது 75 அமெரிக்க டொலரின் விளிம்பில் உள்ளது.

நிரம்பலுக்கு அதிகமான கேள்வி, தடுப்பூசி மூலம் கொரோனாத் தொற்றுநோயின் தாக்கத்தை குறைப்பதற்கான நடவடிக்கை போன்றவை இவ்வாறு விலை உயர்வுக்கு காரணமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

# சட்டவரைவை ஆராய சு.கவும் குழு நியமிப்பு

கொழும்பு, ஓக. 1

உத்தேச கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்ட வரைவு தொடர்பில் ஆராய்வதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விசேட குழுவொன்றை நியமித்துள்ளது.

அந்தக்குழுவின் பரிந்துரைக்கு ஏற்பவே குறித்த சட்டவரைவு தொடர்பில் சுதந்திரக்கட்சி அதன் தீர்மானங்களை எடுக்கும் என்று கட்சித் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

காலியில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களுடனான கட்சிக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டவரைவு தொடர்பில் நாடாளுமன்ற குழுக் கூட்டத்திலும் மத்திய குழுக் கூட்டத்திலும் கலந்துரையாடப்பட்டது. அதனை ஆராய குழுவொன்றை நியமித்துள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒட்டுசுட்டானில் சட்டவிரோத மணல் அகழ்வு:
# ஊடகங்களைப் புறக்கணித்த மஸ்தான் எம்.பி?



**முல்லைத்தீவு, ஓக. 1**

**மணல், கிரவல் அகழ்வுகள் குறித்து ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் செய்தி சேகரிப்பத்கு ஊடகவியலாளர்களுக்கு தடை விதிக்கப்பட்டமை ஊடகவியலாளர்கள் மத்தியில் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோத மணல் மற்றும் கிரவல் அகழ்வுகளை தடுத்தல் அதேபோன்று சட்ட ரீதியாக மேற்கொள்ளப்படுகின்ற மணல் மற்றும் கிரவல் அகழ்வுகளை முறையான பொறிமுறை ஒன்றின் மூலம் விநியோகித்தல் போன்ற செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் நோக்கில் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களுடனான கலந்துரையாடலொன்று கடந்த செவ்வாய்க்கிழமை ஒட்டுசுட்டான் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் அபிவிருத்தி குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் இடம்பெற்றுள்ளது. வழமையாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தானின் நிகழ்வுகள் அனைத்துக்கும் முல்லைத்தீவின் அனைத்து ஊடகங்களுக்கும் அழைப்பு விடுக்கப்படுகின்ற நிலையில் முல்லையில் பெரும் பிரச்சினையாகக் காணப்படும் மணல், கிரவல் அகழ்வு தொடர்பான விடயம் தொடர்பில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலுக்கு அழைக்கப்படாமை குறித்து ஊடகவியலாளர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக மாவட்டத்தில் இடம்பெறும் காணி அபகரிப்புக்கள், இயற்கை வள அழிப்புகள் தொடர்பில் ஊடகங்கள் வெளிப்படுத்தி வரும் நிலையில் இந்த விடயங்கள் தொடர்பாக இடம்பெறும் இவ்வாறான கலந்துரையாடல்கள் காணி பயன்பாட்டுக்குழுக் கூட்டங்களில் ஊடகங்கள் புறக்கணிக்கப்படுவது வெளிப்படைத்தன்மையாக குறித்த விடயங்கள் நடைபெறாமையை வெளிக்காட்டுவதாகவே அமைந்துள்ளது என்று ஊடகவியலாளர்கள் தெரிவித்தனர். (ப-246)



## பல நூறு ஆண்டுகளுக்குப் பின் இலங்கைக்கு கிடைத்த சொத்து

கொழும்பு, ஓக. 1

**இரத்தினபுரியில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பெரிய நீலநிற மாணிக்கக்கல், பலநூறு ஆண்டுகளின் பின்னர் இலங்கைக்குக் கிடைத்த அரிய வகைச் சொத்து என்று இரத்தினகல் மற்றும் தங்க ஆபரண அதிகார சபை தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அதிகார சபையின் தலைவர் திலக் வீரசிங்க தெரிவிக்கையில்,

இந்த மாணிக்கக்கல்லை உலகிலுள்ள கோடீஸ்வரர்களின் கலைப்பொருள்களுடன் சேர்க்கப்பட வேண்டிய ஒரு பொருள். இந்த மாணிக்கத்தின் பெறுமதி குறித்து அறியாதவர்களால் வெளியிடப்படும் தகவல்களைக் கருத்தில்கொள்ள வேண்டாம். இவ்வளவு அதிக நிறையுடனான நீலநிற மாணிக்கக்கல் உலகிலேயே ஒன்று தான் உள்ளது.

இந்தக் கல்லை வெட்டி ஆபரணங்களுக்குள் பொருத்தி அணிவதனை விடவும், ஆய்வு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்த வேண்டும்.

குறித்த நீலக்கல்லை பல கோடீஸ்வரர்கள் யானைத் தந்தம் போன்ற கலைப்பொருள்களுடன் பாதுகாக்கவே எதிர்பார்த்துள்ளனர். இது பலநூறு ஆண்டுகளின் பின்னர் கிடைத்த அரிய வகைச் சொத்து என்பதால், அவ்வாறான பொருள்களைச் சேகரிப்பவர்களுக்கு இது மிகவும் பெறுமதியானது- என்றார். (ஒ.4)

## சினோவெக் கொள்வனவு இன்னமும் முடிவில்லை

கொழும்பு, ஓக. 1

சினோவெக் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்வதற்கு இன்னமும் தீர்மானம் எடுக்கவில்லை என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். அவசர தேவைகளுக்கு சினோவெக் தடுப்பூசியைப் பயன்படுத்த முடியும் என்று அனுமதி வழங்கப்பட்டதன் மூலம், அதனை கொள்வனவு செய்ய வேண்டுமென்று அர்த்தப்படாது .

பிராந்திய வலயத்தில் சீனா கொண்டுள்ள கரிசனையை காயப்படுத்தும் நோக்கில் சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சில வெளிநாட்டுச் சக்திகள் சினோவெக் தடுப்பூசி தொடர்பில் இலங்கையில் போலிச் செய்திகளைப் பரப்பி வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)



## துறைசார் பயிற்சியாளர்கள் நியமனம்

சாவகச்சேரி, ஓக. 1

பனை அபிவிருத்திச் சபையின் ஆலோசகர்களாக உள்ளவர்கள் துறைசார் பயிற்சியாளர்களாக பனை தென்னை, கித்துள். அபிவிருத்தி. ராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோவால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் பனை அபிவிருத்தி சபையின் ஆலோசகராக உள்ள தென்மராட்சி கொத்தணித்தலைவர். க.துரைசிங்கம் பயிற்சியாளராகத் தெரிவுசெய்யப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. (ப-9)

## லஞ்ச ஊழல் வழக்கிலிருந்து சரண குணவர்தன விடுவிப்பு

கொழும்பு, ஓக.1

லஞ்ச ஊழல் திணைக்களத்தால் தாக்கல்செய்யப்பட்ட அனைத்து வழக்குகளில் இருந்தும், முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்தன விடுவிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த 8 வழக்குகளில் இருந்தும், அவரை விடுவிக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் உத்தரவிட்டுள்ளார். குறித்த வழக்கு கொழும்பு பிரதான நீதவான் புத்திக சீ.ராகல முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கை தாக்கல்செய்த சந்தர்ப்பத்தில் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர்கள் மூவர், உரிய ஆவணங்களை முன்வைக்காத காரணத்தால் குறித்த வழக்கைத் தொடர்ந்து முன்னெடுத்து செல்வது கடினமான விடயம் என்று லஞ்ச ஊழல் ஆணைக்குழு சார்பில் முன்னிலையான உதவிப் பணிப்பாளர் அசித அன்டனி நீதிமன்றில் தெரிவித்தார்.

எனவே வழக்கை தொடர்ந்து நடத்திச்செல்வது கடினமாயின் பிரதிவாதியை விடுதலை செய்யுமாறு சரண குணவர்தன சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தார்.

குறித்த விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்த நீதிவான், சரண குணவர்தனவை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார். (ஒ.4)




## உயிரிழந்த சிறுமிக்கு நீதிகோரி வாழைச்சேனையில் போராட்டம்

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியூதினின் வீட்டில் பணிப்பெண்ணாக இருந்த ஹிஷாலினியின் உயிரிழப்புக்கு நீதிகோரி வாழைச்சேனையில் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் கல்குடா தொகுதி மகளிர் அணியினரால் வாழைச்சேனை பிரதேச செயலகம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட குறித்த போராட்டம் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள சுற்று வட்டத்தில் நிறைவடைந்தது.

" காமக்கொடூரனை சட்டத்தில் இருந்து தப்பிக்க விடாதே, சட்டத்தை வலிமைப்படுத்து, எமது நீதிக்கான பயணம் எப்போதும் ஓயாது, அறிக்கையில் அரசியல் வேண்டாம் சிறுமியின் அழுகுரலுக்கு நீதி வேண்டும், சிறுவர் பாதுகாப்பை உறுதிப்படுத்து, மக்கள் பிரதிநிதி சிறுமியைச் சீரழிப்பதா, சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை நிறுத்து, விசாரணையைத் துரிதப்படுத்து, வீட்டுவேலை செய்வோரைப் பதிவு செய்" போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை தாங்கியவாறு கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெண்கலத்தையும் இழந்தார் நொவக்

டோக்கியோ, ஓக. 1

டோக்கியோ ஒலிம்பிக் தொடரில் ஆண்கள் ஒற்றையர் ரென்னிஸ் பிரிவில் நொவக் ஜோகோவிக் வெண்கலப் பதக்கத்தையும் இழந்தார்.

ரென்னிஸ் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளவரும் சேர்பியாவைப் பிரதிநிதித்துவம் செய்தவருமான ஜோகோவிக்கை எதிர்த்து ஸ்பெய்ன் வீரர் கரினோ மோதினார். முதலாவது செற்றை 6:4 என்று கைப்பற்றிய கரினோ இரண்டாவது செற்றை 6:7 என்று இழந்தார். வெற்றியாளரைத் தீர்மானிக்கும் இறுதி செற்றில் 6:3 என்று வெற்றிபெற்று வெண்கலப் பதக்கத்தை வென்றார் கரினோ. (ம)

# நேற்று இரவு வரை கொரோனா 2,150!

கொழும்பு, ஓக. 1

இலங்கையில் நேற்று 2 ஆயிரத்து 150 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 8 ஆயிரத்து 812ஆக எகிறியுள்ளது. அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,906 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 77 ஆயிரத்து 118ஆக அதிகரித்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (22)

## மரண அறிவித்தல்



### இராமநாதன் மங்கையர்கரசி

கைதடி நுணாவில் சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **இராமநாதன் மங்கையர்கரசி** அவர்கள் நேற்று (31.07.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா லட்சுமிபிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் சிவப்பிரகாசம் தையல் நாயகி தம்பதிகளின் மருமகளும் இராமநாதனின் அன்பு மனைவியும் , தேனுகா மதியுகன் ஆகியோரின் அன்பு தாயாரும் நிரோயனின் அன்புமாமியாரும் அகல்ஜன், அஸ்விகன், அகிசனின் அன்புப்பேர்த்தியும் பரராஜசிங்கம் - இராஜயோகவதி, சிவசோதி-தவமணி ஆகியோரின் சகோதரியும் சிவராசரத்தினம், செல்வரத்தினம், இராஜேஸ்வரி, சுந்தர்லிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2021) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 01.00 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

0016 477 059 347
0777 350 256

தகவல் :
குடும்பத்தினர்

# நாடு மீண்டும் முடங்கக்கூடும்

## சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 1

'நாட்டில் தற்போது மீண்டும் நாளாந்தம் இனங்காணப்படும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற நிலையில் நாட்டை முடக்கினால் மாத்திரமே தொற்று பரவல் தீவிரமடைவதைத் தடுக்க முடியும் என்றால், நிச்சயம் மீண்டும் முடக்கத்துக்குச் செல்ல வேண்டியேற்படும் இவ்வாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

ஆனால், வைரஸ் பரவலுக்கு அஞ்சி பின்வாங்காமல் அடிப்படை சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி சகலரும் பொறுப்புடன் செயற்பட்டால் இந்த நிலைமையிலிருந்து மீள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சமகால கொரோனா நிலைமைகள் குறித்து மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

'தற்போது கொரோனாத் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளமைக்கான காரணம் டெல்டா வைரஸ் என்று உறுதிப்படுத்தப்படவில்லை. அவ்வாறு கூறுவது கடினமாகும். காரணம் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட சகலருக்கும் டெல்டா தொற்று காணப்படுகிறதா என்பதை இனங்காண்பதற்கான மரபணுவின் ஒழுங்கமைப்பை அறியும் பரிசோதனை செய்வது நடைமுறை சாத்தியமற்றது. எவ்வாறிருப்பினும் தற்போது வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் தொற்றாளர்களில் பெருமளவானோருக்கு தீவிரமான சிகிச்சை அறிகுறிகள் காணப்படுவதோடு, ஒட்சிசன் தேவையுடையோராகவும் உள்ளனர். எனவே, கொரோனா பாதிப்புக்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு ஒவ்வொருவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்' என்றார். தற்போது பல பிரதேசங்களிலும் டெல்டா தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ள நிலையில், கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பில் டெல்டா தாக்கம் செலுத்தக்கூடும் என்றார். (ம-22)

## மரண அறிவித்தல்

தோற்றம்
07 . 07 . 1966



மறைவு
31 . 07 . 2021

### செல்வி மாலதி இரத்தினம்

வரியப்புலம் சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **செல்வி மாலதி இரத்தினம்** அவர்கள் நேற்று (31.07.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் குமுதினி, சுனிதா (கனடா), சுகந்தி(நோர்வே),பிரதீஸ்(ஜேர்மனி), ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற வரதராசா, தயாகரன் (கனடா), சுதாகரன் (நோர்வே), நித்தியா (ஜேர்மனி), ஆகியோரின் ஆசை மைத்துனியும் மிதுலா (U.K), கஜானி, கீர்த்தனா (Palmayrah Development Borad), கிருஸ்ணபிரசாந், துவாரகி, அபிஷனா, பிரணாஸ், பிரசாங்கி, லோஜிகா, கனிஷ்கா ஆகியோரின் ஆசை சித்தியும் கபிஸ்ரன், மகிழன் ஆகியோரின் பாசமிகு அத்தையும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்ற பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

வரியப்புலம்
சுன்னாகம்
077 2522 716

தகவல் :
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம்
02 . 04 . 1960



மறைவு
31 . 07 . 2021

### திருமதி கிருஸ்ணசுந்தரம் ரஞ்சிதம்

( சுந்தரம் அன் பிரதர்ஸ் உரிமையாளர் )

நாவலடி வீதி வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் கொட்டடி சீனிவாசகம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்டு தற்பொழுது வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஸ்ணசுந்தரம் ரஞ்சிதம் அவர்கள் நேற்று (31.07.2021) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் துரைராசா - அன்னக்கிளி தம்பதிகளின் பாசமிகு புதல்வியும் அமரர் கிருஸ்ணசுந்தரத்தின் அன்பு மனைவியும் கோவிந்தராஜன் (பிரணவன் - யா/இந்துக் கல்லூரி A/L 2021 - கணித பிரிவு மாணவன்) அன்பு தாயாரும் மனோரஞ்சினி, கௌரிநாயகி, சாரதாமணி, தவணேசன் (ஜேர்மனி), ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரியும் கரிஸ், பவனிகனின் அன்பு பெரியம்மாவும் வேணுகா, கோவிகா ஆகியோரின் அன்பு சித்தியும் மகேந்திரன், ஸ்ரீஆனந்தம் அவர்களின் அன்பு மைத்துனியும் சுபா (ஜேர்மனி) அவர்களின் அன்பு மச்சாளும் கௌதம், பைரவி, மதுசன் ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2021) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் வண்ணார் பண்ணை கோம்பயன்மணல் இந்து மயானத்தில் சுகாதார முறைப்படி தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 13 . 08 . 1938

மறைவு 31 . 07 . 2021

## திருமதி குகராசா புவனேஸ்வரி (தங்கம்)

அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி குகராசா புவனேஸ்வரி அவர்கள் நேற்று (31.07.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் குகராசா (இளைப்பாறிய பொறியியலாளர். தலைவர். இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்) அவர்களின் அன்பு ம்மனைவியும். பார்த்தீபன் (லண்டன்). காலஞ்சென்ற வாசுகி மற்றும் நாகலிங்கம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும். மாலினி. தர்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும். கர்ஷணன். லும்பிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2021) ஞாயிற்றுக் கிழமை காலை 6.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



தோற்றம் 05 . 10 . 1940

மறைவு 26 . 07 . 2021

## அமரர் நவரத்தினம் தவமணி

(மயிலிட்டி தெற்கு - யாழ்ப்பாணம் - நல்லூர் - பிரான்ஸ்)

அன்னார் மயிலிட்டி தெற்கைப் (கட்டுவன்) பிறப்பிடமாகவும். 306 நாவலர் வீதி யாழ்ப்பாணம் மற்றும் 31/1 சங்கிலியன் வீதி. நல்லூரைப் வாழ்விடமாகவும். 19 Rue Galopin 93700 Drancy வதிவிடமாக வும் கொண்ட காலஞ்சென்ற நவரத்தினம் தவமணி அவர்கள் 26.07.2021 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும். காலஞ் சென்றவர்களான சின்னத்துரை - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும். நவரத்தினம் அவர் களின் அன்பு மனைவியும். நந்தகுமார் (வரன்). ஜெயகுமார் (ஜெயன்). அமிர்தினி (உமா). நந்தினி (உஷா) ஆகியோரின் பாசமிகு தாயாரும். கௌசலா. குமுதினி (பாமா). சுந்தரராஜா (குஞ்சன்). தர்மகுலசிங்கம் (தம்பி) ஆகியோரின் அன்பு மாமியாரும். கனகாம்பிகை - காலஞ்சென்ற நல்லையா. தவராசா. பவளம்மா. செல்வராணி - சிவயோகநாதன். செல்வரத்தினம் - சிவசோதி. செல்வராசா - அனுசியா. சிறிமுருகராசா - சிறிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும். காலஞ்சென்ற வேலாயுதம் - காலஞ்சென்ற இராசலட்சுமி. காலஞ்சென்ற அமிர்தலிங்கம் - புவனேஸ்வரி. காலஞ்சென்ற தனபாலசிங்கம் - கணேஸ்வரி. காலஞ்சென்ற பஞ்சலிங்கம் - காலஞ்சென்ற கனகேஸ்வரி. மகேஸ்வரி - காலஞ்சென்ற இரத்தினசிங்கம். காலஞ்சென்ற பத்மாவதி - காலஞ்சென்ற லோகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும். நிருஷன். நிரோகா. ஜெலானி. ஜெயமினி. ஜெரான். அமிர்ராஜ் (மது). அம்யுக்தன் (சனு). ஆர்த்திகா. அகிலன். அனோஜன். அம்ரிதா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.08.2021) ஞாயிற்றுக்கிழமை நாளைமறுதினம் (03.08.2021) செவ்வாய்கிழமை 15.00 மணிமுதல் 16.00 மணிவரை Funerarium des Joncherolles Villetaneuse 95 rue Marcel Sembat 93430 VILLETANEUSE என்னும் இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் அதே இடத்தில் 04.08.2021 புதன்கிழமை 9.30 மணிமுதல் 11.30 மணிவரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று. 12.30 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவருக்கும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:

| | | | | |
|---|---|---|---|---|
| நந்தகுமா | Varan | - London (மகன்) | : +447 405 879 351 | தகவல் : |
| ஜெயகுமார் | Jeyan | - France (மகன்) | : +336 121 59240 | சகோதரர்கள் |
| சுந்தரராஜா | Kunjan | - London (மருமகன்) | : +447 962 118 118 | செல்வரத்தினம் |
| தர்மகுலசிங்கம் | Thambi | - France (மருமகன்) | : +336 139 05162 | (077 636 5811) |
| சிறிமுருகராசா | Sri | - France (தம்பி) | : +336 454 73294 | தவராஜா |
| செல்வராசா | Selvarasa | - France (தம்பி) | : +336 512 69629 | (077 831 3480) |

# மரண அறிவித்தல்

## திருமதி வேலாயுதபிள்ளை இராசம்மா

(மண்டைதீவு சிறுப்புலம் கந்தசாமி கோவில் தர்மகத்தா)



அன்னை மடியில் 16.10.1932

இறைவன் அடியில் 24.07.2021

யாழ். மண்டைதீவைப் பிறப்பிடமாகவும். அல்லைப்பிட்டியை வசிப்பிடமாகவும். பிரான்ஸ் Aulnay- sous- Bois ஐ தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை இராசம்மா கடந்த 24.07.2021 சனிக்கிழமை அன்று பிரான்ஸில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரநாதர் (மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலய முன்னாள் தர்மகர்த்தா). சொர்ணம்மா தம்பதிகளின் அன்பு மகளும். காலஞ்சென்ற செல்லத்துரை (அல்லைப்பிட்டி உடையார்) சொர்ணம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும். அல்லைப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை (பேபி - செங்கலடி சிறி முருகன் ஜூவல்லரி உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும். ஜெயசுந்தரராஜா. காலஞ்சென்ற சிறீஸ்கந்தராசா. சியாமளா. மஞ்சுளா. சோமேஸ்வரி. காலஞ்சென்ற லோகேந்திரா (லோகு). தெய்வேந்திரா. விஜியேந்திரா ஆகியோரின் அன்புத் தாயாரும். ரெட்ணமணி. ரூபவதி. குலேந்திரா. மகாலிங்கம். ராஜ்குமார். நாகேஸ்வரி. கவிதா ஆகியோரின் அன்பு மாமியாரும். காலஞ்சென்றவர்களான கந்தையா (சிறாப்பர்- வேலணை). இரத்தின சபாபதி (சமாதான நீதவான். இளைப்பாறிய தபால் அதிபர் அல்லைப் பிட்டி). திருநாவுக்கரசு (மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலய தர்மகர்த்தா). செல்வலெட்சுமி. சுயம்புலிங்கம் மற்றும் புவனேஸ்வரி(பிரான்ஸ்). மங்கயற்கரசி (இராசாவின் தோட்டம். நல்லூர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும். காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி. சிவயோகலெட்சுமி. ராமநாதன் (பொலிஸ்காரியாலய உத்தியோகத்தர்). நடேசபிள்ளை (வர்த்தகர்- மட்டக்களப்பு. யாழ்ப்பாணம்). தவவிநாயகம் (முன்னாள் கிராம தலைமைக்காரர். கிராம சபைத் தலைவர்). தையல்நாயகி (சுதுமலை). நடேஸ்வரி மற்றும் பராசக்தி (மண்டைதீவு). சிவரெத்தினம் (பிரான்ஸ்). ஜெயசிறி(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும். கிருஸ்ணாம்பாள் (பிரான்ஸ்). காலஞ்சென்றவர்களான ஞானசம்பந்தர் (விவாக பதிவாளர் சுதுமலை). சச்சிதானந்தம் (உதவி ஆணையாளர்) ஆகியோரின் சகலியும். கார்த்திக். ஜனார்த்திக். ஜசிந்திரன். மீரா. கஜித். காலஞ்சென்ற கார்த்திகா. திலக்சன். சுபன். சங்கவி. சஜீதன். சங்கவை. அஸ்வின். மதுநிசன். அபிஷேக் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும். அக்சை இலான். ஆகாஸ். ஸ்ரேயா. மைதிலி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.08.2021) திங்கட்கிழமை காலை 8.00Am - 11.00Am 66 Av. Pierre Jouhet, 93600 Aulnay-sous-Bois, FranceGet Direction இல்லத்திலும் தகனக்கிரி யைகள் 1.00 PM - 3.00 PM Get Direction Cimetière Intercommunal des Joncherolles 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France இல் நடைபெறும்.

**வீட்டு முகவரி:**
No: 66 Av. Pierre Jouhet,
93600 Aulnay-sous-Bois,
France.

தகவல்:
குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு:

ஜெயசுந்தரராஜா - மகன்
- Mobile : +33629167479

மஞ்சுளா மகாலிங்கம் - மகள்
- Mobile : +4915219366930

தெய்வேந்திரா - மகன்
- Mobile : +33605551325

விஜியேந்திரா - மகன்
- Mobile : +33652300755

சியாமளா குலேந்திரா - மகள்
- Mobile :+33620592498

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலை வாய்ப்பு

பொது காப்புறுதித் துறையின் முன்னணி நிறுவனமான கூட்டுறவுக் காப்புறுதி நிறுவனத்தின் யாழ்ப்பாணம், சன்னாகம் மற்றும் நெல்லியடி, கிளிநொச்சி கிளைகளுக்கு காப்புறுதி முகாமையாளர், காப்புறுதி ஆலோசகர் பதவிக்கான வெற்றிடங்கள்.

அடிப்படை சம்பளங்கள் + மேலதிகக் கொடுப்பனவுகளுடன் இலவச மருத்துவக்காப்பீடும் வழங்கப்படும்.

தங்கள் விண்ணப்பங்களுடன், தங்களுக்கு அருகில் உள்ள கிளையில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி ஊடாகவோ தொடர்பு கொள்ளவும். தொடர்புகளிற்கு.

- யாழ்ப்பாணம் : 021 222 4561 / 021 221 7495 / 077 787 1252
- சுன்னாகம் : 077 855 5496
- நெல்லியடி : 021 226 5737 / 077 629 1102
- முல்லைதீவு : 021 206 1056 / 077 579 2590
- கிளிநொச்சி : 021 228 5791 / 077 787 1252

**T. Anoop**
பிராந்திய முகாமையாளர்
(077 787 1252 / 071 - 023 2696)

# கண்ணீர் அஞ்சலி

கடந்த (28.07.2021) புதன்கிழமை இறைபதமடைந்த
எமது பாடசாலை ஆசிரியை **திருமதி சிவகுமாரி சிறிகாந்தன்**
அவர்களின் அன்புத் தந்தையார்

**திரு.கந்தையா சின்னத்துரை**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திப்பதுடன்
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பாடசாலைச் சமூகம்
**யா/ யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை**

# விழிநீர் சொரிதல்



பிறப்பு
23
03
1954

இறப்பு
29
07
2021

## திரு. செல்லத்துரை தர்மராஜன்

(ஒய்வு நிலை கனித பாட ஆசிரியர் & விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்
யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்)

நட்பின் இலக்கணமே தர்மா
நட்புகள் தவிக்க எங்கு நீ சென்றாய்
நட்பு வட்டத்தில் துன்பம் என்றால்
நாம் நிற்போம் முன் என்பாய்
இன்று உனக்கு இடர் வந்த போதும்
இயலாமல் ஊமையாய் நிற்கின்றோம்
முடியாதது ஏதும் இல்லை உனக்கு
முகம் பார்க்க முடியாமல் தவிக்கின்றோம்
உன்மொழி ஆளுமைப் பலத்தால்
ஊர் சுற்றி வந்தோம் நாமெல்லாம்
உளம் மகிழ்ந்து மாணவர்கள் களமாடி
உச்சம் தொட்டனர் உன் உத்தியால்
சிக்கலான நோய் வந்தபோதெல்லாம்
சிரித்தபடி மீண்டெழுவாய் பீனிக்ஸாய்
எழுதாமலே திட்டங்கள் தீட்டுவாய்
மனக்கணிதமே மாயமானது ஏனோ
எதிரி என்று எவரும் இல்லை உனக்கு
எதிரில் இல்லாமல் போனாய் எமக்கு
எங்கு காண்போம் நண்பா....
உன்னை இனி
என்று காண்போம் நண்பா...

முன்னாள் ஆசிரிய நண்பர்கள்
**யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்**


# eDUS

இலங்கையின் No.1 ஒன்லைன் கல்வி நிறுவனம்..!
Colombo 077 448 7774 Jaffna
Your Education..! Our Priority..!
உங்கள் கல்வி ! எங்கள் முன்னுரிமை !
www.edus.lk info@edus.lk

தற்போது எமது கல்விச் சேவைகள் தரம் 4 தொடக்கம் G.C.E A/L வரையான அனைத்து தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல மாணவர்களுக்கும் இலங்கையின் சிறந்த தகமை வாய்ந்த ஆசிரியர்களின் வழிகாட்டலில் சிறப்பாக நடைபெறுகின்றது..!

## GRADE 4 & 5

திரு. L .விஜேந்திரன் Dip in tech. SLPS -111 (புகழ் வெளியீட்டாசிரியர்)

## GRADE 6 - 11

*Tamil Medium*

Maths - T.Rajeestan NDT
V. Sangeevan B.Sc
Science - T. Santheeu B.Ed
Tamil - K.M.Niththiyananda BA (Hons)
English - S.Nisankan NDT
ICT - Sankavi Manohar BSc. in ICT
Tharshika Gunarasa BSc. in ICT
Savitha Sivaneswaran BSc.ICT
History - T. Akilan NDT
Civics & Geography - Inthu Mayooran BA (Hons)
Commerce - S. Thanusan BBA (Hons), MBA (R)
Eng. Literature - Thulasi Rajeswaran NDT

*English Medium*

Maths - T.Rajeestan NDT
V. Sangeevan B.Sc
Science - Fathima Azka Razik B.Sc
Tamil - K.M.Niththiyananda BA(Hons)
English - S.Nisankan NDT
ICT - Sijada Kabeer B.Sc in ICT
History - T. Akilan NDT
Citizenship - Inthu Mayooran BA (Hons)
Geography - Inthu Mayooran BA (Hons)
Eng. Literature - Thulasi Rajeswaran NDT

## G.C. E ADVANCED LAVEL

Combined Mathematics - Ramanathan Sinthujan B.Sc
Biology TM - Fazeeka Yusuf B.Sc in Natural Science
Biology EM - Sushmitha Thavakumar B.Sc, Dip.in. TEFL
Chemistry - Ananthabalan Divulaganānth BSc Eng (R)
Physics - Komathen Packiyanathan B.Sc
ICT - Savitha Sivaneswaran B.Sc in ICT

குறைந்த கட்டணம்..!

குழப்பம் இல்லாத நேரசூசி..!

- எமது ஒன்லைன் வகுப்புக்கள் யாவும் நிரந்தரமானவை.
- மாணவர்கள் வகுப்பில் முழு கவனம் செலுத்தப்படுவார்கள்.
- மாதாந்தம் மாணவர்களது நிலை அறிக்கை அனுப்பிவைக்கப்படும்.
- இலகுவாக வீட்டிலிருந்தவாறே ஒன்லைன் மூல கல்வியை பெற மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பாதுகாப்பும் உறுதுணை மிக்கதுமான சிறந்த சேவை..!
- பல வருட அனுபவமும் சிறப்புத்தேர்ச்சியும் நிறைந்த பல மாணவர்களின் வெற்றிக்கு துணை நின்ற புகழ் பெற்ற ஆசிரியர்கள்..!

எம்மீது குறுகியகாலத்தில் நம்பிக்கை வைத்த பெற்றோர்களுக்கும் எமது மாணவர்களுக்கும் எமது தரமான சேவையின் நிரந்தர உத்தரவாதத்தினையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்..!

**ADMISSIONS**
**077 448 7774**


# 6 ஆம் பரவுலகில் ஆண்டு நினைவஞ்சலி

இகவுலகில் முகிழ்வு
07
04
1955



பரவுலகில் அமர்வு
01
08
2015

## திருமதி அன்ரனற் இருதயநாதன்

## (யோகமலர்)

"சீவியத்தில் என்னை நேசித்தவரே, மரணத்திலும் எம்மை மறவாதீர்கள்"
பாசமிகு தலைவியாய், நேசமிகு தாயாய், அறம், நெறி, பண்புக்கு
பாத்திரவாளராய் இம்மையிலும் மறுமையிலும் இனியவளாய்,
தருமத்தின் உபகாரியாய், எங்கள் குடும்பத்தின் அகல் விளக்காய்
வாழ்ந்த எங்கள் அம்மா! நாமோ கரம் கூப்பி சிரம் தாழ்த்தி
ஆராதிக்கின்றோம் உங்கள் நித்திய வாழ்வுக்காக நித்தமும்
இறைவனை வேண்டி நிற்கின்றோம் அம்மா!

**"நான் வாழ்ந்தாலும் இறந்தாலும் இறைவனுக்கே சொந்தம்"**

செ.இருதயநாதர்
(துரைமணி)
077 [illegible] 8661
யாழ்ப்பாணம்,
முல்லைத்தீவு.

இவரது பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 36 ஆண்கள்....

ஆண்களும் உள்ளடங்குகின்றனர். இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 441ஆக அதிகரித்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

### பிடியாணை...

பொதுமக்களை அச்சுறுத்துகின்றனர் என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

கடந்த வியாழக்கிழமை 'ஹைஏஸ்' ரக வாகனத்தில் வந்த பொலிஸ் சீருடை மற்றும் சிவில் உடையில் இருந்த கும்பல் இளைஞன் ஒருவரைக் கடத்திச் சென்று சித்திரவதை புரிந்து கைத்துப்பாக்கியால் தாக்கி வீதியில் வீசிவிட்டு சென்றமை தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணையில் குறித்த கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்டது 56 - ஓஓஓஓ இலக்க வாகனம் என்பது தெரியவந்தது.

அந்த வாகனம் உரும்பிராய் பகுதியைச் சேர்ந்தவருக்குச் சொந்தமானது. குறித்த வாகன உரிமையாளர் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் நீதிமன்றில் வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில், வழக்கு தவணைகளுக்கு செல்லாத காரணத்தால் நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த நபர் கோப்பாய் பொலிஸாருடன் மிக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளார்.

குறித்த நபர் தனது நண்பர்களுடன், கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்குப் பின்புறமாக உள்ள வீடொன்றில் பொலிஸாருடன் மது விருந்துக்களில் கலந்து கொள்வார். தனது நண்பர்கள், தனக்கு தேவையானோருடன் முரண்பட்டுக்கொண்ட நபர்களின் வீடுகளுக்கு மதுபோதையில் வாகனத்தில் பொலிசாரை அழைத்துச் சென்று, அவர்களை தாக்குவது, மிரட்டுவது போன்ற வேலைகளிலும் ஈடுபட்டு வந்துள்ளார். இப்படியான ஒரு பின்னணியிலேயே மேற்படி இளைஞனும் கடத்தப்பட்டு தாக்கப்பட்டுள்ளார்.

பொலிஸாரின் இத்தகைய செயற்பாடுகள் குறித்து, கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு பல தடவைகள் தெரியப்படுத்திய போதிலும் அவர் அது தொடர்பில் கண்டுகொள்ளாது இருந்தார் என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

குறித்த இளைஞன் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் கடந்த வியாழக்கிழமை மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தார். அது தொடர்பில் ஊடகங்களில் செய்திகள் வெளிவந்த நிலையிலும் நேற்றுமுன்தினம் இரவும் குறித்த நபருடன் பொலிஸார் மது விருந்தில் கலந்து கொண்டுள்ளனர். அத்துடன் கடந்த ஒரு வார கால பகுதிக்குள் கோப்பாய் பொலிஸாரினால் மனிதவுரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று மனிதவுரிமை ஆணைக்குழுவுக்கு 4 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அவை நான்கும் உரும்பிராய் பகுதியைச் சேர்ந்தவர்களால் வழங்கப்பட்ட முறைப்பாடுகளாகும். (26.20)


## நேர்முக வர்ணனையாளர் தேவை

YOU TUBE வீடியோவில் நேர்முக வர்ணனை வேலைக்கு ஆள்கள் தேவை. ஆர்வமுள்ள ஆண், பெண் இருவரும் கீழுள்ள தொலைபேசியில் தொடர்புகொள்ளவும்.

**+ 141 678 67241** (கனடா)

## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம் 15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா? ➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி, கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## Vacancy for Web Application Developer

A USA-based company with offices in Colombo and Jaffna is looking for candidates for the post of Web Application Developer to work in the Jaffna office.

**Qualifications:**
Degree in the field of Computing/IT
Sound technical & analytical skills
Good programming knowledge specifically in PHP,HTML/CSS and Javascript
Knowledge in Database Management Systems & SQL
Knowledge in Mobile programming is a plus

**Fluency in English is a must. Send your CV to siva@monthlywarranty.com**

## உடனடி வேலைவாய்ப்பு
### (Part/Full Time)

- **Marketing Executive**
  2+ years of marketing experience, ideally in field marketing and sales with good contacts Salary 18,000 to 40,000
- **Field Sales Executive (Female)**
  Suitable for who has experience in the field sales and School leavers without any experience can apply.

Age: 18 to 35
Salary Basic + commission

**Office Location: Jaffna Town**
**Please contact 076 673 8436**

## பெண் பராமரிப்பாளர் தேவை

ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் நான்கு வருடங்களுக்கு மேலாக இயங்கி வருகின்ற
**வல்வை முதியோர் இல்லத்திற்கு**
பெண் பராமரிப்பாளர் தேவை.
**உணவு, தங்குமிட வசதி இலவசம்.**
தகுந்த சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
எமது இல்லத்தில் **புதிதாக ஆண்கள், பெண்கள் இணைய விரும்புவோர் இணைந்துகொள்ளலாம்.**
**கட்டணம் குறைவான நிலையில் அறவிடப்படும்.**

தொடர்பு: 077 810 6857 077 154 2067
021 226 5551

**Palmarah Fiber Extraction Project**
**Ravi industries Ltd**

## கங்குமட்டை தேவை



பளை, புலோப்பளை வீதியில் அமைந்துள்ள எமது உற்பத்தி நிறுவனத்திற்கு கங்குமட்டைகள் தேவை.

கங்குமட்டைகள் வைத்திருப்போர். தொடர்பு கொள்ளவும்

**தொடர்பு 076 1058 754**


## கண்ணீர் அஞ்சலி



அமரர்
**கிருஸ்ணலீலா கந்தசாமி**

எமது பாடசாலையில் கடமையாற்றும் திருமதி தவராணி பிறேம்குமார் ஆசிரியையின் அன்புத் தாயாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 31.07.1952 மறைவு 31.07.2021

பாடசாலைச் சமூகம்
யா/ கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம், மல்லாகம்.

## கண்ணீர் அஞ்சலி



ஸ்ரீமதி
**புவனாம்பிகை அம்மா மகாதேவக் குருக்கள்**

திருநெல்வேலிப் பழங்கிணற்றடி
ஸ்ரீவீரகத்தி விநாயகராலய
விழாக்கள் யாவிலும் விருப்புடன் தாமும்
தமது மாணாக்கரும் வந்து கலந்து
ஆகம நெறிமுறை பேணிய பெருந்தகை
அந்தணர்க்குரிய செந்தண்மை பூண்டவர்
இணுவில் பதியை இருப்பிடமாக்கி
தர்ம சாஸ்தா நிறுவனம் அமைத்து
ஆயிரமாயிரம் அந்தணச் சிறார்களை
அறிவு புகட்டி வளர்த்தெடுத்திட்ட
பிரம்மஸ்ரீ **மகாதேவக்குருக்கள்** அவர்களின்
பிரிய பத்தினி **புவனாம்பிகை** அம்மா
இறைபதம் அடைந்தமை அறிந்து
ஆற்றாத்துயரது கொண்டோம்
சிவனும் உமையும் என எழுந்தருளி
தவமுறை தியானம் இயற்றிய மேலோய்
இன்று எங்கள் குருக்கள் ஐயா
அன்றில் ஒன்றாய் துடிப்பதைக்கண்டு
ஆறாத்துயரை நாமும் பகிர்ந்தோம்
இறைவன் திருவடி நீழலில் அம்மா
என்றும் இருக்க இறைஞ்சி நிற்கின்றோம்.

கலாசாலை வீதி, திருநெல்வேலி.

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய நிர்வாகத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை

## வேலையாள்கள் தேவை
யாழ்ப்பாணத்திலுள்ள நிறுவனமொன்றிற்கு தரம்பிரிந்து பொதிசெய்வதற்கு பெண் வேலையாள்கள் தேவை.

தொடர்பு: 076 033 5559

## வேலையாள்கள் தேவை
சிசிரிவி பொருத்துவதில் அனுபவம் உள்ளவர்கள் அல்லது பழக விரும்புபவர்கள் தேவை. மேலும் கடையில் வேலை செய்யக்கூடிய பெண தேவை.

077 228 8246, 071 156 2009

## பணிப்பெண் தேவை
யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள வீட்டில் தங்கியிருந்து வேலை பார்ப்பதற்கு பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்

T.P.: 070 521 2107

## ஆசிரியர் தேவை
தரம் 1 ற்கு செல்லவிருக்கும் மாணவனுக்கு ஆங்கிலம், தமிழ், மொழி மூலம் கற்பிக்க கூடிய அனுபவம் மிக்க பெண் ஆசிரியை தேவை. (திருநெல்வேலி பிரதேசத்திற்கு அருகில் வசிப்பவர்கள் விரும்பதக்கது)

077 960 9589 / 021 222 6855

## வேலையாட்கள் தேவை
யாழ் நகரில் இயங்கும் கட்டுமான நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

❖ கூலி ❖ மேசன்

சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்

தொடர்பு 077 776 8606

## வேலையாள்கள் தேவை
கொழும்பில் உள்ள மிளகாய் தூள் அரைக்கும் மில்லுக்கு மிளகாய் அரைத்தல் பிளேட் மாற்றுதல், ஈர அரிசி அரைத்தல் வேலையில் முன் அனுபவம் உள்ள 55 வயதிற்கு உட்பட்ட ஆள்கள்தேவை. தங்குமிட வசதி தரப்படும். சம்பளம் 2000/- ஒரு நாளுக்கு

தொடர்பு: 075 800 5057

## பணிப்பெண் தேவை
ஒருவருக்கு மட்டும் சமையல் செய்வதற்கு பெண் ஒருவர் தேவை. தங்கி இருந்து வேலை செய்ய கூடியவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
இடம்.: பிறவுண் றோட், யாழ் நகர் சம்பளம் - 21,000/= வயது 40ற்கு கீழ் உள்ளவர்.

தொடர்பு : 0777 157 070

## வீடு வாடகைக்கு தேவை
யாழ் நகர் அல்லது அண்டிய பகுதியில் வீடு வாடகைக்கு தேவை. வீடு, அலுவலகம் போல் பாவிக்க கூடியதாக இருத்தல் வேண்டும்.

தொடர்பு : 0777 157 070

## வேலையாட்கள் தேவை
யாழ் நகரில் இயங்கும் மின்சார உபகரணங்கள் விற்பனை செய்யும் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.
கணினி அறிவு உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

076 962 9251

## பணியாட்கள் தேவை
யாழ் நகரில்
1. Photoshop தெரிந்தவர் (பெண்)
 ஆரம்ப சம்பளம் 13,500/=
2. வரவேற்பாளர் (பெண்)
 ஆரம்ப சம்பளம் 13,500/=
3. Decoration வேலை தெரிந்தவர் (ஆண்)
 ஆரம்ப சம்பளம் 18,000/=

தொடர்பு : 077 777 1723

## பணிப்பெண் தேவை
வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

தொடர்பு : 077 025 0339

## SERVENT BOY தேவை
யாழ் பிரவுண் வீதியில் உள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்து வேலை செய்ய கூடிய பையன் ஒருவர் தேவை.
வயது - 35ற்கு கீழ் சம்பளம் : 21,000/=

தொடர்பு : 0777 111 444

# ஏனையவை

## விற்பனைக்கு
BAJAJH CT - 100 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு

தொடர்பு: 076 033 5559

## அறைகள் வாடகைக்கு
யாழ் நகரில் சகல வசதிகளுடன் கூடிய அறைகள் உடன் வாடகைக்கு உண்டு.

077 728 3811 / 077 071 3048

## HOME VISIT CLASSES
ENGLISH MEDIUM GR.6 TO A/L
GEO/CITIZENSHIP & ACCOUNTING
ENGLISH LANG - 077 331 6402

## வீடு வாடகைக்கு
கிளிநொச்சியில் விவேகானந்த நகரில் வீடொன்று உடன் வாடகைக்கு தரப்படும்.

077 711 1716 / 076 860 4501

## வீடு வாடகைக்கு உண்டு
பொற்பதி வீதியில் சகல வசதியும் கொண்ட வீடு வாடகைக்கு உள்ளது. (அரச உத்தியோகத்தர்கள் மட்டும்)

தொடர்பு 077 728 0268

## சேவை
நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சினேக பூர்வமான சேவை.

AAA Gold Center

076 568 4346

## பணி வெற்றிடம்
தூய்மை பணியாளர் தேவை.
காலை 8.30 - 1.00 மணி வரை
சம்பளம் - நாளொன்றுக்கு 450/=

தொடர்பு : 076 711 2102

## வேலைவாய்ப்பு
பிரபல்ய கம்பனிக்கு அலுவலக உத்தியோகத்தர்கள் தேவை.(ஆண்கள்) O/L. A/L

தொடர்பு : 077 3020 874

## தேவை
காத்தோட்டிக்காய் தேவை
(உடனடியாக) நல்ல விலைக்கு வாங்கப்படும்

தொடர்பு : 074 116 1955

# திருமண சேவை

## மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1986, பூசம் 12 இல் செவ்வாய், சைவ உணவுப் பழக்கமுடைய பட்டதாரி மணமகனுக்கு இதே குலத்தைச்சேர்ந்த பொருத்தமான மணமகள் தேவை.

T.P.: 076 635 1247

## மணமகள் தேவை
யாழ்.உடுவில் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1986 இல் பிறந்த பூச நட்சத்திர கிரக பாவம் 35.7 இல் செவ்வாய் மற்றும் சனியுடைய சொந்த தொழில் புரியும் மணமகனிற்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு: 077 757 1455

## மணமகள் தேவை
யாழ். கிறிஸ்தவம் லண்டனில் வசிக்கும் வயது 37 எவ்வித தீய பழக்கவழக்கங்கள் அற்ற நற்குணமுள்ள மணமகனுக்கு நற்குணமுள்ள மணமகள் தேவை. அண்மையில் எடுத்த புகைப்படம் தேவை. தொலைபேசி இலக்கத்துடன் கீழ்க்காணும் Email முகவரியில் தொடர்புகொள்ளவும்

தொடர்பு:
dineshvincent83@yahoo.com

## நாகபூஷணி திருமண சேவை
துரிதமாகவும் மிகச் சிறந்த முறையிலும் நீங்கள் விரும்பும், அரச, தனியார்துறை, உள்நாட்டு, வெளிநாட்டு அனைத்து மணமக்கள் ஜாதகங்களும் எம்மிடம் மிகப் பொருத்தமாக பெற்றுக்கொள்ளலாம்.

021 222 9306, 077 138 7596
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.



# வவுனியா பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் இன்று ஆரம்பம்!

வவுனியா, ஓக. 1
வவுனியா பல்கலைக்கழகம் இன்றிலிருந்து தனியான பல்கலைக்கழகமாக தனது செயற்பாடுகளை ஆரம்பிக்கின்றது.
யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் வவுனியா பல்கலைக்கழகமாக கடந்த மாதம் தரமுயர்த்தப்பட்டிருந்தது. அதன் உத்தியோகபூர்வ செயற்பாடுகள் அனைத்தும் இன்றுமுதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.
அந்தவகையில் இலங்கையின் 17ஆவது அரச பல்கலைக்கழகமாக வவுனியா பல்கலைக்கழகம் நிறுவப்பட்டுள்ளது.
1991ஆம் ஆண்டு வட மாகாண இணைந்த பல்கலைக்கழக கல்லூரியாக உருவாக்கப்பட்டு 1997ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகமாக தரமுயர்த்தப்பட்டது.
தற்போது குறித்த வளாகம் ஒரு தனியான பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்பட்டுள்ளது. (ம-110)

டோக்கியோ ஒலிம்பிக்

# 100 மீற்றர் ஓட்டத்தில் ஜமைக்கா ஆதிக்கம்

*அத்தனை பதக்கங்களையும் வழித்துத்துடைத்தது*

டோக்கியோ, ஓக. 1
டோக்கியோ ஒலிம்பிக் தொடரில் பெண்கள் பிரிவு 100 மீற்றர் ஓட்டம் நேற்று நடைபெற்றது. ஜமைக்கா வீராங்கனைகள் அத்தனை பதக்கங்களையும் கைப்பற்றினர்.
எலைன் தொம்சன் தங்கப் பதக்கத்தையும், செலி ஆன் பயஸ் வெள்ளிப் பதக்கத்தையும், செரிக்கா ஜக்சன் வெண் கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.
1988ஆம் ஆண்டு தென்கொரியத்தலைநகர் சியோலில் நிலைநாட்டப்பட்ட உலக சாதனையை எலைன் தொம்சன் முறியடித்தார். 10.61 செக்கன்களில் அவர் தூரத்தைக் கடந்தார். (ம)



# விடைபெற்றார் இசுறு உதான

**கொழும்பு, ஓகஸ்ட் 1**
**இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் இசுறு உதான சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இருந்து விடைபெற்றார்.**

கிட்டத்தட்ட 9 ஆண்டுகளாக இலங்கை அணிக்காக பல ஆட்டங்களில் விளையாடியுள்ளார் இசுறு உதான.
2012ஆம் ஆண்டு இந்தியாவுக்கு எதிரான தொடரில் அறிமுகம் பெற்றார் இசுறு. அடுத்த சில வருடங்களிலேயே இலங்கை அணியின் முக்கிய பந்துவீச்சாளராகச் செயற்பட்டார்.
குறிப்பாக 'டெத் ஓவர்' என்று சொல்லப்படக்கூடிய பந்துப்பரிமாற்றங்களை அற்புதமாக வீசுவதில் வல்லவராகத் திகழ்ந்தார். எனினும் கடந்த சில மாதங்களாக போர்ம் இல்லாமல் அவதிப்பட்டார். அண்மையில் இந்திய அணிக்கு எதிராக நடந்துமுடிந்த தொடரில்கூட இசுறுவின் ஆட்டம் அவ்வளவு எடுபடவில்லை. இந்த நிலையில் தனது ஓய்வு முடிவை அறிவித்துள்ளார் அவர். 'இளையவர் களுக்கு வாய்ப்பு வழங்கவே ஓய்வை அறிவிக்கின்றேன்' என்று இசுறு குறிப்பிட்டுள்ளார். (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில்...

இலங்கையில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு மக்கள் அதிகளவில் ஒன்றுகூடிவரும் நிலை அவதானிக்கப்படுகின்றது. அத்துடன், பொதுச்சுகாதார நடைமுறைகள் சீராகப் பேணப்படவில்லை. சமமற்ற தடுப்பூசிப் பகிர்வு உள்ளிட்ட காரணிகளால் ஆபத்தான டெல்டா திரிபு மிகவும் வேகமாகப் பரவும் அபாய நிலை உள்ளது என்று உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கை அலுவலகம் நேற்று தனது ருவிட்டர் பக்கத்தில் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தொற்று நோயைக் கட்டுப்படுத்த கடந்த காலங்களில் இலங்கை எடுத்த கடுமையான முயற்சிகளின் பலாபலன்களை தற்போதைய நடவடிக்கைகளால் இழந்துவிடும் நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன், இவ்வாறான கட்டுப்பாடற்ற போக்குகளால் தொற்று நோய் அதிகரித்து வைத்தியசாலைகள் முற்றாக பராமரிப்புத் திறனை இழக்கும் நிலை ஏற்படும் எனவும் அந்த எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் உலகம் முழுவதும் கடந்த வாரத்தில் 40 இலட்சம் கொரோனாத் தொற்று நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸஸ் தெரிவித்துள்ளார். (ம-22)

## கிணற்றுக்குள்...

கிணற்றுக்குள் வீழ்ந்துகிடப்பது அவதானிக்கப்பட்டது. பின்னர் அவர் மீட்கப்பட்டு உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும் அங்கு சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பாக கனகராயன்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-110)

## நாட்டை...

தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை மீண்டும் திறக்கும் முடிவை எடுத்தபோது இருந்த சூழ்நிலை தற்போது இல்லை. இந்த வாரத்திலேயே கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. நிலவும் அபாயகரமான சூழ்நிலையில் எந்த முடிவுகளாக இருந்தாலும் கவனமாக எடுக்கப்பட வேண்டும் - என்றார். (ம-22)

## இறுதிப்...

வரையில் 304 பயனாளிகளின் பெயர்கள் மாற்றப்பட்டு, மீண்டும் ஒரு இறுதிப் பட்டியல் பிரதேச செயலர்களால் மாவட்டச் செயலகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கிராமிய வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சால் யாழ்ப்பாண மாவட்டத்தில் 10 லட்சம் மற்றும் 6 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு வகையான வீட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இவற்றுக்குரிய பயனாளிகள் தெரிவு மார்ச் மாதம் இடம்பெற்றது. ஏப்ரல் மாதம் பிரதேச செயலகங்கள், கிராம அலுவலர் அலுவலகங்களில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டது. மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற் றால் அது தொடர்பில் பிரதேச செயலகத்தில் முறைப்பாடுகளை பரிசீலனை மேற்கொள்ளும் குழு அமைக்கப்பட்டு ஆராயப்பட்டது.

அதற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட இறுதிப் பட்டியல் பிரதேச செயலர்களின் ஒப்பத்துடன் ஏப்ரல் மாத இறுதியில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பிரதேச செயலர்கள் ஒவ்வொருவராலும் அனுப்பி வைக்கப்பட்ட பயனாளிகள் பட்டியல், யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர்களான வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சாள்ஸ் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோருக்கு மாவட்டச் செயலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த நிலையில் கடந்த 3ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டச் செயலரால், சகல பிரதேச செயலர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் வீட்டுத்திட்ட பயனாளிகள் பட்டியலை மீண்டும் காட்சிப்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டது. இதற்கு அமைவாக பிரதேச செயலகங்கள், கிராம அலுவலர் அலுவலகங்களில் பட்டியல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இணைத்தலைவர்களின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட இறுதிப் பட்டியலிலிருந்து 187 பேரின் பெயர்கள் தற்போது காட்சிப்படுத்தப்பட்டுள்ள இறுதிப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு புதிதாக 187 பேரின் பெயர்கள் உட்புகுத்தப்பட்டுள்ளன.

இதனைவிட இரண்டாவது தடவை பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டபோது மக்களிடமிருந்து பிரதேச செயலர்களுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அந்த முறைப்பாடுகளுக்கு அமைவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு 117 பேரின் பெயர்கள் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக 117 பேரின் பெயர்கள் உட்புகுத்தப்பட்டுள்ளன.

பிரதேச செயலர்கள் யாழ். மாவட்டச் செயலகத்துக்கு தற்போது இறுதிப் பட்டியலை சமர்ப்பித்திருந்தாலும், மாவட்டச் செயலகத்துக்கு கிடைத்துள்ள மேன்முறையீடுகள் ஆராயப்படும் போது அந்தப் பட்டியலிலும் மாற்றம் வரக் கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது. வீட்டுத் திட்டப் பயனாளிகள் தெரிவில் உள்ளூர் அரசியல்வாதி ஒருவர் பயனாளி தெரிவுக்கு தகுதியில்லாத தனது ஆதரவாளர்களை உட்புகுத்தியமையே இந்தக் குழப்பங்கள் முறைகேடு களுக்குக் காரணம் என்று அதிகாரிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ம-ஒ,7)

## 50க்கும்..:

சிறுவர்கள் கொல்லப்பட்டனர் என்று முல்லைத்தீவு மாவட்ட முன்னாள் மருத்துவ அதிகாரி கைலநாதன் சுதர்ஷன் கொழும்பு நீதிமன்றத்தில் சாட்சியமளித்தார். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கனகரத்தினத்தின் மகனான ஆதித்யன் உள்ளிட்ட மூவருக்கு எதிராக தொடரப்பட்டுள்ள பாகிஸ்தான் முன்னாள் உயர்ஸ்தானிகர் கொலை முயற்சி வழக்கில், குறுக்கு விசாரணைகளின்போது, ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே மேற்படி விடயத்தை அவர் வெளிப்படுத்தினார்.

பாகிஸ்தான் முன்னாள் உயர்ஸ்தானிகர், பசீர் வலி மொஹம்மட்டை கொலை செய்ய சதித் திட்டம் தீட்டியதாக சட்ட மா அதிபரால் பிரதிவாதியாக பெயரிடப்பட்டு கனகரத்னம் ஆதித்யனுக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கு கடந்த ஜூலை 19, 22, 25, 27 மற்றும் 28ஆம் திகதிகளில் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மொஹம்மட் இஸ்ஸதீன் முன்னிலையில் விசாரிக்கப்பட்டது.

இதன்போது முறைப்பாட்டாளரான சட்டமா அதிபர் சார்பில் சிரேஷ்ட அரச சட்டவாதி விராஜ் வீரசூரிய முன்னிலையானார். மூன்றாம் பிரதிவாதியான ஆதித்யன் சார்பில் சட்டத்தரணி தர்மராஜாவின் அனுசரணையில் சட்டத்தரணி ஆர்னோல்ட் பிரியந்தனுடன் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா முன்னிலையாகி குறுக்கு விசாரணைகளை முன்னெடுத்தார்.

2006ஆம் ஆண்டு இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராக கடமையாற்றிய பசீர் வலி மொகமட்டை கொலைசெய்ய சதித்திட்டம் தீட்டி, 2006ஆம் ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி குண்டுத் தாக்குதல் நடத்தி 7 சிப்பாய்களுக்கு மரணத்தையும், மேலும் பத்து பொதுமக்களுக்கு கடும் காயத்தையும் ஏற்படுத்தியதாக கூறி சட்டமா அதிபரால் இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது. 25 குற்றச்சாட்டுக்களின் கீழ் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கின் மூன்றாம் மூன்றாம் பிரதிவாதியான ஆதித்தியன் விடுதலைப்புலிகளின் புலனாய்வுத் துறையின் செயற்பாட்டாளரெனவும் அவருடன் நான் நெருங்கிப் பழகியதாகக் கூறியுமே பொலிசார் தன்னை கைது செய்தனர் என்று அரச சாட்சியான வைத்தியர் கைலசநாதன் சுதர்ஷன் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவின் குறுக்கு விசாரணை களில் தெரிவித்தார்.

இந்த வழக்கில் சம்பவத்தை உறுதிப்படுத்த சில சாட்சியங்களை அழைக்க வேண்டியுள்ளதாக நீதிமன்றில் விண்ணப்பம் செய்யப்பட்டது. எனினும் அந்த விண்ணப்பத்துக்கு ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தனது கடும் ஆட்சேபத்தை முன்வைத்தார்.

இந்த சம்பவம் நடைபெற்றது என்பதனை பிரதிவாதிகள் சார்பில் ஆஜராகின்ற சட்டத்தரணிகளாகிய நாங்கள் 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 420ஆம் பிரிவின் கீழ் ஏற்கனவே ஏற்றுக் கொண்டுள்ளோம். ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களை மையப்படுத்திய எண்பித்தல் அவசியமற்றது. அதுமட்டுமின்றி இது காலத்தை வீணடிக்கும் செயல்பாடுமாகும். நடைபெற்ற சம்பவத்தை ஏற்றுக் கொள்ளும் அதேவேளையில் இந்த வழக்கின் எதிரிகளுக்கும் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராகிய பசீர் வலி மொஹம்மட்டை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டி நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலுக்கும் எந்தத் தொடர்புமில்லை என்பதே பிரதிவாதிகள் தரப்பு நிலைப்பாடாகும் என ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா வாதங்களை முன்வைத்தார். (ம)

## காலை...

சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் கொரோனா பரவல் மிகவும் கடுமையாகப் பரவி வருகின்றது எனச் சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளதையடுத்து, பகல் நேர பொதுப் போக்குவரத்து சேவைகளை இடைநிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சுகாதார வழிகாட்டுதலுக்கு அமைவாக பஸ் மற்றும் ரயில் சேவைகளை இன்று முதல் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாளை திங்கட்கிழமை முதல் அனைத்து அரச ஊழியர்களும் பணிக்கு அழைக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்குச் சேவைகளை வழங்க பொதுப்போக்குவரத்துச் சேவைகள் இன்று மீண்டும் ஆரம்பிக்கப்படுகின்றன. சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைய பஸ்களின் இருக்கைகளின் எண்ணிக்கைக்கு மட்டும் பயணிகளைக் கொண்டு செல்லுமாறு இலங்கை போக்குவரத்து சபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது - என்றார். (ம-22)

## மோட்டார்...

பி.சி.ஆர். சோதனையில் கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. சுதுமலை மற்றும் உரும்பிராயை வதிவிடமாகக் கொண்ட 63 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்தவர். குறித்த நபர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உறவினர் ஒருவரைப் பார்வையிட்டுவிட்டு நேற்று மதியம் 1.45 மணியளவில் வீடு திரும்பியுள்ளார். யாழ்ப்பாணம் சிவலிங்கப் புளியடியச் சந்தியில் பயணித்தபோது, அவர் திடீரென மோட்டார் சைக்கிளால் வீதியில் வீழ்ந்துள்ளார். அவலக் குரல் எழுப்பிய அவரை அந்தப் பகுதியைச் சேர்ந்தோர் மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்தனர். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. (ம-26)

## பொலிஸாரின்...

கோப்பாய் பகுதியில் இளைஞர் ஒருவரை வானில் கடத்திச் சென்று பொலிஸார் தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

'கோப்பாய் பகுதியில் இளைஞர் ஒருவரை வானில் கடத்திச் சென்று பொலிஸார் தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்படும் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்கரின் கீழ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஒரு சிலரின் தேவைக்காக பணத்தைப் பெற்று பொலிஸார் செயற்பட்டிருந்தால் அவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்கப்படும்.

அத்துடன், குற்றச்சாட்டு எழுந்துள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உடனடியாக இடமாற்றம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டுமல்ல நாடுமுழுவதும் அமைதியையும் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்ப பொலிஸார் தமது கடமையை செய்துவரும் நிலையில் இவ்வாறான சில பொலிஸ் அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் தவறான வகையில் செயற்படுகின்றமை வருந்தத்தக்கது'- என்றார். (ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

© 2000 Agfa-Gevaert N.V.

# தோல்வியை ஏற்க மறுக்கிறார் கொம்

புதுடெல்லி, ஓக. 1

ஒலிம்பிக் குத்துச்சண்டைப் பிரிவில் தோல்வியடைந்த இந்திய வீராங்கனை மேரி கொம், தனது தோல்வியை ஏற்க முடியாமலிருக்கின்றது என்று தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நான் குத்துச்சண்டை வளையத்துக்குள் இருக்கும்போது மகிழ்ச்சியாகவே இருந்தேன். ஏனென்றால் என்னளவில் மகிழ்ச்சியாக இருப்பதாகவே நான் நினைத்தேன். என்னை அவர்கள் ஊக்க மருந்து பரிசோதனைக்காக அழைத்துச் சென்றபோது கூட நான் மகிழ்ச்சியாகவே இருந்தேன். சமூக வலைத்தளங்கள் மற்றும் எனது பயிற்சியாளர் என்னிடம் திரும்பத் திரும்பக் கூறிய போதுதான் நான் தோல்வியுற்றது தெரிந்தது. இன் கிரிட் வெலன்சியாவை நான் கடந்த காலங்களில் இரண்டு முறை வென்றிருக்கிறேன். நடுவர்கள் அவரை இந்தப் போட்டியில் வெற்றியாளராக அறிவிப்பார்கள் என்று நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. என் பெறுபேறு சிறந்ததாகவே இருந்தது' என்று தெரிவித்துள்ளார்.

மேலும், "காலிறுதியின் முந்தைய போட்டியில் நுழைவதற்கு முன்னர், நான் அணிந்திருந்த ஆடைக்கு பதிலாக வேறு ஆடையை மாற்றுமாறு தெரிவித்தார்கள். இது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏன் அவ்வாறு கூறினார்கள் என்பது குறித்து விளக்கம் வேண்டும்' என்றும் மோரிகோம் தெரிவித்துள்ளார். (ம)

**A/L மூன்று மாதங்களே PP**
வீடு வரல் / இரு மொழிகளிலும்
CHEMISTRY சிங்கம் மாஸ்டர்
076 056 5786
Biology வித்தியா சேர்
077 665 5290

## சிறுநீரகம் தேவை

$B^+$ குருதி வகையைக் கொண்ட ஒருவருக்கு $B^+$, $B^-$ அல்லது $O^+$ அல்லது $O^-$ குருதி வகையைக் கொண்ட சிறுநீரகம் அவசரமாகத் தேவை.

தொடர்பு 077 833 6848

## விற்பனைக்கு

1. யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் பாடசாலைக்கு அருகில் பிரதான வீதியோரமாக 5 ¾பரப்புக்காணி (பிரித்து கொடுக்கப்படும்)
2. முதலாம் குறுக்குத் தெருவில் Pizza Hut இற்கு அண்மையாக 2 பரப்புக் காணி
3. கல்வியங்காட்டில் புதிய செம்மணியில் பருத்தித்துறை வீதியில் இருந்து 200m தூரத்தில் 1 ¾ பரப்புக்காணி
4. கொடிகாமத்தில் A9 வீதியிலிருந்து 300 m தூரத்தில் 8 பரப்புக்காணி

தொடர்பு: 077 221 6683

## மேசன் வேலையாட்கள் தேவை

யாழ். மாவட்டத்தில் கட்டுமானத்துறையில் வேலை செய்வதற்கு மேசன், கூலியாட்கள் தேவை.

சம்பளம் : மேசன் - 2000 + மதிய உணவு
கூலி - 1500 + மதிய உணவு
வேலை நேரம் : 8.30 a.m - 5.30 p.m
சம்பளம் நிபந்தனைக்கு உட்பட்டது.

தொடர்புகளுக்கு :
**077 2012 429**

## பணிப் பெண் தேவை

யாழ் திருநெல்வேலி பகுதியில் வயதான தாய் ஒருவரை தங்கி நின்று பராமரிக்கக்கூடிய பெண் பராமரிப்பாளர் ஒருவர் தேவை. இளைப்பாறிய தாதியர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கலாம்.

தொடர் : 076 737 4444

## பெண் பணியாளர்கள் தேவை

யாழ் பிரபல தனியார் வைத்தியசாலையின் துணை நிறுவனம் ஒன்றிற்கு 100% பெண்கள் வேலை செய்யும் பகுதிக்கு யாழ் நகரை அண்டியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

கடமை நேரம் : காலை 6 மணி - 2 மணி வரை
2 மணி - 9 மணி வரை
வேலை செய்ய விரும்புவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.
(வயது 19 - 22 வரை)

நிர்வாக முகாமையாளர்
விற்பனை பிரதிநிதி
தொழில்நுட்பவியலாளர்
(A/L Physics C கட்டாயம்)

தொ.பே : 0777 837 991
(காலை 9 மணி - 5 மணி வரை மட்டும் அழைக்கவும்)

## பதவி வெற்றிடங்கள்

யாழ்நகரில் அமைந்துள்ள **பிரபல்யமான காட்சியறைக்கு இருபாலாரிடமும்** விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. Customer Service Assistant
2. Cashier

உடன் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
விளம்பர இல. JF/1028
C/O உதயன்
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**ONE BED ROOM APPARTMENT FOR RENTAL**

சகல வசதிகளையும் கொண்ட வெளிநாட்டு நவீன வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உடன் உண்டு
(நாவலர் வீதி TCTயிற்கு மிக அண்மையில்)

CONTACT : 077 6625 666

## தேவை (Pharmacist)

புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ள பார்மசிக்கு தகுதியான Pharmacist தேவை.

இடம் : வலிகாமம் வடக்கு
தொடர்பு 077 707 3538

## Individual English Classess

Grade 7 to பட்டதாரிகள், தொழில் புரிபவர்கள் English medium Courses செய்பவர்கள் O/L A/L

077 766 8725 யாழ் நகரில்

## VIDEO & PHOTO சேவை

1) Birth Day
2) Puberty Ceremoney,Etc

Call: 077 543 9914

## TAXTAIN CLASSES One & Only Person

16 வருடங்கள் அனுபவத்தினூடாக மீண்டும் களத்தில்

For H.N.D.A (1 Year)
Management (Final)
B.Com (Final)

Contact : 077 543 9914
K. Thangarajah
B.Sc (P.F.T) Special (Dip In Ed.)
(Certificate in Computarized Accounting)

# UI/UX Designer

## Responsibilities

- Work with the client and development team to gather and evaluate user requirements.
- Audit and review current website structure.
- Identify and troubleshoot UX problems (e.g. responsiveness).
- Develop UI/UX mockups and prototypes using Adobe XD.
- Illustrate design ideas using storyboards, process flows, and sitemaps.
- Conduct layout adjustments based on user feedback.
- Adhere to the client's style standards on fonts, colors, and images.

## Requirements

- Previous work experience as a UI/UX Designer & Minimum 2+ years experience in the same field.
- Portfolio of web design projects.
- Knowledge of wireframe tools and basic front-end languages.
- Ability to create storyboards, user flows, process flows wireframes, and site maps.
- Up to date with the latest UI/UX trends, and technologies.

## About Smart Skill Soft Pvt Ltd

Smart skill soft pvt ltd is a Startup company which develops Websites, desktop apps & Mobile apps. This is a full time work with minimum 1-2 years contract period & 6 months probation period. This is a remote position. We welcome candidates from any location. Resumes are to be submitted in English with expected remuneration. Salary can negotiate based on experience. EPF,ETF & Leave benefits.

Contact : Mrs P. Sivarubini
E mail : admin@smartskillsoft.com
Phone no : +94766096933

# Illustrator

## Responsibilities

- Brainstorming with the marketing and design team to come up with image ideas.
- Preparing and designing illustrations and animations according to client specifications.
- Creating complete illustrations by combining painting, hand-drawn and digitally created images.
- Refining image design using illustration software.
- Enhancing the design concept using a wide range of colors and graphics.
- Applying complex isometric techniques to add perspective to design shapes.
- Ensuring that printed illustrations meet specified color and quality standards.

## Requirements

- Bachelor's degree in fine arts or similar field & Minimum 2 plus years experience in the same field.
- Portfolio of completed illustrations.
- Prior work experience as an Illustrator.
- Drawing, painting and digital drawing skills.
- Knowledge of image editing and design software such as Adobe Illustrator and Photoshop.
- Ability to work under pressure and meet deadlines.
- Strong conceptual and artistic skills.

## About Smart Skill Soft Pvt Ltd

Smart skill soft pvt ltd is a Startup company which develops Websites, desktop apps & Mobile apps. This is a full time work with minimum 1-2 years contract period & 6 months probation period. This is a remote position. We welcome candidates from any location. Resumes are to be submitted in English with expected remuneration. Salary can negotiate based on experience. EPF,ETF & Leave benefits.

Contact : Mrs P. Sivarubini
E mail : admin@smartskillsoft.com
Phone no : +94766096933

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஊரெல்லாம் கொரோனாவே பேச்சு
உடலுக்குள் வந்தால் உயிரே போச்சு
ஊசி போடுறதுக்கு போனாவாம் ஆச்சி
உடனேயே குத்திட்டு போனாவாம் நேர்சி
உள்ளுக்கால வந்தவாவும் போட்டாவாம் ஊசி
ஒரேநாளிலேயே ஆச்சிக்கு ரெண்டு டோஸு
போட்டதால போச்சுதே கொரோனாவின்ர மூச்சு!


- கொரோனா சித்தர்

பக்கங்கள்: 16

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2052 ஆடி 16 ஞாயிற்றுக்கிழமை (01.08.2021) சிகரம் : 58



# ஊசியில் ஊசலாடும் உயிர்கள்

## அடுத்தடுத்து நிகழும் மரணங்கள்

## பதறவைக்கும் போதைக் கலாசாரம்



பொழுது சாயும் நேரம்.

○ உளவாளி

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிராமம் ஒன்றின் வீட்டுக்கு முன்பாக வந்து நின்றது ஒரு ஓட்டோ.
அதிலிருந்து 22 வயதான ஒரு இளைஞனை, வேறு இரு இளைஞர்கள் தூக்கிச் சென்று வீட்டுக் ஹோலில்
கிடத்துகின்றனர்.
"உங்கட மகன் மயங்கிட்டார் என்று மட்டும் சொல்லிவிட்டு வந்த வேகத்தில் அதே ஒட்டோவில் ஏறிப் பறந்து
விட்டனர். தந்தை வேலைக்கு சென்றுவிட்டதால் தாயாரும், ஏனைய இரண்டு சகோதரர்களுமே வீட்டில் இருந்
தனர். அவர்களின் நெஞ்சு படபடத்தது. பேச்சு மூச்சற்று அந்தவீட்டின் மூத்த மகன் அசைவற்று கிடக்கிறான்.
அவன் இப்போது விரும்பத்தகாத பழக்கம் ஒன்றுக்கு அடிமையாகி இருக்கிறான் என்று ஏற்கனவே தெரிந்திருந்
ததால் ‘ அதுதான் மயங்கி இருக்கிறான் போல எழும்பிவிடுவான்' என தனக்குள் சமாதானமாகினார் தாயார்.
"கடவுள் எந்தக் கஷ்டமும் இல்லாத நல்ல வாழ்க்கையைக் குடுத்திட்டு என்ர மூத்த பிள்ளையை எவ்வளவு செல்லமா
வளர்த்தம் இண்டைக்கு கூடாத கூட்டங்களோட சேர்ந்து இந்த நிலைமை என அரற்றிய தாயார், மகனது உடலை
நோக்கினார். அடுத்த கணம் அதிர்ந்தார். அவனது நகங்கள் கருநீல நிறமாக மாறியிருந்தன. உடலும் விறைத்துப்
போனது போல அசைவற்றிருந்தது.
பதறியடித்துக்கொண்டு, இன்னொரு ஓட்டோவைப் பிடித்து அவனை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். "அங்கே..
அவர் ஏற்கனவே இறந்திட்டார்" என்று மருத்துவர்கள் உதட்டைப் பிதுக்கினர்.

12


## அதிர்ச்சியூட்டும் புதிய போதையூட்டல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 83 ஜூலை

## நினைவுகளின் பின்னணியில்

## ராஜமகேந்திரனை நினைவுகூர்தல்



○ நிலாந்தன்

மகாராஜா ஊடகக் குழுமத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவரிடம் சிவராம் பின்வரு மாறு கூறியிருக்கிறார் " உங்களுடைய தலைவர் ராஜமகேந்திரனிடம் நாட்டைக் கொஞ்ச நாளைக்கு ஆளக்குடுத்தால்...வடிவா ஆண்டு காட்டுவாரடா " என்று. தமிழ் மக்கள் ஜூலை 83 ஐ நினைவுகூரும் ஒரு காலகட்டத்தில் ராஜமகேந்திரன் காலமாகியுள்ளார்.

அவர் ஒரு தமிழ்ப் பெருமுதலாளி. ஒரு ஊடகக்குழுமத்தின் தலைவர். எல்லாவற்றுக்கும் அப்பால் தமிழ்மக்களைப் பொறுத்தவரையிலும் அவர் ஒரு நம்பிக்கையின் குறியீடு. எப்படியென்றால் 83 ஜூலையில் அவருடைய சொத்துக்கள் அழிக்கப்பட்டன, எரிக்கப்பட்டன. எனினும், தனது சொத்துக்கள் எரிந்த சாம்பலில் இருந்து அவர் மறுபடியும் முளைத்தெழுந்தார். அவரோடு சேர்ந்து தொழிலைத் தொடங்கிய அவருடைய சகோதரர் போன்றோர் ஜூலை அழிவுகளின் பின் புலம்பெயர்ந்து போய்விட்டார்கள். ஆனால் ராஜமகேந்திரன் தான் வேர் கொண்ட இடத்திலேயே தொடர்ந்து நிலைத்துநின்றார். தன் சொந்தச் சாம்பலிலிருந்து ஒரு ஊடக சாம்ராஜ்யத்தை கட்டிஎழுப்பினார். தனது ஊழியர்களிடம் அவர் அடிக்கடி கூறுவாராம் "எனது சொத்துக்களை எரித்தார்கள். எனினும் நான் மீண்டு எழுந்தேன்" என்ற தொனிப்பட.

அவருடைய அரசியல் தொடர்பில் கேள்விகள் உண்டு. அவர் பிரேமதாசாவுக்கு நெருக்கமானவர். கொழும்பு சிங்கள உயர் குலத்தைச் சேர்ந்த ஒரு பிரமுகர் . அவருடைய இரண்டாவது மனைவி, ஒரு சிங்களப்பெண்.

அவருடைய புதல்வர்கள் திருமணம் செய்ததும் சிங்களப் பெண்களைத்தான். அவர் ஒரு தமிழராகப் பிறந்தாலும் வாழ்க்கை முறையால் சிங்கள உயர்குழாத்தில் ஒருவராக மாறிவிட்டிருந்தார். இந்தக் கட்டுரை அவரை ஒரு தமிழ்த் தேசியவாதியாக முன்னிறுத்த வில்லை, மாறாக தோல்வியை ஏற்றுக்கொள்ளாத ஓர்மத்தின் முன்னுதாரணமாகவே அவரை முன்னிறுத்துகிறது.

பிரேமதாசவுக்கும் அவருக்கும் இடையிலான நெருக்கம் தான் அவருடைய எஸ்.சிலோன் பைப் கொம்பனி அதிகம் எழுச்சி பெறக் காரணம் என்று ஒரு விளக்கம் உண்டு. பிரேமதாசவின் கிராம உதயம் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட புதிய வீடுகளுக்கு பிளாஸ்டிக் குழாய்களை மகாராஜா கொம்பெனியே விநியோகித்தது என்றும் அதுவும் அந்த நிறுவனம் அதிகம் லாபம் அடைய ஒரு காரணம் என்று கூறப்படுகிறது. அவரை அவருடைய ஊடக குழுமத்தை யு.என்.பிக்கு சார்பானதாகவே உலகம் பார்க்கிறது. யு.என்.பிக்கும் அவருக்குமுள்ள நெருக்கமும் சிங்கள உயர் குழாத்தில் அவர் பெற்றிருந்த முதன்மையும்தான் அவரை எதிர்க்கட்சிகளை துணிந்து அம்பலப்படுத்தும் ஓர் ஊடக முதலாளியாக நிலை நிறுத்தியது. ராஜபக்சக்கள் ஆட்சிக்கு வந்ததும் 2006 அளவில் அவருடைய முகத்துடன் புலி வாலை இணைத்து கொழும்பில் பரவலாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. அவருடைய சகோதரியின் கணவரான நடேசன் சத்தியேந்திராவுக்கும் தமிழ் ஆயுதப் போராட்டத்துக்கும் இடையிலான நெருக்கத்தை குறித்தும் விமர்சனங்கள் எழுந்தன. ஆனால் ராஜமகேந்திரன் பின்வாங்கவில்லை.

அவருடைய ஊடக தர்மம் குறித்து விமர்சனங்கள் உண்டு. அவரை 'தமிழ் ஊடக தாதா' என்று விமர்சிப்ப வர்கள் உண்டு. மேலும் தென்னிந்தியாவின் வர்த்தகக் குப்பைகளான நாடக சீரியல்களை இலங்கைக்கு இறக்குமதி செய்தவர் என்ற விமர்சனமும் உண்டு. ஆனாலும் ராஜமகேந்திரன் ஒரு முதலாளியாகவும் சிங்கள அரசியலில் அதிகம் தாக்கத்தை ஏற்படுத்திய ஓர் ஊடகக் குழுமத்தின் தலைவராகவும் கொழும்பில் நிமிர்ந்து நின்றார். எரித்த இடத்திலேயே மீளத் துளிர்த்து பெருவிருட்சமாக வளர்ந்து காட்டினார். அது ஊடகத்துறைக்கு மட்டுமல்ல தமிழ் முதலாளிகளுக்கு மட்டுமல்ல முழுத்தமிழ் மக்களுக்கும் ஒரு குறியீட்டு உண்மையை உணர்த்துகிறது. எந்தத் தலைநகரத்தில் இருந்து தமிழ்மக்களை குறிப்பாக தமிழ் முதலாளிகளை துரத்தவேண்டும் என்று திட்டமிட்டு 83 ஜூலை அழிவுகள் முன்னெடுக்கப்பட்டனவோ அதே தலைநகரத்தில் பீனிக்ஸ் பறவைபோல ஒரு தமிழர் மீண்டும் எழுந்தார்.

இது ஜூலை 83ஐ நினைவுகூரும் காலம். ஜூலை 83ஐ நினைவுகூர்வது என்பது இனப்படுகொலையை நினைவு கூர்வது தான். தென்னிலங்கையில் தமிழ்மக்கள் பெற்றிருந்த பொருளாதார மற்றும் சமூக முக்கியத்துவத்தை அழிக்கும் நோக்கத்தோடு மிகவும் திட்டமிட்டு முன்னெ டுக்கப்பட்ட ஓர் இன அழிப்பு நடவடிக்கை அது. அதைக் கலவரம் என்று அழைக்கமுடியாது. ஏனென்றால் கலவரம் எனப்படுவது சம்பந்தப்பட்ட இரு சாராரும் கைகலப்பில் ஈடுபடுவது. ஆனால் அது தென்னிலங்கையில் நிராயுத பாணிகளாக நின்ற தமிழ்மக்கள் மீது திட்டமிட்டு நடத்தப்பட்ட ஒரு தாக்குதலே. கொழும்பை தங்களுடைய தலைநகரமாகவும் தென்னிலங்கையை தமது தாயகமாகவும் நம்பிய அப்பாவித் தமிழர்களை அவர்கள் கொன்றொழித்தார்கள். அவர்களுடைய சொத்துக்களை எரித்து அழித்தார்கள். உங்களுடைய தாயகம் காங்கேசன்துறைக்கப்பால் இருக்கிறது போங்கள் என்று கூறி கப்பலில் ஏற்றி அவர்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைத்தார்கள்.

83 ஜூலை எனப்படுவது பின்வரும் விளைவுகளை ஏற்படுத்தியது. முதலாவது தென்னிலங்கை தமிழ்மக்களுக்கு பாதுகாப்பான இடம் அல்ல என்ற உண்மையை உணர்த்தியது. இரண்டாவதாக இலங்கைத்தீவு பல்லினத்தன்மை மிக்கது அல்ல என்ற ஒரு உண்மையை வெளிக்காட்டியது. மூன்றாவதாக அது இந்தியத் தலையீட்டுக்கு வழிவகுத்தது. நாலாவதாக தமிழ்ப்புலப்பெயர்ச்சியின் இரண்டாவது அலையைத் தொடக்கிவைத்தது. இந்த நான்கு விளைவுகளின் தொகுப்பே பின்வந்த தசாப்தங்களும் ஈழப்போரும் ஆகும்.

முதலாவதாக தென்னிலங்கை தமிழ் மக்களுக்கு பாதுகாப்பானது அல்ல என்பதை உணர்த்தியது. ராஜமகேந்திரன் அப்போதிருந்த அரசாங்கத்தின் பிரதமரான பிரேமதாசாவுக்கு நெருக்கமானவராக காணப்பட்டார். எனினும் இரத்மலானையில் அமைந்திருந்த அவருடைய எஸ்.லோன் கொம்பனி எரிக்கப்படுகையில் அதை தடுக்கவோ காப்பாற்றவோ பிரேமதாசாவால் முடியவில்லை. அதுதான் அன்றைக்கிருந்த கொழும்பு யதார்த்தம்.

ஜூலை 83இன் மூலம் ஆட்சியாளர்கள் தமிழ்மக்களுக்கும் உலகத்துக்கும் ஒரு உண்மையை வெளிப்படுத்தினார்கள். அது என்னவென்றால் பல்லினத்தன்மைமிக்க ஒரு தீவை கட்டியெழுப்ப நாங்கள் தயாரில்லை என்பதுதான். இது இலங்கைத் தீவை உலக அளவில் அவமானப்படுத்தியது. இது முதலாவது மற்றும் இரண்டாவது விளைவுகள்

மூன்றாவது விளைவு இந்தியத் தலையீடு. ஜூலை 83ஐ முன்வைத்து இலங்கைத் தீவின் இனப்பிரச்சினையில் இந்தியா தலையிட்டது. அதன் உச்சக்கட்டம்தான் இந்திய இலங்கை உடன்படிக்கை. அதற்குப் பின்னரும் பல்வேறு விளைவுகள் ஏற்பட்டன. இன்றுவரை அந்த விளைவு களைத்தான் இலங்கைத்தீவு அனுபவிக்கிறது. முதலில் இந்தியா இறங்கியது. பின்னர் மேற்கு நாடுகளும் ஜப்பானும் அமெரிக்காவின் கருவிகளாக இறங்கின. இப்பொழுது சீனா இறங்கியிருக்கிறது. அதன் மெய்யான பொருளில் இலங்கைத்தீவு அதன் இறைமையை இழந்துவிட்டது. அது இப்பொழுது பேரரசுகளால் 'பிச்சுப்பிடுங்கப்படும்' ஒரு அப்பம்.

அதாவது 83 ஜூலையில் இருந்து தொடங்கி இலங்கைத்தீவு அதன் இறைமையை இழக்கத் தொடங்கியது. தமிழ்மக்களின் உரிமையை ஏற்றுக்கொள்ளாத தென்னிலங்கை ஆட்சியாளர்கள் மொத்தத்தில் இலங்கைத் தீவின் ஒட்டுமொத்த இறைமையையும் இழந்துவிட்டார்கள். இது 3 ஆவதுவிளைவு. நாலாவது விளைவு புலப்பெயர்ச்சி. தமிழ்ப்புலப் பெயர்ச்சியின் இரண்டாவது அலை 83 ஜூலையில் இருந்து தொடங்கியது. இலங்கைத்தீவு தமக்கு பாதுகாப்பான ஒரு நாடு அல்ல என்பதை உணர்ந்த தமிழர்கள் அதிகரித்த அளவில் அலையலையாக புலம்பெயரத் தொடங்கினார்கள். இவ்வாறு புலம்பெயர்ந்த தமிழர்களின் மத்தியில் ராஜமகேந்திரனின் சகோதரர் இருந்தார். ஆனால் ராஜமகேந்திரன் இருக்கவில்லை. இப்படி புலம்பெயர்ந்த தமிழர்கள் உலகம் முழுவதிலும் அகதிகளாக பரவிச்சென்றார்கள். ஆனால் சில தசாப்தங்களுக்குள்ளேயே உலகின் கவர்ச்சிமிக்க புலம்பெயர் சமூகமாக மேலெழுந்தார்கள். துடிப்பான, அரசியல் ஆர்வம்மிக்க, முதலீட்டு ஆர்வம்மிக்க, கடுமையாக உழைக்கின்ற, சாதிக்கவேண்டும் என்ற தாகமுடைய, தமது தாயகத்தை புலம்பெயர்ந்த நாடுகளில் ஊறுகாய் போட்டு வைத்திருக்கின்ற ஒரு டயஸ்போறாவாக தமிழர்கள் மேலெழுந்தார்கள்.

எந்த தலைநகரத்தில் இருந்து அவர்கள் துரத்தியடிக்கப்பட்டார்களோ அதே தலைநகரத்தை நோக்கி வெளிநாட்டு பிரஜைகளாக டொலரோடு வந்திறங்கினார்கள். எந்தத் தலைநகரத்தில் அவர்களுடைய சொத்துக்கள் எரிக்கப்பட்டனவோ அதே தலைநகரத்தில் டொலரைக் கொடுத்து புதிய சொத்துக்களை வாங்கிக் குவித்தார்கள். குறிப்பாக ஆயுத மோதல்கள் முடிவுக்குவந்த பின்னர் தென்னிலங்கையில் நிதி ரீதியாக வங்குரோத்தாகிய சிங்களக் கொம்பனிகளை வாங்கும் சக்திமிக்கவர்களாக மேலெழுந்தார்கள்.

இப்பொழுது புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் எனப்படுவது உலகின் கவனிப்புக்குரிய ஒரு மக்கள் கூட்டமாக எழுந்துவிட்டது. அதுமட்டுமல்ல புலப்பெயர்ச்சியே தங்களை மேலும் பலப்படுத்தியிருக்கிறது என்பதை நிரூபித்திருக்கிறார்கள். அது தோற்கடிக்கப்பட முடியாத ஒரு மக்களாக தமிழ்மக்களை நிரூபித்திருக்கிறது. தென்னிலங்கையின் நகரங்களில் ரூபாயோடு திரிந்த தமிழர்களை ஜூலை 83 டொலரோடு திரிபவர்களாக மாற்றியிருக்கிறது. அதாவது ஜூலை 83 இல் தென்னிலங்கையிலிருந்து தமிழ்மக்களைத் துரத்தியவர்கள் தங்கள் இலக்குகளை அடையமுடியவில்லை என்பதைப் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் நிரூபித்திருக்கிறது.

இப்படிப்பட்டதோர் அரசியல் சமூகப்பொருளாதார பின்னணியில் ராஜமகேந்திரன் புலம்பெயராது தனது சொத்துக்கள் எரிந்த சொந்த சாம்பலில் இருந்து மீண்டும் எழமுடியும் என்பதை கொழும்பில் தொடர்ந்தும் வசித்தபடியே நிரூபித்தார். அவருக்கும் யூ.என்.பிக்கும் இடையிலான உறவும் சிங்கள உயர்குழாத்தில் அவருக்கிருந்த முதன்மையும் அதற்குப் பக்கபலமாக இருந்தன. எனினும் தமது சொந்த சாம்பலிலிருந்து தமிழர்கள் மீண்டும் உயிர்த்தெழமுடியும் என்ற நம்பிக்கையை அவர் தமிழ்மக்களுக்கு விட்டுச் சென்றிருக்கிறார். அவருடைய அரசியலை குறித்தும் அவருடைய ஊடக குழுமம் குறித்தும் தனியாக ஆராயவேண்டும். அதில் விமர்சனங்கள் உண்டு. ஆனால் இப்பொழுது தமிழ்மக்கள் அவரை நினைவுகூர வேண்டிய இடம் எதுவென்றால் எரிக்கப்பட்ட பின்னரும் இடிக்கப்பட்ட பின்னரும் இனப்படுகொலைக்குப் பின்னரும் நிமிரலாம் என்ற நம்பிக்கையின் தமிழ்க்குறியீடுகளில் அவரும் ஒருவர் என்பதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ந.பரமேஸ்வரன்



# தீராத சாபங்கள்

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றிய சிறுமி ஹிஷாலினியின் மரணம் இலங்கை முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. ஹிஷாலினியின் மரணத்துக்கு நீதிகோரி இலங்கை முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஹிஷாலினியின் மரணம் நாடாளுமன்றத்திலும் பேசுபொருளாகியுள்ளது. முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மீது ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஆளுந்தரப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

பொதுவாக வீட்டு வேலைக்குச் செல்லும் சிறுவர், சிறுமிகள் மீது எஜமானர்கள் வன்முறைகளை பாவிப்பது நெடுங்காலமாக உலகெங்கும் நடைபெற்றுவரும் ஒருவிடயம். எல்லா எஜமானர்களும் தம்மிடம் பணியாற்றுபவர்களை துன்புறுத்துகிறார்கள் என்று சொல்லமுடியாது. அரச குடும்பத்தில் பணிப்பெண்ணாக பணியாற்றி எஜமானர்களின் நன்மதிப்பைப் பெற்று தமது குடும்பத்தினருக்கு விருந்தினர் பிரஜாவுரிமை பெற்று குடும்பமாக மத்திய கிழக்கில் குடியேறிய சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன என்பதையும் மறுப்பதற்கில்லை.

ஒப்பீட்டளவில் பார்க்கும்போது ஏனைய நாடுகளை விட, மத்திய கிழக்கில் பணிப்பெண்கள் மீதான துன்புறுத்தல்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. மத்திய கிழக்கு நாடுகளில் பணிப்பெண்களாக பணியாற்றி துன்புறுத்தப்பட்ட அல்லது கொல்லப்பட்ட பெண்கள் எவருக்குமே இதுவரை நீதி கிடைக்கவில்லை என்பது துரதிர்ஷ்டம். மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாக சென்று சடலமாக திரும்பிய பெண்கள் விடயத்தில்கூட இலங்கை அரசாங்கம் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது கவலைக்குரிய விடயம். மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாக சென்று சடலமாக திரும்பிய பெண்களின் விபரமும் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட பெண்களின் விபரமும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் வெளியிடப்பட்ட புள்ளிவிபரங்களின் பிரகாரம் 2015- 2018 காலப் பகுதியில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாகச் சென்ற 21 பெண்கள் சடலமாகத் திரும்பியுள்ளனர் அல்லது கொல்லப்பட்டுள்ளனர். இதைவிட 107 பேர் தற்கொலை செய்துள்ளனர். 1981 -2009 காலப்பகுதியில் 333 பேர் கொல்லப்பட்டனர் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையை மேற்கோள்காட்டி இன்னொரு ஆய்வறிக்கை கூறுகிறது. இவ்வாறு மத்திய கிழக்கு நாடுகளில் கொல்லப்பட்டவர்களில் 75 வீதமானோர் 35 வயதுக்கு குறைந்தவர்கள் எனவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கொல்லப்பட்டவர்களையும் தற்கொலைசெய்து கொண்டவர்களையும் விட மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாகச் சென்று சித்திரவதைகளை அனுபவித்தவர்களின் புள்ளிவிபரங்களையும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் வெளியிட்டுள்ளது. இதன்படி, 2015-2018 காலப்பகுதியில் மத்திய கிழக்கு நாடுகளில் சித்திரவதைகளை அனுபவித்தவர்களில், 2765 பேர் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். ஜேர்னல் ஒஃப் பொரன்ஸிக் அண்ட் லீகல் மெடிசின் (Journal of Forensic and Legal Medicine) நடத்திய ஆய்வின் பிரகாரம், 2014 ஒக்ரோபர் முதல் 2015 பெப்ரவரி வரையான காலப்பகுதியில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாகச் சென்று சித்திரவதைகளை அனுபவித்த பெண்களின் விபரம் வருமாறு -


| | |
|---|---|
| அடிகாயங்களுக்கு உள்ளானோர் | - 10 |
| தீக்காயங்களுக்கு உள்ளானோர் | - 02 |
| பாலியல் துன்புறுத்தல்களுக்குள்ளானோர் | - 05 |
| உடல் ரீதியாக காயங்களுக்குள்ளானோர் | - 12 |
| உடலில் தழும்புகளுடன் திரும்பியோர் | - 03 |
| உளரீதியான பாதிப்பு | - 16 |
| எலும்பு முறிவு | - 02 |
| நிரந்தர அங்கவீனம் | - 04 |
| கர்ப்பம் | - 03 |

ஏனைய விடயங்களான ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட சம்பளம் வழங்காமை, குடும்பத்தவர்களுடன் தொடர்புகொள்ள அனுமதி மறுக்கப்பட்டமை, கடுமையான வார்த்தைப் பிரயோகம் போன்ற விடயங்கள் மேலே தரப்பட்டுள்ள புள்ளிவிபரங்களில் இடம்பெறவில்லை. மத்தியகிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாகச் செல்லும் பெண்களில் 96 வீதமானோர் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்றனர் எனவும் 80 வீதமானோர் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்த புள்ளிவிபரங்களுக்கு மேலதிகமாக சர்வதேச ஊடகங்களில் இடம்பிடித்த சம்பவங்களும் உள்ளன.

கும்புறுப்பிட்டியைச் சேர்ந்த ஆரியவதி என்ற 49 வயது பெண்மணி உடலில் 13 ஆணிகளும் 05 ஊசிகளும் ஏற்றப்பட்ட நிலையில் நாடு திரும்பியிருந்தார். கிட்டத்தட்ட ஒவ்வொரு ஆணியும் அவரது உடலில் 3- 5 செ.மீ ஆழத்துக்கு ஏற்றப்பட்டிருந்தன.

இதேபோல் குவைத்தில் பணியாற்றிய லட்சுமி என்ற 38 வயது பெண்மணி தனது சம்பளப் பணத்தை கேட்டதற்காக உடலில் 14 ஆணிகள் ஏற்றப்பட்ட நிலையில் நாடு திரும்பியிருந்தார். தங்கவேலு சரோஜினி என்ற பெண்மணி கை, கால், கழுத்து போன்ற இடங்களில் தீக்காயங்களுடன் நாடு திரும்பியிருந்தார். இவர் தான் பணியாற்றிய வீட்டு உரிமையாளர் தன்னைக் கொலைசெய்ய முயற்சித்தார் எனவும் கூறியிருந்தார். இவை இலங்கைப் பெண்களின் அனுபவங்கள். இவற்றை விட பங்களாதேஷிலிருந்து பணிப்பெண்ணாகச் சென்ற ஒருவர் தனது எஜமானி மின்ன
முத்தியால் சூடு வைத்தார் என சர்வதேச ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். இந்த நிலையில் ஷரீஆ சட்டத்தை இலங்கையிலும் அமுல்படுத்த வேண்டுமென முஸ்லிம் அரசியல்வாதிகள் அவ்வப்போது கூறிவருகின்றனர். ஷரீஆ சட்டம் தனியே முஸ்லிம்களுக்கு மட்டுமா அல்லது இலங்கை முழுவதற்குமா என்பது பற்றி இவர்கள் கூறவில்லை. ஷரீஆ சட்டத்தின் கீழ் வீட்டுபணிப்பெண்களுக்கு எதுவித பாதுகாப்புமில்லை என்பதை மத்திய கிழக்கு சம்பவங்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.



யாழ்ப்பாண வீடுகளிலும் மலையக சிறுவர், சிறுமிகள் 1980 வரை வீட்டு வேலைக்கென அழைத்துவரப்பட்டுள்ளனர். வீட்டு வேலைக்கென அழைத்து வந்த சிறுமிகளை தமது பாலியல் தேவைகளுக்கு பயன்படுத்திய எஜமானர்களும் யாழ்ப்பாணத்தில் இருந்துள்ளனர். ஆனால் சித்திரவதை, கொலை போன்ற விடயங்கள் இலங்கையில் இடம்பெற்றனவா எனத் தெரியவில்லை. ஹிஷாலினியின் மரணம் இலங்கையில் இடம்பெற்ற முதலாவது சம்பவம் என்று சொல்லலாம். இதற்கு முன்னர் இவ்வாறான சம்பவங்கள் ஏதாவது நடைபெற்றதோ தெரியவில்லை.

ஹிஷாலினியின் மரணம் கொலையா அல்லது விபத்தா என்பது பற்றி இன்னமும் உறுதியான தகவல்கள் கிடைக்கவில்லை. ஆனால் ரிஷாத்தின் வீட்டில் நடைபெற்ற விடயங்களை வைத்துப் பார்க்கும்போது இது ஒரு கொலை என்றே எண்ணத் தோன்றுகிறது. வீட்டில் வாகனங்களும் சாரதியும் இருக்கக்கூடியதாக அம்புலன்ஸை வரவழைத்தமை, சி.சி.ரி.வி கமராக்களை நிறுத்தியமை, சந்தேகநபர்களின் வாக்குமூலங்களில் காணப்படும் முரண்பாடு போன்ற விடயங்கள் இது ஒரு கொலை என்றே எண்ணத் தோன்றுகின்றது.

ஹிஷாலினியின் மரணத்தில் அரசியலும் புகுந்து விளையாடுகிறது என்பதை மறுப்பதற்கில்லை. திவயின பத்திரிகையும் அவ்வப்போது சுடச்சுடச் செய்திகளை வெளியிட்டுவருகிறது; திவயினவின் செய்திகள் எவ்வளவு தூரம் நம்பகத்தன்மை வாய்ந்தவை என்பது இலங்கை மக்கள் அனைவருக்கும் நன்கு தெரியும். இந்தநிலையில், ரிஷாத்தை மஹிந்த காப்பாற்றுவார் என பிக்கு ஒருவர் தெரிவித்துள்ளார். ஆனால் பிரதமர் மஹிந்த, "ஹிஷாலினியின் விடயத்தில் எந்தவித அரசியல் தலையீடுகளுக்கும் இடமளிக்கப்படமாட்டாது" என கூறியுள்ளார். ஹிஷாலினியின் மரணம் அரசியல்மயப்படுத்தப்படாமல் அவளுக்கு மட்டுமல்லாமல், அவளைப் போல சிறையிருக்கும் குழந்தைத் தொழிலாளிகளுக்கும் நீதி கிடைக்க வேண்டும். அவர்களின் சாபம் தீர வேண்டும். ■





உங்கள் படைப்புக்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?


- சிறுகதை
- பத்தி எழுத்து
- கட்டுரை
- கவிதை
- ஓவியம்

எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்க காத்திருக்கிறோம்.
உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி

சஞ்சீவி
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# 3 முக்கியமான நிகழ்வுகளும் ஈழத்தமிழர்களின் புவிசார் அரசியலும்

அ.நிக்ஸன்

ஈழத்தமிழர் விவகாரத்தை புவிசார் அரசியல் நிலைமைகளுக்கு ஏற்ப கையாண்டு, இலங்கைத்தீவின் இறைமை உள்ளிட்ட ஒற்றையாட்சி அரசைப் பாதுகாக்கும் நடைமுறைகளையே சிங்கள ஆட்சியாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர் . 2009 ஆம் ஆண்டுக்கு முன்னரான புவிசார் அரசியலைப் பயன்படுத்தி அமெரிக்கா, இந்தியா மற்றும் சீனா போன்ற வல்லாதிக்க நாடுகளிடம் இருந்து இராணுவ உதவிகளைப் பெற்று அப்போதைய இலங்கை இராணுவத்தின் பலவீனங்கள் சீர்செய்யப்பட்டன.

அதன்மூலம் ஈழப்போர் இல்லாதொழிக்கப்பட்டது. அதன் பின்னரான சூழலில் உருவான இந்தோ -பசுபிக் பிராந்தியப் போட்டிகளைப் பயன்படுத்தி, கடந்த பத்து ஆண்டுகளாக இதே வல்லாதிக்க நாடுகளிடம் இருந்து பெருமளவு நிதிகளைப் பெற்றுப் பொருளாதாரத்தில் இலங்கையை முன்னேற்றியும் வருகின்றனர் சிங்கள ஆட்சியாளர்கள். அரசியல் கட்சிச் செயற்பாடுகளுக்கு அப்பால் இலங்கை இராஜதந்திர சேவையின் ஊடாக உயர் அதிகாரிகள் குழு ஒன்று புதிய திட்டங்களில் ஈடுபடுத்தப்பட்டுமிருந்தது. 2015 ஆம் ஆண்டு மைத்திரி - ரணில் அரசாங்கத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தப் புதிய நடைமுறை, தற்போது ராஜபக்ச அரசாங்கத்தில் மெருகூட்டப்பட்டிருக்கிறது. மகாநாயக்க தேரர்கள், துறைசார்ந்த நிபுணர்கள் உள்ளிட்ட சாதாரண சிங்கள மக்களின் ஆலோசனைகள்கூட இங்கே பெறப்படுகின்றன.

இதற்கு இரண்டு வகையான அணுகுமுறைகள் கையாளப்படுகின்றன. ஒன்று, சர்வதேசத்தில் உள்ள புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவித்தல் அல்லது அந்த அமைப்புகளை இலங்கை ஒற்றையாட்சி அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ற முறையில் மாற்றியமைக்கும் திட்டங்களை வெளிநாட்டில் உள்ள இலங்கை இராஜதந்திரிகள் மூலமாக முன்னெடுத்தல். (இந்தத் திட்டத்துக்கு அமெரிக்கா ,பிரித்தானியா, ஜேர்மன் மற்றும் இந்திய இராஜதந்திரிகள் பலரும் ஒத்துழைக்கின்றனர் என்ற குற்றச்சாட்டும் உண்டு)

இரண்டாவது, வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் காணிகள், தமிழர்களின் மரபுரிமைகளை மாற்றியமைத்தல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகிய திட்டங்களை கொழும்பை மையமாகக் கொண்ட இலங்கை ஒற்றையாட்சி அரச திணைக்களங்கள் மூலம் கையாளுதல். இதனால் வடக்கு, கிழக்கு பகுதிகளில் உள்ள மாவட்ட அரச அதிபர் பதவிகள், பிரதம செயலாளர் பதவிகளில் தமிழர்கள் இருந்தாலென்ன சிங்களவர்கள் இருந்தாலென்ன என்ற நிலை.

இந்த இரு அணுகுமுறைகளும் 2015 ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. தற்போது அதற்கு மேலும் சட்ட வலு கொடுக்கப்பட்டு, சர்வதேசத்துக்கும் நியாயப்படுத்தப்படுகின்றது.

இதன் காரணமாகவே தமிழர்கள் ஒரு தேசம் என்பதை வெளியுலகுக்கு வெளிப்படுத்த வேண்டுமெனவும், தமிழ்த் தேசியக் கட்சிகள், தமது கட்சி அரசியல் செயற்பாடுகளுக்கு அப்பால் ஒன்றிணைந்து ஒருமித்த குரலாக வெளியுறவுக் கொள்கை ஒன்றை வகுக்க வேண்டுமென்றும் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், ஆய்வாளர்களான எம். நிலாந்தன், சி.ஆ. யோதிலிங்கம் ஆகியோர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர் போலும். ஆனால் இதுவரைக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகள் அவ்வாறான செயற்பாடுக்கு இணங்கியதாக இல்லை. கட்சி அரசியலுக்கு வெளியே நிபுணத்துவம் வாய்ந்த தமிழ் அதிகாரிகளை வெளியுறவுக் கொள்கைக் கையாள ஒரு குழுவாகவும், பொருளாதாரத் திட்டங்களை முன்னெடுக்க மற்றுமொரு குழுவாகவும் தெரிவுசெய்ய வேண்டும். சிங்கள ஆட்சியாளர்கள் மேற்படி இரு அணுகுமுறைகளைக் கையாள்வது போன்று தமிழ்த்தேசியக் கட்சிகளும் தமது தேர்தல் அரசியலுக்கு அப்பால், நிபுணத்துவம்மிக்க குழுக்களை நியமிக்க வேண்டும் என்பதை தற்போதைய புவிசார் அரசியல் கற்பிதம் செய்கின்றது. கடந்த ஒரு வாரத்தில் ஆசியப் பிராந்தியத்தில் முக்கியமான மூன்று நிகழ்வுகள் இடம்பெற்றிருப்பதைத் தமிழர்கள் அவதானிக்க வேண்டும்.

ஒன்று, அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அன்ரனி பிளின்கென், புதுடில்லிக்குச் சென்று இந்தியப் பிரதமர் மோடியைச் சந்தித்திருக்கிறார்.

இரண்டாவது, அமெரிக்கத் துணை வெளியுறவு அமைச்



சர் வெண்டி ஷெர்மன் சீனாவுக்குச் சென்று சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி, சீன வெளியுறவுத் துணை அமைச்சர் ஸீ பெங் ஆகிய இருவரையும் தனித்தனியாகச் சந்தித்து அமெரிக்க - சீன உறவு குறித்து பேசியிருக்கிறார்.

மூன்றாவது இந்தியாவின் அருணாச்சல பிரதேசம் அருகேயுள்ள திபெத் பகுதிக்கு சீன ஜனாதிபதி ஜிங்பிங் திடீரெனச் சென்றிருக்கிறார்.

இந்தியாவும் சீனாவும் வர்த்தக உறவில் அதிகளவு வருமானத்தை ஈட்டிவரும் நிலையில், அமெரிக்காவும் சீனாவும் வர்த்தக உறவுகளை ஒவ்வொரு ஆண்டும் புதுப்பித்தும் வருகின்றன. ஆனால் இந்தியா சீன எல்லை மோதல் மற்றும் இந்திய எல்லைகளில் சீனப் படைக்குவிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இதனால் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள பதற்ற நிலையைச் சாதகமாக்கி இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் இந்தியாவை மையப்படுத்திய இராணுவ உபாயங்களை அமெரிக்கா கையாளுகின்றது.

இவ்வாறான சிக்கல்களுக்கு மத்தியில் அரசியல் ரீதியான உறவுகளையும் சீர்செய்ய இந்த வல்லாதிக்க நாடுகள், இலங்கைத்தீவை மையமாகக்கொண்டு தமது நகர்வுகளை மேற்கொள்கின்றன.

இந்த நகர்வுகளில் இரண்டு வகையான நோக்கங்கள் வல்லாதிக்க நாடுகளிடம் உள்ளன. ஒன்று, சிங்கள ஆட்சியாளர்களைத் திருப் திப்படுத்த அதிகளவு முதலீடுகளைச் செய்வது மற்றும் நிதியுதவிகளை ஏட்டிக்குப் போட்டியாக வழங்குவது. இலங்கை இராணுவத்தையும் தமது பிராந்தியத் தேவைக்கு ஏற்ப நவீனமயப்படுத்துவது.

இரண்டாவது வடக்கு,கிழக்கு பிரதேசங்களில் முதலீடு அல்லது அபிவிருத்தி என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் திட்டங்களை, தமிழர் தாயகக் கோட்பாட்டைச் சிதைக்க வேண்டுமென்ற சிங்கள ஆட்சியாளர்களின் சிந்தனைகளை உள்வாங்கிச் செயற்படுத்துவது.

இதனை அமெரிக்க, இந்திய அரசுகள் ஈழத்தமிழர்களை சமாதானப்படுத்தியும் ஏமாற்றியும் செய்ய முற்படுகின்றன. மோடியுடன் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அன்ரனி பிளின்கென் நடத்திய பேச்சுக்களில் இந்தோ -பசுபிக் பிராந்திய பாதுகாப்பு விவகாரத்தில் குவாட் (QUAD) அமைப்பின் செயற்பாடுகளை துரிதப்படுத்துவது மற்றும் இலங்கை. மாலைதீவு போன்ற நாடுகளின் ஒத்துழைப்பைப் பெறுவது குறித்தே அதிகம் கவனம் செலுத்தியிருக்கிறார். இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், இந்தியத் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவால் ஆகியோருடனும் அவர் பேசியிருக்கிறார்.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் விலக்கி கொள்ளப்படும் நிலையில், அதனால் ஏற்படும் பாதுகாப்பு பிரச்சினைகள் அதன் பின்னரான இலங்கையைப் பிரதானப்படுத்திய இந்தோ பசுபிக் விவகாரங்கள் குறித்தே இந்தியத் தேசிய பாதுகாப்பு ஆலோசகருடன் அன்டனி பிளின்கென் கூடுதலாகப் பேசியிருக்கிறார்.

இந்தியா மிகப்பெரும் பொருளாதாரத் தடுமாற்றத்துக்குள் சிக்கியுள்ள நிலையில், அன்ரனி பிளின்கெனின் பயணம் டில்லிக்கு முக்கியமானதாக அமைந்துள்ளது. இதன் பின்னணியில் சீனாவைக் கட்டுப்படுத்தும் நகர்வுக்கான இலங்கை விவகாரம் முக்கியமானதொரு நிகழ்ச்சி நிரலாகவும் இருந்திருக்கலாம். அதேபோன்று சீனாவில் பேச்சு நடத்திய அமெரிக்கத் துணை வெளியுறவு அமைச்சர் வெண்டி ஷெர்மன், இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் சுமுக நிலைமைகளை ஏற்படுத்துவது உட்பட அரசியல், பொருளாதார மற்றும் இராணுவ நகர்வுகள் குறித்தும் பேசியிருக்கிறார். ஆகவே இலங்கையை மையமாக வைத்து அமெரிக்கா, இந்தியா மற்றும் சீனா போன்ற வல்லரசுகளின் முத்தரப்புப் போட்டி நிலவுவதால், இந்த சந்திப்புகளையும் அதில் எடுக்கப்பட்ட தீர்மானங்களையும் ஈழத்தமிழர்கள் உன்னிப்பாக அவதானிக்க வேண்டும். அதேவேளை, சீன ஜனாதிபதி ஜிங்பிங் முன்னறிவித்தல் இன்றி, கடந்த வாரம் மூன்று நாள் பயணமாக திபெத் சென்றமை, இந்தியாவுக்கு விடுக்கும் அச்சுறுத்தல் என்று அமெரிக்க குடியரசு கட்சி உறுப்பினர் டேவின் நியூன்ஸ் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தியாவின் அருணாச்சல பிரதேச எல்லைப் பகுதியில் உள்ள நியின்சி பிரதேசத்துக்கு சென்ற ஜிங்பிங், அங்கு நடக்கும் வளர்ச்சிப் பணிகள் குறித்து இராணுவ உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியுமுள்ளார். கடந்த 30 ஆண்டுகளில் சீன ஜனாதிபதி ஒருவர் இந்திய எல்லைப் பகுதிக்குச் செல்வது இதுவே முதற் தடவை. இதனால், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு சீனாவின் அடாவடிச் செயலைக் கண்டிக்க சக்தி இல்லை எனவும், சீனாவின் செயல்களுக்கு அமெரிக்கா துணை நிற்பதாகவும் டேவின் நியூன்ஸ் குற்றம் சுமத்தியிருக்கிறார். சீனாவுக்குச் சென்ற அமெரிக்க துணை வெளியுறவுச் செயலாளர் வெண்டி ஷெர்மன் , சீனாவுடனான நல்லுறவு குறித்துப் பேசியதால் அவர் இவ்வாறு கூறியிருக்கலாம்.


(05ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வரலாறு

ந.பரமேஸ்வரன்

## 1505-1948 வரை



யாழ்.கோட்டையைக் கட்டுவதற்காக போர்த்துக்கீசர் மன்னார் திருக்கேதீச்சரம் ஆலயத்தை இடித்து எடுத்துவந்த கற்கள் இவை. அண்மையில் கோட்டைப் பகுதியை புனரமைக்கப்போது இடிபாடுகளுக்குள் இருந்து மீட்கப்பட்டிருந்தன.



### 1645

1645 ஏப்ரல், ஒக்ரோபர் காலப்பகுதியில் மஸ்ஹரினாஸ் (Mascarenhas ) கட்டாயமாக யாழ்ப்பாணத்தில் தங்கவேண்டிய நிலை ஏற்பட்டது. காலநிலை சீரின்மை காரணமாக கோவாவுக்கு செல்லும் வழியில் மன்னாரில் தங்கினான் மஸ்ஹரினாஸ். இந்தக் காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தினதும் தீவகத்தினதும் தோம்பு பதியும் வேலையை மஸ்ஹரினாஸ் பூரணப்படுத்தினான். ஆமவ்ரோ ரொய்ஸ் பூரணப்படுத்திய ஆறு புத்தகங்களுடன் ஏழாவதாக ஒரு புத்தகத்தை இவன் தயாரித்தான். இதில் ஏற்கனவே தயாரித்த ஆறு புத்தகங்களிலும் விடுபட்டவற்றை இவன் உள்ளடக்கினான். இதேபோல் வன்னி, மன்னார், மாதோட்டம், என்பவற்றுக்கும் ஏற்கனவே தயாரித்த புத்தகம் ஒன்றையும் தயாரித்தான். இந்த மூன்று பிரதேசங்களும் முப்பது கிராமங்களை உள்ளடக்கியிருந்ததுடன், இறையாண்மை, நிலப்பரப்பு என்பவற்றையும் கொண்டிருந்தது. இறுதியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் நியாயாதிக்க எல்லைகளைக் குறிப்பிட்டதுடன் அரசாங்க ஆவணமாகவும் பாவிக்கப்பட்டது. பூர்த்தி செய்யப்பட்ட யாழ்ப்பாண தோம்பு அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்தது. 1637 ஆம் ஆண்டு நவம்பர் 28,30, 1642 செப்ரெம்பர் 26 ஆகிய திகதிகளில் எழுதிய கடிதங்களில் யாழ்ப்பாணத்தில் இறைவரி வருமானம் தோம்புகள் ஊடாகவே பெறப்படுவதாக மஸ்ஹரினாஸ் எழுதினான்.

> கோட்டையில் போர்த்துக்கீச ஆட்சியின் அடையாளமாக கத்தோலிக்க மதம் காணப்படுகிறது. ஆனால் யாழ்ப்பாணத்தில் 1650 இல் முற்று முழுதாக கத்தோலிக்கர்களாக இருந்த மக்கள் ஒல்லாந்தர் ஆட்சியில் இந்துக்களாக மாறினர்.

### தோம்பு பதிவு பிந்தியமைக்கான காரணங்கள்

யாழ்ப்பாண தோம்பு பதிவை பூரணப்படுத்துவதற்கு கால்நூற்றாண்டு தேவைப்பட்டது. ஆரம்பத்தில் தோம்பு பதியும் வேலை யாழ்ப்பாணத்தில் வசித்த ப்ரீஎஸிடம் (Frietas) ஒப்படைக்கப்பட்டது. இவரது பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் மட்டுமே அத்துடன் ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் கறுவா வியாபாரத்தை கவனிக்க கொழும்பு செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. தனது ஒவ்வொரு கொழும்பு விஜயத்தின்போதும் தோம்பு பதியும் வேலைகள் பாதிப்படைவதாக ப்ரீஎஸ் சுட்டிக்காட்டியிருந்தான். கோவாவிலிருந்த உயரதிகாரிகள் தோம்பு பூரணப்படுத்தப்படாத நிலையில் மற்றைய வேலைகளை பெரிதாக வரவேற்கவில்லை. தமிழ் ஆவணங்கள் மொழிபெயர்க்க வேண்டியிருந்தமை, யாழ்ப்பாண விவசாய முறைகள் வயல்களின் சராசரி வருமானம், பயிர்கள் என்பன பற்றியெல்லாம் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தமை போன்றனவும் தோம்பு பதிவுகள் பூர்த்தியடை வதில் தாமதத்தினை உண்டாக்கின.

### யாழ்ப்பாண நிலங்களை கையகப்படுத்தலும் தோம்பும்

யாழ்ப்பாண இராச்சியத்தின் தோம்பு, கோட்டை இராச்சியத்தின் தோம்பைவிட சிறந்ததாகக் காணப்பட்டது. கோட்டை இராச்சியத்தின் தோம்புகளின் எல்லைகள் கிராமங்களாகக் காணப்பட்டன. கிராமங்களில் இருந்த வளங்கள் தோம்புகளில் காணப்பட்டன. வயல், மேட்டு நிலம், பயிர்கள் என்றவாறாக கோட்டைத் தோம்பு காணப்பட்டது. யாழ்ப்பாணத் தோம்பில் (வன்னி தவிர்ந்த) மேட்டு நிலத்தில் பனைகள் காணப்பட்டன. வயல் நிலம் சதுரமாக காணப்பட்டது. பயிர்ச்செய்கை நிலம் புறம்பாக இருந்தது. ஒவ்வொரு கிராமத்திலும் பல நூற்றுக் கணக்கான பிரிவுகள் (அலகுகள்) இருந்தன. ஒவ்வொரு நிலமும் விஸ்தீரணம், உரிமையாளர், பயிர்கள், தீரமானிக்கப்பட்ட வாடகை, செலுத்தும் வாடகை போன்ற விடயங்களை உள்ளடக்கியிருந்தது. இந்த நிலங்களிலிருந்து பெருமளவு வாடகை கிடைத்தது. இதனால் ஒரு சில கிராமங்களின் தோம்புகள் அதிகளவு பக்கங்களைக் கொண்டிருந்தன. வடமராட்சியில் அல்வாய் தோம்பு 22 பக்கங்களைக் கொண்டிருந்தது, தென்மராட்சியில் வரணி தோம்பு 37 பக்கங்களைக் கொண்டிருந்தது, வலிகாமத்தில் கோப்பாய் தோம்பு 42 பக்கங்களைக் கொண்டிருந்தது, வட்டுக்கோட்டை தோம்பு 59 பக்கங்களைக் கொண்டிருந்தது. யாழ்ப்பாண தோம்புகள் விவசாய நில வருமானத்துடன் சாதி ரீதியாக சில வரிகளையும் உள்ளடக்கிய பூரணமான ஆவணமாக இருந்தன. யாழ்ப்பாண தோம்பு 2900 பக்கங்களைக் கொண்டிருந்தது. எனினும் யாழ்ப்பாண தோம்பு இப்போது ஒரு இடத்திலும் இல்லை. இலங்கை, கோவா, போர்த்துக்கல் என எங்கும் இல்லை.

### யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க மதம்

கோட்டையில் போர்த்துக்கீச ஆட்சியின் அடையாளமாக கத்தோலிக்க மதம் காணப்படுகிறது. ஆனால் யாழ்ப்பாணத்தில் 1650 இல் முற்று முழுதாக கத்தோலிக்கர்களாக இருந்த மக்கள் ஒல்லாந்தர் ஆட்சியில் இந்துக்களாக மாறினர். பலர் சீர்திருந்திய சமயத்தை( Reformed Church) தழுவிக்கொண்டனர்.

### குருமாருக்கான கொடுப்பனவுகள்

போர்த்துக்கல்லின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களில் வரி வருமானத்துக்கப்பால் திறைசேரியிலிருந்தே கூடுதலான நிதி மத நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டது. ஒரு குருவுக்குரிய கட்டணம் கோவா நாணயமாக வருடமொன்றுக்கு 100 Xerfins ஆக இருந்தது. வருடாந்தம் 4300 கோவா நாணயம் மத நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டது.

கோட்டையுடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாணத்தில் மத நடவடிக்கைகளுக்கு நிலம் இல்லாதிருந்தது. வன்னியிலிருந்த வேராவில் கிராமத்தை தவிர பிரான்சிஸ் கான் திருச்சபை யாழ்ப்பாணத்தை தம்வசம் வைத்திருந்து. இந்து ஆலயங்களில் சொத்துக்கள் எதுவும் இருக்கவில்லை. கோயில் காணிகளைத் தவிர, கோட்டையைப் போன்று பணம் பெறும் நிலங்கள் எதுவும் இருக்கவில்லை. கத்தோலிக்க குருமாருக்கு யாழ்ப்பாணத்திலிருந்து எதுவித வருமானமும் கிடைக்கவில்லை.

(வரலாறு நீளும்)

(04ஆம் பக்கம் தொடர்ச்சி)

## 3 முக்கியமான...

ஆனாலும் இந்தோ பசுபிக் விவகாரம் உள்ளிட்ட பூகோள அரசியல் விவகாரங்களில் அமெரிக்கா மீது குற்றம் சுமத்தியுள்ள சீன வெளியுறவு அமைச்சு, மிகவும் தவறான வழிகாட்டுதலையும், ஆபத்தான கொள்கையையும் அமெரிக்கா மாற்றிக்கொள்ள வேண்டுமென எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து சீனா வெளியுறவுத் துணை அமைச்சர் ஸீ பெங், 'சீனாவின் வளர்ச்சியை கட்டுப்படுத்தவும், அடக்கவும் ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகம் முயற்சிக்கிறது. இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகள் கடுமையான சிரமங்களை எதிர் கொள்வதற்கான அடிப்படைக் காரணம், அமெரிக்கர்கள் சிலர் சீனாவை கற்பனை செய்யப்பட்ட எதிரியாக சித்தரிப்பதே ஆகும்' என்று கூறியுள்ளார்.

1951இல் சுதந்திரம் பெற்றுவிட்டதாக திபெத் அறிவித்தாலும், அந்தப் பகுதி தங்கள் கட்டுப்பாட்டில் இருப்பதாக சீனா தொடர்ந்து தெரிவித்து வருகிறது. இந்தியாவின் அருணாச்சல பிரதேச எல்லைக்கு அருகில் திபெத் அமைந்துள்ளதால், அது தெற்கு திபெத்துக்கு சொந்தமான பகுதி என சீனா உரிமை கொண்டாடியது. இதனை இந்தியா திட்டவட்டமாக மறுத்தது.

இதன் பின்னணியில் சீனா ஜனாதிபதி திபெத்துக்குச் சென்றமை குறித்தும் சீனா வெளியுறவு அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதுடன், திபெத் விவகாரம் பற்றிப் பேச இந்தியாவுக்கு உரிமை கிடையாதென்ற தொனியிலும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஆகவே அரசியல் விடுதலை கோருகின்ற திபெத் மக்களைச் சமாளித்துத் தன்னை நியாயவாதியாக உலகத்துக்குக் காண்பிக்கச் சீனா முற்படுகின்றது. மறுபுறம் திபெத் மற்றும் உய்குர் இன முஸ்லிம்களை சீனா இன அழிப்புச் செய்வதாக இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் குற்றம் சுமத்தி, உலகில் சீனா மீதான வெறுப்பை உருவாக்க முற்படுகின்றன. ஆனால், ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த பேச்சுக்களை வெறுமனே இலங்கை மக்களின் மனித உரிமைப் பிரச்சினையாக மாத்திரம் சுருக்கி, அதன் மூலம் சிங்கள ஆட்சியாளர்களிடம் பேரம் பேசித் தமது பிராந்திய நலன்களை இந்த வல்லாதிக்க நாடுகள் முன்னெடுக்கின்றன.

ஆகவே அரசுக்கு அரசு என்ற அணுகுமுறையின் ஊடே ஈழத்தமிழர்களின் எழுபது வருட அரசியல் போராட்டம் நசுக்கப்படுகின்றது. பந்தாடப்படுகின்றது. இதனைத் தெளிவாகக் காண்பிக்கத் தேர்தல் அரசியலுக்கு அப்பால் நிலையான வெளியுறவுக் கொள்கையை தமிழர்கள் வகுக்க வேண்டிய தருணம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி

49

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| 9 | | ■ | 10 | 11 | | | ■ |
| | ■ | 12 | | | ■ | 13 | 14 |
| ■ | 15 | | | ■ | 16 | | |
| 17 | | | ■ | 18 | | | |
| 19 | | ■ | 20 | | | ■ | |
| 21 | | | | | ■ | 22 | |

அனுப்புபவர் பெயர்:..........................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

.................................................

கையொப்பம்:..............................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள் வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலி கள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. எஜமான் மீது வேலையாள் வைப்பது, 5. தண்ணீர் சூடாகும்போது மாறும் நிலை 7. ஆண்டு, 8. நடனம் இதற்குள் அடங்கும், 9. வகை, இனம், 10. பத்துச் செய்யுள் கொண்ட பிரபந்தம், 12. மயிர் நீப்பின் உயிர் துறக்கும் மான் இனம், 13. பிரி, 15. தேர் இழுக்கும் கயிறு, 16. கை, 17. குளிர்மை, 18. நுளம்பு, தவளை, வண்ணத்துப் பூச்சி ஆகியவற்றின் உடல்விருத்தியில் ஒரு பருவம், 19. குழந்தையைத் தாய் தூங்கவைப்பது இங்கு வைத்துத்தான், 20. வயல்களில் மாற்றுப்பயிர், சிறிய பொதிகட்டும் இழை இதிலிருந்து எடுப்பார்கள், 21. கனகச்சிதமாக, 22. மனிதனுக்கு மிக முக்கியமான உடல் அவயம்

## மேலிருந்து கீழ்

1. கமத்தொழில் செய்பவன், 2. இசையின் சுதி, 3. நீரின்றி தாவரம் காய, 4. நிகழ்ச்சி , 5. பகட்டாகச் செய்வது, 6. முற்கால ஆயுதம், 8. எனவே, 11. விளக்கில் எரிவது , 12. ஆற்றுவதற்கு பொறுப்புள்ளது , 14. வணங்கல் , 15. முற்கால வாகன வகை, 16. சமுத்திரம், 17. தங்களது, 18. ஒருவனின் பண்பு சுபாவ இயல்பு, 20. கழித்தல்குறி

### சொற்சிலம்பம் போட்டி 47 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.ஐப்பசி, 4.தரகு, 6.கும்பம், 7.பசப்பு, 9.புசல், 11.தும்பு, 12.கிராம், 13.கோடை, 14.பகு 16.கந்தன், 18. சவம், 19.முதலை, 20. குடும்பி, 21.கும், 22.குருதி

**மேலிருந்து கீழ்**

1.ஐம்பது, 2.பகுப்பு, 3.சிம்பு, 4.தம்புரா, 5.குடல், 8.சம்பந்தம், 10.சம்பவம், 12.கிடை 13.கோன், 15.கும்பிடு, 16.கமுகு, 17.தலை, 18. சடுதி, 20.குரு

**சொற்சிலம்பம் போட்டி இல.49**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
**06.08.2021** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட் டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடி வானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிக ளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 47 இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**
**ப.லூட்ஸ் ராறா**
சென் பீற்றர் வீதி,
நவாலி தெற்கு, மானிப்பாய்.

**2 ஆம் பரிசு**
**சபேசன் கிருபன்**
76, பழம் றோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு**
**ரா.ராஜசந்திரன்**
கண்ணகபுரம், நாவாந்துறை,
தெற்கு, யாழ்ப்பாணம்

**4 ஆம் பரிசு**
**ந.ஜெயகணேசன்**
பண்டித்தாழ்வு,
காரைநகர்.


**5 ஆம் பரிசு**
**ரி.[illegible]தரன்**
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்

# கி.ரா: நினைவுகள்



முதுபெரும் எழுத்தாளர் கி.ராஜநாராயணனின் (கி.ரா.வின்) நண்பரும் எழுத்தாளருமான பேராசிரியர் அ.ராமசாமி, அவரின் 40 ஆண்டு கால நண்பர். அவரோடு கொண்ட நட்பை 'உதயன் – சஞ்சீவி' வாசகர்களுக்காக நினைவுக் குறிப்புகளாகத் தருகிறார்.

**பேராசிரியர் அ.ராமசாமி**
தமிழ்த்துறை (பணி நிறைவு) மனோன்மணி சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு.



**பா.** விசாலம் போலவே அதுவரை நான் கேள்விப்படாதவராக இருந்து கி.ரா. வீட்டில் அறிமுகமாகிப் பின்னர் நெருங்கிய நண்பராக ஆனவர் பா.ராம மூர்த்தி. சங்கமித்திரை என்னும் புனைபெயரில் கட்டுரைகள் எழுதினார். பெரி யாரியச் சிந்தனைகள் நிரம்பியவர். திராவிட இயக்க இதழ்களில் அவரது எழுத்துகள் அச்சாகிக்கொண்டிருந்தன. மார்க்சியமும் நவீனத்துவ எழுத்தும் பிடித்திருந்த அளவுக்கு பெரியாரியம் சார்ந்த எழுத்துகள்மீது பிடிமானம் அப் போது இல்லை.

பா. இராமமூர்த்தி மாதமொரு முறையாவது பாண்டிச்சேரிக்கு வந்து கி.ரா.வைப் பார்த்துவிட்டு நீண்டநேரம் இருந்து பேசிவிட்டுச் செல்லக்கூடியவர். அப்போது அவரது பணியிடம் நெய்வேலியா? கடலூரா? என்பது நினை வில்லை. பாண்டிச்சேரிக்கு வரும்போது இரு சில நேரங்களில் குடும்ப உறுப் பினரோடு வருவார். கணவதி அம்மாவுக்கும் அவர்கள் அறிமுகம் என்பது தெரிந்தது. அவருக்கும் கி.ராவுக்குமான நட்பு நீண்டகால நட்பு. கோவில்பட் டியில் அவர் வங்கி அதிகாரியாக இருந்த காலத்திலேயே இடைசெவலுக்கு அடிக் கடி சென்று சந்தித்திருக்கிறார். இளம் வயதில் காலை நடைக்குப் பதிலாக மெல் லோட்டமாக நீண்ட தூரம் ஓடுவாராம். கோவில்பட்டியிலிருந்து இடைசெவல் வரை ஓடிவிட்டுத் திரும்பி வருவாராம். இடைசெவலில் பேச்சுத் தொடர்ச்சியில் நேரம் போவது தெரியாமல் இருந்துவிட்டு, ஓடிவந்து திருநெல்வேலி - கோவில்பட்டி இடையே ஓடும் ஏதாவது ஒரு பேருந்தில் ஏறி வீடு திரும்புவேன் என்றும் சொல் லியிருக்கிறார். அவரைப் பார்க்க பாரத்ஸ்டேட் வங்கிக்குச் சென்றபோது, அங்கு வரும் விவசாயிகளையும் அவர்களை எதிர்கொள்ளும் வங்கி ஊழியர்களையும் பார்த்து சில கதைகள் எழுதியிருக்கிறேன் என கி.ரா. சொல்லியிருக்கிறார்.

பா.இராமமூர்த்தி கோவில்பட்டியிலிருந்த காலத்தில் தான் அங்கே மாவட் டக்கல்வி அதிகாரியாக இருந்திருக்கிறார் கி.வேங்கட சுப்பிரமணியம். பின்னர் மாநில அளவில் கல்வி அதிகாரியாக மாறியிருக்கிறார். அவருக்கு முன் னோடி நெ.து. சுந்தரவடிவேல். அவர் எம்.ஜி. ஆர் அமைச்சரவையில் கல்வி அமைச்சராக இருந்த செ. அரங்க நாயகத்தின் நம்பிக்கைக்குரிய ஆலோ சகர் எனக் கேள்விப்பட்டிருக்கிறார். அந்தப் பின்ன ணியோடு மைய அரசில் அமைச்சராக இருந்த ஆர். வெங்கட்ராமனின் அறிமுகத்தோடு முதல் துணை வேந்தரானவர் முனைவர் கி. வேங்கடசுப்பிரமணி யன். அந்த நன்றிக்காகவே பல்கலைக்கழகவளா கத்துக்கு ஆர். வெங்கட்ராமன் நகர் எனப் பெயரிட் டார் என பா. இராமமூர்த்தி ஒரு விளக்கம் தந்தார். பலரும் இதனைச் சொல்லியிருக்கிறார்கள்.

28



நான் புதுச்சேரியிலிருந்து திருநெல்வேலிக்கு வந்த பின் அவ்வப்போது புதுச் சேரிக்குப் போவேன். பல்கலைக்கழக வேலையாகப்போகும் ஒவ்வொரு முறையும் அவர் வீட்டுக்குப் போவதில்லை. என்றாலும் ஆண்டுக்கு இரண்டு தடவையாவது அவரைப் பார்த்துவிடுவேன். வீட்டில் சென்று பார்த்தால் ,அவ ரது புதிய நூல்களையும் அவருக்கு வந்து சேரும் நூல்களையும் என்னிடம் தருவார். அப்படியொரு தடவை போனபோது "கி.ரா. இணைநலம்" என்று சிறிய நூலொன்றைத் தந்தார். அதில் முழுக்கவும் கணவதி அம்மாவின் பண் புகளும் கி.ரா. என்னும் எழுத்தாளுமையை அவர் கவனித்துக்கொள்ளும் விதங்களும் எழுதப்பெற்றிருந்தன. அதனை எழுதியவராக ஒரு [illegible] ஒரு பெண்ணின் பெயர் – எஸ்.பி. சாந்தி (2012) இருந்தது. அவர் பா.இராமமூர்த்தியின் புதல் விகளில் ஒருவர் என்பதைக் கணவதி அம்மா சொன்னார்.

(நினைவுகளும் குறிப்புகளும் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பி.சி.ஓ.எஸ் PCOS (polycystic ovarian syndrome)

எனக்கு வயது 28. திருமணமாகி 6 மாதங்கள். கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் PCOS– என்னும் ஓவரி– சூலகக் கட்டி இருப்பது அறியப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறேன். இன்னும் கர்ப்பம் தரிக்காதமை பல்வேறு மன உளைச்சலை தருகிறது. அனைவரும் PCOS உள்ள பெண்ணை மணம் முடித்தமையே மலட்டுத்தன்மைக்கு காரணம் என்று கூறுகின்றனர். தயவு செய்து விளக்கம் அளியுங்கள் டாக்டர்.




மருத்துவர் ப்ரியா கமலசிங்கம்
(யாழ்.போதனா மருத்துவமனை,
– சிலாபம் மாவட்டப்
பொது மருத்துவமனை)

## நலம் அறிய...




இது உங்களின் அறிகுறிகளின் அடிப்படையில் அமைந்தது....

இது பெண்களின் சினைப்பையில் ஏற்படும் ஒரு மிகவும் பொதுவான பிரச்சினையாகும்.
ஆண்டரோஜன் எனப்படும் ஆண்மைத் தன்மை சுரப்பு அதிகரிப்பின் காரணமாக ஏற்படுகிறது.
18 முதல் 44 வயது வரையுள்ள பெண்களில் அதிகமேற்படுகிறது.




## இது ஒரு நோயல்ல, கோளாறு என்பதை புரிந்துகொள்ளுங்கள்.

- இது உருவாக முக்கிய காரணம் insulin resistance. இன்சுலின் ரெஸிஸ்டென்ஸ்.
- இதை சரி செய்வது ஹோர்மோன் குளறுபடிகளை சரி செய்வதன் முதல்படி.
- உடல் பருமனானோர் எடையை சரி செய்வதன் மூலம் இன்சுலின் றெசிஸ்டன்சை கட்டுக்குள் கொண்டுவரலாம்.
- உடல் பருமனற்றவர்கள் (Lean PCOD) வேறு வழியில் கட்டுப்படுத்த வேண்டும். >10% .

## அபாய காரணிகள்

மரபுவழி, சூழல் என இரண்டும் இணைந்த கூட்டுக்காரணிகளால் ஏற்படுகின்றன. உடற்பருமன், போதுமான உடற்பயிற்சியின்மை, குடும்பத்தில் முன்பு எவருக்கேனும் இது காணப்பட்டிருத்தல்.

- **ஆண்ரொஜன் அளவு அதிகரித்தல்**
- **சினைமுட்டை வராமலிருத்தல்**
- **சினைப்பையில் கட்டிகள் உருவாதல்**

இவற்றில் 2/3 இருப்பின் PCOS என கருதப்படுகிறது.

## அறிகுறிகள்

- ஒழுங்கற்ற மாதவிடாய் அல்லது மாதவிடாய் இல்லாமலிருத்தல், அதிகமான குருதிப்போக்கு,
- உடலிலும் முகத்திலும் அதிகமான முடிவளர்ச்சி,
- முகப்பரு,
- இடுப்பெலும்பு வலி,
- மலட்டுத்தன்மை,
- சில தோல் பகுதிகள் மட்டும் கெட்டியாகவும் கருத்தும் மிருதுவாகக் காணப்படுதல்

மேலும் இதனோடு நீரிழிவு நோய், உடற் பருமன் இதய நோய் , உறங்கும்போது மூச்சு விடுதலில் மாற்றம், சீரற்ற மனநிலை, கருப்பை அகப் படலப் புற்றுநோய் ஆகியவையும் இதனோடு தொடர்புடையனவாகும்.

**ஒழுங்கற்ற மாதவிடாய்:**
சினைப்பை நோய்க்குறியானது ஆண்டிற்கு ஒன்பதுக்கும் குறைவான மாதவிடாய் அல்லது மாதவிடாய் வராமை, மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட காலத்துக்கு மாதவிடாய் வராமை, பிற மாதவிடாய்க் கோளாறுகள் ஆகியவற்றைத் தோற்றுவிக்கிறது.

**மலட்டுத்தன்மை:**
பொதுவாக குறைவான சினைமுட்டை வெளிவருதல்./சினைமுட்டைப் பற்றாக்குறை.

**ஆண் தன்மை மிகுந்து காணப்படுதல்:**
முகப்பருக்கள், உடலில் ஆண்களைப் போன்று (மார்பு, முகவாய் ஆகியவற்றில்) முடிவளர்ச்சி சினைப்பை நோய்க்குறியால் பாதிக்கப்பட்ட சுமார் மூன்றிலொரு பங்கு பெண்களுக்கு ஆண் தன்மை மிகுந்து காணப்படுகிறது.

**வளர்சிதை மாற்ற நோய்க்குறி:**
இது உடற்பருமன், இன்சுலின் எதிர்ப்பு ஆகியவற்றுடன் தொடர்புடைய ஒரு நோய்க்குறியாகும். இதனோடும் சினைப்பை நோய்க்குறி தொடர்புடையதாகும்.

## மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள்

(PCOS) மருத்துவர் பின்வருவனபற்றி உங்களிடம் கேள்விகள் கேட்பார்:

- உங்கள் மாதவிலக்கு
- முடி மற்றும் தோல் பிரச்சினைகள்
- விபரிக்கமுடியாத எடை அதிகரித்தல்
- கடந்த காலத்தில் உங்கள் ஆரோக்கியம் எப்படி இருந்தது

(உங்கள் மருத்துவ வரலாறு)

மருத்துவர் அல்லது ஒரு தாதி உங்கள் எடை, உயரம், மற்றும் இரத்த அழுத்தத்தை அளவிடுவார்.
அவர்கள் ஒரு இரத்த மாதிரி எடுத்துக்கொள்வார்கள்.
உங்கள் இரத்தம் இன்சுலின், சுரப்புநீர், மற்றும் குளுக்கோஸ் அளவு என்பவற்றுக்காகப் பரிசோதிக்கப்படும்.
மருத்துவர் திரவப்பைகளைக் கண்டறிவதற்காக சூலகங்களை அல்ட்ராசவுண்ட் ஸ்கானும் செய்யக்கூடும்.

## சிகிச்சை

இது உங்களின் அறிகுறிகளின் அடிப்படையிலமைந்தது.

**சுரப்பு நீருக்கு (ஹோமோமன்) சிகிச்சையளித்தல்**

பல கட்டிகளுள்ள சூலகங்கள் நோய்க்கான அறிகுறி (PCOS) ஒரு சமநிலையற்ற சுரப்பு நீர் ஆகும். அதனால் அதனைச் சமநிலைப் படுத்துவதே உங்கள் சிகிச்சையின் ஒரு பகுதியாகும். இதைச் செய்வதற்கு இரண்டு வழிகள் பின்வருமாறு:

- பெண்கள் சுரப்பி நீரின் அளவை அதிகரித்தல்
- அதிகரிக்கப்பட்ட ஆண் சுரப்புநீரின் பாதிப்பைக் குறைத்தல்

பெண் சுரப்பு நீரின் அளவை அதிகரிப்பதற்காக, உங்கள் மருத்துவர் கருத்தடைக் குளிசைகளை எழுதித் தரக்கூடும். கருத்தடைக் குளிசைகள் பின்வரும் பலன்களைக் கொண்டிருக்கும்:

- அவை உங்கள் மாதவிடாயை மேலும் ஒழுங்காக்கும்.
- முகப்பருவைக் கட்டுப்படுத்தலாம் மற்றும் முகம் மற்றும் உடலில் முடிவளருவதைக் குறைக்கும்
- கருப்பை உட்சவ்வில் புற்றுநோய் ஏற்படும் ஆபத்தைக் குறைக்கும்.

ஆண் சுரப்பு நீரின் பாதிப்பைக் குறைப்பதற்கு, உங்கள் மருத்துவர் அன்ரிஅன்ட்ரோஜென்ஸ் என்னும் மருந்தை எழுதிக்கொடுக்கலாம். அன்ரிஅன்ட்ரோஜென்ஸ் மருந்துகள் பின்வரும் பலன்களைக் கொண்டிருக்கும்:

- ஆண் சுரப்பு நீரின் செயற்பாட்டைத் தடைசெய்யும்.
- தேவையற்ற முடி வளருவதை மற்றும் முகப்பருவைக் குறைக்கும்

ஒரு சாதாரணமான அன்ரிஅன்ட்ரொஜென் ஸ்பிரொனொலக்ரோன் என்றழைக்கப்படும். நீங்கள் இதை உட்கொள்வதாக இருந்தால் கருத்தடைக் குளிசைகளையும் உட்கொள்ளவேண்டும். சில கருத்தடைக் குளிகைகள் அன்ரிஅன்ட்ரொஜென் மற்றும் பெண் சுரப்பு நீர் இரண்டையுமே கொண்டிருக்கும்.
பல கட்டிகளுள்ள சூலகங்கள் நோய்க்கான அறிகுறி (PCOS) இனால் உங்களுக்கு நீரிழிவு நோய் இருந்தால் உங்களுக்கு நீரிழிவு நோய்க்கும் சிகிச்சையளிக்கப்பட வேண்டும்.

### தேவையற்ற முடிகளை அகற்றுதல்

ஒரு தகுந்த சுரப்பு நீர் சமநிலை, தேவையற்ற முடிகளின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த உதவி செய்யும். ஏற்கனவே இருக்கும் முடிகளை அகற்ற அவை உதவி செய்யாது. ஆனால் ஏற்கனவே இருக்கும் முடிகளை அகற்ற வழிகள் உண்டு. உங்கள் மருத்துவரைக் கேட்கவும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





### வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி த.மங்களேஸ்வரன் உதயனுக்கு பிரத்தியேக செ

# அழுத்தங்கள், தடைகளை வெ தனிப் பல்கலை உயர்ந்தோம்!

○ நேர்காணல் பா.குமுதன்

**கே:** **நீண்ட நெடிய போராட்டத்தின் பின்னர் வவுனியா பல்கலைக்கழகம் என்ற கட்டமைப்பு அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அதன் முன்னோடி என்றவகையில் எப்படி உணர்கிறீர்கள்?**

**ப:** வவுனியா வளாகம் பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்பட்டுள்ளமை மிகவும் மகிழ்ச்சியான விடயம். எனக்கு மாத்திரமல்ல வவுனியா வளாக சமூகத்தினருக்கும் இலங்கை மக்கள் அனைவருக்கும், ஒரு மகிழ்ச்சியான விடயமே.நீண்டகால எமது கனவை எதிர்பார்ப்பை நிவர்த்தி செய்வதற்கு ஜனாதிபதி, கல்வி அமைச்சர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினர், வவுனியா வளாகத்தின் கல்விசார்,சாரா ஊழியர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், மாணவர்கள், நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரவை வழங்கிய பொதுமக்கள், வன்னித் தேர்தல் மாவட்டத்தின் அரசியல்வாதிகள், ஊடகத்துறையினர் நலன் விரும்பிகள் ஆகிய அனைவரும் எமக்கு பக்கபலமாக இருந்துள்ளனர். அதற்காக எமது பல்கலைக்கழகம் அனைவருக்கும் என்றென்றும் நன்றியோடு இருக்கும்.

**கே:** **தனிப் பல்கலைக்கழகம் ஒன்று வவுனியாவில் உருவாகியுள்ள நிலையில் உயர்கல்வி வாய்ப்புக்களை எதிர்பார்த்து நிற்கும் வன்னியை அல்லது வவுனியாவை சேர்ந்த மாணவர்களுக்கு எந்தவகையில் அது பயனுள்ளதாகஇருக்கும்?**

**ப:** வவுனியா பல்கலைக்கழகமானது இதுவரை வளாகமாக இருந்த காரணத்தால் இங்கு காணப்பட்ட வசதி வாய்ப்புக்கள் ஒரு பல்கலைக்கழகத்தின் தரத்தில் காணப்படவில்லை. வசதிகள் குறைவாகக் காணப்பட்டமையால் எமது பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்கள் இங்கு கற்பதற்கு விண்ணப்பிப்பதில்லை. தற்போது பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தப்பட்டிருப்பதனால் வன்னிப்பிரதேச மாணவர்களும் நிச்சயமாக எதிர்வரும் காலங்களில் வவுனியா பல்கலைக்கழகத்தை விரும்பித் தெரிவுசெய்வார்கள்.மேலும் வன்னிப்பிரதேசத்தைச் சேர்ந்த தமிழ் பேசுகின்ற மாணவர்களுக்கு வவுனியா வளாகத்தில் எவ்வாறான கற்கைநெறிகள் இருக்கின்றன என்று பெரிதாகத் தெரியாது. சூழலியல், தொழில்நுட்பவியல், வணிகவியல், கணனித்தொழில்நுட்பவியல் முதலான கற்கைநெறிகளே தற்போது இங்குள்ளன. எதிர்வரும்காலத்தில் புதியபீடங்களையும் உருவாக்க இருப்பதால் வன்னிப்பிரதேச மாணவர்கள் நிச்சயமாக காலத்துக்கேற்ற புதியதுறைகளில் கல்விகற்பதற்கான களமாக இந்தப் பல்கலைக்கழகம் அமையும்.

**கே:** **வன்னி மாவட்டம் சனத்தொகை மற்றும் கல்வி நிலையில் பின்தங்கியிருக்கிறது. இந்தச் சூழலில் தற்போது நடைமுறையில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கான மாணவர் அனுமதி முறைமை வவுனியா பல்கலைக்கழகத்தில் கல்வி பயில்வதற்கு எதிர்பார்த்திருக்கும் இந்தப் பகுதியைச் சேர்ந்த மாணவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாதா?**

**ப:** நிச்சயமாக இல்லை.வன்னிப் பிரதேச மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், கற்கவேண்டும் என்ற நோக்கத்தினைப் பூர்த்திசெய்வதற்காகவே இந்தப் பல்கலைகழகம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரதேச மாணவர்கள் உயர்கல்விக்கான அனுமதியை எவ்வாறு பெற்றுக்கொள்வது? எவ்வாறான கற்கைநெறியை தேர்ந்தெடுப்பது? போன்ற விடயங்களை வெளிப்படுத்தவேண்டிய தேவையிருக்கின்றது. எனவே கருத்தரங்குகள் முதலானவற்றை நடத்தி விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் ஊடாக வன்னிப்பிரதேச மாணவர்கள் இங்கு கற்பதற்கான கூடுதலான வாய்ப்புக்கள் உருவாக்கப்படும்.
இதுவரைகாலமும் அந்த விழிப்புணர்வு அரிதாகவே இருந்தது. வளாகத்துக்கு பல்கலைக்கழகம் என்ற அந்தஸ்து இல்லாத காரணத்தால் எங்களால் எமது பிரதேசத்துக்கு ஏற்ற புதியவிடயங்களை அறிமுகப்படுத்துவது பெரிய சவாலான விடயமாக இருந்தது. எதிர்வரும் காலத்தில் இந்த மாணவர்களை உயர்கல்வித்துறைக்குள் உள்ளீர்ப்பதுடன்.வன்னிப் பிரதேச அல்லது வடமாகாணத்தைச் சேர்ந்த மாணவர்கள் தமது உயர்கல்வியை பல்வேறு துறைகளில் தெரிவுசெய்வதற்கான சூழல் உருவாகியுள்ளது.

**கே:** **தற்போது நடைமுறையில் உள்ள பல்கலைக்கழக மாணவர் சேர்க்கை முறைமையில் நாடளாவிய திறமை மற்றும் மாவட்ட அடிப்படையிலான தெரிவு என்பவை ஏற்றுக்கொள்ளக் கூடிய சரியான திட்டம் என நீங்கள் நம்புகிறீர்களா? இல்லை எனில் அதில் எவ்வாறான மாற்றங்களை நீங்கள் முன்வைப்பீர்கள்?**

**ப:** தற்போது பல்கலைக்கழக மாணவர்கள் அனுமதியில் நடைமுறையில் இருக்கும் திட்டமானது நீண்டகாலமாக நடைமுறையில் உள்ளது. அதற்கு உடனடியாக எதிர்ப்புத் தெரிவித்து மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று நான் கருதவில்லை. அது நல்லதிட்டம். ஆனால் எமது மாணவர்கள் முன்னைய காலத்தில் திறமை அடிப்படையில் அதிகளவில் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவுசெய்யப்பட்டார்கள். ஆனால் தற்போதைய சூழலில் எமது மாணவர்கள் திறமையடிப்படையில் பல்கலைக்கழகம் செல்வதற்கான வாய்ப்புக்கள் கணிசமாகக் குறைவடைந்துள்ளன. அத்துடன் மாவட்ட ரீதியான தெரிவு என்பது ஒவ்வொரு மாவட்டத்தின் மக்கள் தொகையை அடிப்படையாகக்கொண்டு வகுக்கப்பட்டுள்ளது.
கடந்த 30 வருடகாலப்போரின் விளைவாக இந்தப்பிரதேசத்தினை சேர்ந்த லட்சக்கணக்கான தமிழ் மக்களின் புலம்பெயர்வானது பல்கலைக்கழங்களுக்கான மாணவர் அனுமதி எண்ணிக்கையிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.
முன்னைய காலப்பகுதியில் மக்கள் பல்வேறுவகையான நிர்ப்பந்தங்களால் புலம்பெயர்ந்திருப்பார்கள்.ஆனால் தற்போதைய காலகட்டத்திலும் புலம்பெயர்ந்துசென்று வெளிநாடுகளில் வாழவேண்டும் என்ற எண்ணம் பலரிடமும் காணப்படுகின்றது. அதனைப் புறம்தள்ளிவிட்டு எமது பகுதியிலே வாழ்வதனூடாகவே எமது சனத்தொகையை பேண முடியும். எமது மக்கள்தொகையை அதிகரிப்பதனூடாகவும் கல்வியில் அதிக அக்கறையைக் காட்டுவதனூடாகவும் பல்கலைகழகங்களில் தமிழ் பேசுகின்ற மாணவர்கள் அதிகளவில் உள்நுழையக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன.
இன்னொருபுறம் தமிழ் மாணவர்கள் குறித்த சில கற்கைநெறிகளை மாத்திரமே தெரிவுசெய்ய விரும்புகின்றனர். உதாரணமாக ஒரு மருத்துவராகவோ, பொறியியலாளராகவோ வரவேண்டும் என்ற நோக்கமே பலரிடம் உண்டு. அதனால் ஏனைய கற்கைநெறிகளுக்கு எமது பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்கள் விண்ணப்பிப்பது அரிதாகவே இருக்கின்றது.
அந்தக் கற்கைநெறிகளுக்கு வாய்ப்புக்கிட்டாத மாணவர்கள் , மருத்துவம், பொறியியல் போன்ற கற்கைநெறிகளைப் பயில்வதற்காக புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்கு செல்கின்றார்கள். அத்துடன் அங்கு கல்விகற்றுவிட்டு அந்த நாடுகளிலேயே தங்கியும் விடுகின்றனர்.
எனவே உயர்தரத்தின் பின்னர் மருத்துவம் தான் படிப்பேன், பொறியியல் தான் கற்பேன் என நினைக்காமல், தமக்கு கிடைக்கும் ஏனைய கற்கைநெறிகளையும் கற்று, அதில் நிபுணத்துவம் பெறும் பக்குவம் இளையோரிடம் உண்டாக வேண்டும். அதற்கு மாணவர்களை வழிகாட்ட வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும் உள்ளது.


**கே:** **தனிப்பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்படவேண்டும் என்ற உங்களது முயற்சி ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் ஏளனம் செய்யப்பட்டு எள்ளிநகையாடப்பட்டதா? அல்லது அவமானப்படுத்தப்பட்டீர்களா?**

**ப:** இல்லை. தனிப்பல்கலைக்கழகம் ஒன்று ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற நோக்கம் நீண்டகாலமாக எமக்கு இருந்தது. அதற்காக நாம் நீண்டதூரம் பயணித்துள்ளோம்.1999 ஆம் ஆண்டிலிருந்து அந்தக் கோரிக்கையை வலியுறுத்தி வருகின்றோம். அதன் மூலம் இந்தப்பிரதேசத்தினையும் அபிவிருத்தி செய்துகொள்ளலாம் என்பது எமது நோக்கமாகவிருந்தது. நான் துறைத்தலைவராக,பின்பு பீடாதிபதியாக இருந்து முதல்வராக பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர் எனக்கு கிடைக்கப்பெற்ற அனுபவத்தின் வாயிலாக இதனை ஒரு தனிப்பல்கலைக்கழகமாக உருவாக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வி.



# வன்றே

# லக்கழகமாக

வேண்டும் என்ற கருத்திட்டத்தை அரசுக்கு வழங்கியிருந்தோம். ஒரு சிலரிடம் மாற்றுக்கருத்துக்கள் இருந்தன. இந்தவிடயத்தில் பொதுவாக மாற்றுக்கருத்துக்கள் இருக்கலாம். அத்தகைய மாற்றுக்கருத்துக்களை நான் ஆராய்ந்தேன். இறுதியில் என்னைப் பொறுத்தவரையில் அந்த மாற்றுக்கருத்துக்கள் என்னை இன்னும் ஊக்கப்படுத்தின என நான் பார்க்கின்றேன். சரியான தெளிவின்மை அல்லது பிழையான விளக்கத்தை பெற்ற காரணத்தாலேயே இதற்கு சிலர் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். வவுனியா வளாகம் ஒரு தனிப்பல்கலைக்ழகமாக உருவாகி, வடமாகாணத்தில் இரண்டாவது உயர்கல்விநிலையமாக உயர்ந்துள்ளது. அது எமது பிரதேசத்தின் பொருளாதாரம், சமூக அபிவிருத்தி, கலாசார அபிவிருத்தி போன்றவற்றை மேம்படுத்துவதுடன் தொடர்ந்து நாங்கள் மென்மேலும் வளர்ச்சியடையவேண்டும் என்ற ஊக்கத்தை சமூகத்துக்கு வழங்கும். அதுவே எனது தூர நோக்கமாகவும் இருந்தது. ஒரு சிலர் பிழையான கருத்துக்களை தெரிவித்திருந்தாலும் நான் அதனை பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. இந்தப்பல்கலைக்கழகத்தின் வளர்ச்சி அல்லது செயற்பாடு அவர்களது மனங்களிலும் மாற்றத்தை உருவாக்கும் என நம்புகின்றேன்.

**கே: பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தும் முயற்சிக்கு வன்னியின் அரசியல்வாதிகள் பெரும் பங்களித்திருக்கின்றனர் என பலமுறை தெரிவித்திருக்கின்றீர்கள். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள் அல்லது அரசியல்வாதி களின் பங்களிப்பு எந்தவகையில் இருந்தது?**

ப: வவுனியா வளாகம் பல்கலைக்கழகமாக தரமுயர வேண்டும் என்ற விருப்பம் வடக்கைச் சேர்ந்த சகல அரசியல்வாதிகளிடம் நிறையவே இருந்தது. அவர்களுக்கும் அது ஒரு பெருமையான விடயமே. இந்தப் பிரதேசத்துக்கு தாங்களும் ஒரு பங்களிப்பினைச் செலுத்த வேண்டும் என்ற அவா அவர்களிடம் நிறையவே இருந்தது. அரசியல் வேறுபாடுகளை மறந்து அவர்கள் ஆதரவு வழங்கியிருந்தனர். ஆயினும் அவர்களுக்கு இந்தமுயற்சியை விரைவாககொண்டு வருவதில் சாதகமான சூழல் இல்லாமல் போயிருக்கலாம். அல்லது சில தடைகள் இருந்திருக்கலாம்.

**கே: இதனை தரமுயர்த்துவதில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பங்கு ஆரோக்கியமாகவும், பக்கபலமாகவும் இருந்ததா?**

ப: ஆம். இந்த முயற்சியில் யாழ்ப்பாணம் பல்கலைகழகம் பக்கபலமாகவும். ஆதரவாகவுமே செயற்பட்டிருந்தது. கடந்த 30 வருடகாலத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இருந்து ஒழுங்குபடுத்தப்பட்ட நிர்வாகம் என்ற கட்டுக்கோப்பான ஒரு அமைப்பாக வவுனியா வளாகம் உருவாக்கம் பெறுவதற்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் பெரும் பங்களிப்பைச் செய்திருக்கின்றது. அதேவேளை புதிய கற்கைநெறிகளும் புதிய பீடங்களும் உருவாக்கப்படுவதற்கு அவர்கள் எமக்கு சார்பாக இருந்து எமது தூரநோக்கத்தை அடைவதற்கு ஆதரவாக இருந்தார்கள்.

**கே: வவுனியா பல்கலைக்கழகம் என்ற கோரிக்கையை கைவிடுமாறு ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் உங்களுக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டனவா?**

ப: அழுத்தங்கள் இருந்தன. அழுத்தங்கள் என்பதைக் காட்டிலும் மாற்றுக்கருத்துக்கள் என்று கூறலாம். அதற்கான தகுந்த பதில்களை வழங்கி அவர்களையும் எமது பக்கம் திருப்பியுள்ளோம்.

**கே: நாட்டிலுள்ள அநேகமான பல்கலைக் கழகங்கள் ஆய்வுத்துறையை தவிர்த்து கற்பித்தல் செயற்பாட்டையே முக்கியத்துவப்படுத்துகின்றன. இந்தப்போக்கு ஒரு புத்தாக்க கண்டுபிடிப்பாளர்களையோ அல்லது தொழில்நுட்பத் திறன் வாய்ந்தவர்களையோ உருவாக்குவதிலோ தடையை ஏற்படுத்தி நிற்கின்றது. இந்தக் கட்டமைப்பில் எவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்தலாம்?**

ப: பல்கலைக்கழகம் என்பது தனியே மாணவர்களைக் கற்பித்தலோடு மட்டுமன்றி புத்ததாக்கச் சிந்தனை உடையவர்களாகவும் சமூகநோக்கு உடையவர்களாகவும் உருவாக்க வேண்டும். மேலும் ஆய்வுகளை மேற்கொண்டு சமூகத்துக்கும் நாட்டுக்கும் பங்களிப்பை வழங்கவேண்டும். எனது நோக்கமும் அதுதான். ஆய்வுகள் பிராந்திய ரீதியிலும் தேசியரீதியிலும் முன்னெடுக்கப்படவேண்டும். அந்த ஆய்வுகள் வெறுமனே நூலாகவும், ஆய்வு மாநாட்டின் அறிக்கையாகவும் மட்டுமன்றி நாட்டுக்கும் மக்களுக்கும் அதன்பயன் போய்ச்சேர்வதாக அமையவேண்டும்.

**கே: வவுனியா பல்கலைக்கழகத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துச்செல்வதற்கான பௌதீக, மனித வளங்கள் போதுமானவையாக உள்ளனவா?**

ப: இருக்கின்ற வளங்களைக் கொண்டு பல்கலைக்கழகத்தை இயக்குவதில் எந்தவொரு தடையும் இல்லை. ஆயினும் பல்கலைக்கழகம் என்ற தகுதியைப் பேணுவதற்கு வசதி, வாய்ப்புக்கள் போதாமல் இருக்கின்றன. ஏனைய பல்கலைகழகங்களில் இருக்கும் வசதிகளைப்போல இங்கும் தேவையான வசதிவாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கான வேலைத்திட்டத்தில் உடனடியாக இறங்கியுள்ளோம்.

**கே: வன்னிப் பிரதேசத்துக்கு பொருத்தமான, அதன் தரைத்தோற்றத்தை அடிப்படையாக கொண்ட குறிப்பாகக் கடல்சார் தொழில்நுட்ப கற்கைநெறிகளை ஆரம்பிப்பதற்கான திட்ட முன்மொழிவுகள் எதனையும் கொண்டிருக்கிறீர்களா?**

ப: இலங்கை கடலால் சூழப்பட்ட ஒரு தீவு. எமது பிரதேசத்திலும் கடல்வளம் இருக்கின்றது. அந்தத் துறையில் அனுபவம் வாய்ந்தவர்கள் இருந்தாலும் கடல்சார் கல்வியில் சிறப்புத் தேர்ச்சிபெற்றவர்கள் மிகவும் குறைவாக உள்ளனர். ஆகவே மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்டு நாம் உடனடியாக கடல்சார் கற்கைநெறிகளை உள்ளடக்கிய பீடத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம். இந்தப் பீடம் பொருளாதார அபிவிருத்திக்கும் முக்கியத்துவமளிக்கும் என்ற காரணத்தால் குறுகியகால கற்கைநெறிகளையும் பட்டப்படிப்புக்களையும் உருவாக்குவது உடனடித் திட்டமாக இருக்கும்.

**கே: வவுனியா பல்கலைக்கழகம் இந்தப் பிரதேசத்தின் கலாசாரம், பண்பாடு, மரபுகள் போன்றவற்றை பேணிப்பாதுகாக்கும் ஒரு கல்விக் கட்டமைப்பாக உருவாக்கம் பெறுவதில் உங்களது பங்கு எவ்வாறு அமையும்?**

ப: இந்தப்பிரதேசத்தை பொறுத்தவரை பல்லினத்தவர்கள் வாழ்கின்றனர். அனைத்து மரபுகளையும் மதங்களையும் கலாசாரத்தையும் அனுசரித்து மதித்து மென்மேலும் பேணிப்பாதுகாப்பதிலும் வலுப்படுத்துவதிலும் எமது ஆதரவை நிச்சயமாக வழங்குவோம்.

**கே: வவுனியாவில் தனிப்பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டிருப்பது எதிர்காலத்தில் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும் அங்கு தமிழ்மாணவர்களின் சேர்க்கை விகிதம் குறைவடையும் என்று சில புத்திஜீவிகள் கருத்து வெளியிடுகின்றனரே?**

ப: அவர்களது கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியன அல்ல. இது ஒரு தேசிய பல்கலைக்கழகம் இங்கு யாரும் கல்வியைக் கற்கலாம். இந்தப்பிரதேசத்தினதும் மாகாணத்தினதும் நாட்டினதும் அபிவிருத்திக்காகவே இந்தப் பல்கலைக்கழகத்தை உருவாக்கியிருக்கிறோம். நல்ல நோக்கத்துக்காகவே இது உருவாக்கப்பட்டது. சிறந்த கல்வியியலாளர்களை உருவாக்கி, வன்னிப் பிரதேசத்தில் உள்ள கல்வியியலாளர் பற்றாக்குறையை போக்கி, வன்னிப் பிரதேசத்தின் அனைத்து பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் உயர்கல்வி வாய்ப்பு கிட்ட வேண்டும் என்பதே எமது ஆவல். எனவே யாரும் அஞ்சத்தேவையில்லை. மாற்றுக்கருத்து உடையவர்கள் அதனை மறந்து எம்மோடு ஒத்துழைப்பதனூடாக இதன் உருவாக்கத்தின் நோக்கத்தை மென்மேலும் பூர்த்திசெய்து கொள்ளமுடியும்.

**கே: வவுனியா வளாகத்தில் விரிவுரையாளராக உள்நுழைந்து துணைவேந்தராக உயர்ச்சியடைந்துள்ளீர்கள்? எப்படி சாத்தியமாகியது?**

ப: தொழில் நிறுவனத்திலும், பணியிலும் அக்கறை கொண்டு கடினமாக உழைத்தோமானால் நாம் எதனையும் சாதிக்கலாம். எந்தத் தடைகளையும் வெற்றிகொள்ளலாம். அதுவே எனது அனுபவம். பல சவால்கள் துன்பங்களுக்கு மத்தியில் எனது கடின உழைப்பும் உயரவேண்டும் என்ற சிந்தனையும் இந்த நிறுவனத்தையும் என்னையும் தரமுயர்த்தின.

**கே: இனிவரும் காலங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடனான தொடர்பு எப்படி அமையும்?**

ப: இதுவரை காலமும் யாழ்ப்பாண பல்கலைக்கழகமே எமது தாய். நாங்கள் அதன் பிள்ளைகளாகவே கடந்த முப்பது வருடங்களில் செயற்பட்டோம். எதிர்காலத்தில் சகோதர பல்கலைக்கழகங்களாக இருந்து பிராந்திய அபிவிருத்தியிலும் தேசத்தின் அபிவிருத்தியிலும் பெரும் பங்களிப்பை வழங்கும் நோக்கத்தை நிறைவேற்றுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை விவசாயம் நமக்குப் பொருத்தமா?

○ வடகோவை வரதராஜன்

இயற்கை வேளாண்மை என்ற தொனிப்பொருளில் பல கருத்துக்கள் இப்போது அதிகமாக முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்த இயற்கை வேளாண்மை என்பது ஒரு 'ரெண்ட்' ஆகிவிட்டது . ஆகவே இந்த 'ரெட்ண்டுக்குள்' பலர் தம் கருத்தை முன்வைப்பார்கள். அதில் தவறில்லை. ஆனால் மிகையாக இனிப்புத் தடவி இதை ஒரு வரப்பிரசாதமாகக் காட்டக்கூடாது.

இயற்கை வேளாண்மை பற்றி அதிகம் கதைப்பவர் யார் என்றால் , வெள்ளைச் சட்டை போட்ட மேல்தட்டு வர்க்கத்தினரும், விவசாயத்தைப் பொழுதுபோக்காக செய்பவர்களும் மட்டுமே . முழுநேரமாக விவசாயத்தை செய்து , அதற்கூடாக தம் வாழ்க்கையைக் கொண்டுசெல்பவர்கள் எவரும் இந்த இயற்கை வேளாண்மை பற்றி அதிகம் அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை .

அந்த விவசாயிக்குத் தேவை விவசாயத்தினூடான வருமானமே .தற்போது மேல்தட்டு வர்க்கத்தினரால் உச்சரிக்கப்படுகின்ற இந்த இயற்கை வேளாண்மை , ஒரு சாதாரண விவசாயிக்கு வருமானத்தைப் பெற்று தருகிறதா என்றால், என்னை பொறுத்தவரை இல்லை என்றே சொல்வேன் .

அண்மையில் நான் சென்று பார்த்த நான்கு இயற்கை விவசாயப் பண்ணைகளும் பெரும் நட்டத்திலேயே இயங்கிக்கொண்டிருக்கின்றன. உரிமையாளர்கள் வெளிநாட்டில் இருப்பதால் இந்த வெள்ளை யானைக்கு அவர்களால் தீவனம் கொடுக்க முடிகிறது. நான் பட்டும் படாமலும் அவர்களுக்கு சொல்லிவிட்டு வந்த விடயம் என்னவென்றால் , "தப்பித்தவறியும் ஒரு முழுநேர விவசாயியை இந்தப் பண்ணைகளைப் பார்க்க அனுமதிக்காதீர்கள்" என்பதுதான் .ஒரு முழுநேர விவசாயி இந்த பண்ணைகளில் உள்ள பயிர்களின் சேட்டமற்ற தன்மையை பார்த்தானாயின், அவன் இயற்கை விவசாயத்தின் பக்கம் தலைவைத்தும் படுக்கமாட்டான் .



## இயற்கை வேளாண்மை என்றால் என்ன?

எமது உள்ளூரில் கிடைக்கக்கூடிய இயற்கைப் பசளைகளையும் ( மாட்டெரு , ஆட்டெரு , கூட்டெரு , பசுந்தாள் பசளைகள்)

இயற்கைப் பூச்சி விரட்டிகளையும் (வேம்பு, நொச்சி, பாவட்டை, பன்னை, எருக்கலை, உள்ளி, மஞ்சள் ) கொண்டு பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளல் இயற்கை வேளாண்மை எனப்படும் .

அதாவது செயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட பூச்சி கொல்லிகள், களைகொல்லிகள், பங்கசு நாசினிகள், செயற்கை உரங்கள் என்பன இங்கு பயன்படுத்தப் படமாட்டாது. இதனால் மனிதனுக்கு ஆரோக்கியமான நஞ்சற்ற உணவு கிடைக்கும் .

## இயற்கை வேளாண்மை ஏன் தேவை?

1. சர்வதேச கார்ப்பிரேட்டுகள் அறிமுகப்படுத்தும் பூச்சி கொல்லிகளாலும் களைகொல்லிகளாலும் எமது உணவும் மண்ணும் நீரும் நஞ்சாவதைத் தடுக்க
2. எமது பாரம்பரிய விதையினங்கள் அழிந்து போவதைத் தடுக்க
3. விவசாய இரசாயனங்களால் எமது பன்மைத்துவ சூழற்த் தொகுதி பாழ்படாமல் இருக்க .

- உ +ம் களைகொல்லிகளால் எமது மூலிகைத் தாவரங்கள் பலவற்றை இழந்துவிட்டோம்.
- பூச்சிக்கொல்லிகளால், மண்புழு, கறையான் அட்டை, என்பவற்றையும் பலவகைப் பறவைகளையும் அழித்து விட்டோம்

4. ஒவ்வொரு குடும்பமும் தமது சுயதேவையைப் பூர்த்தி செய்து தன்னிறைவுப் பொருளாதாரத்தை அடைவதற்கு.

## இயற்கை வேளாண்மை பண்ணைகள் நட்டத்தில் போவதேன்?

இவ்வளவு நன்மைகளையும் கொண்ட இயற்கை வேளாண்மைப் பண்ணைகள் நட்டத்தில் இயங்குவதற்கு காரணம் அங்கு சீரிய திட்டமிடல் இல்லாமையே .

உரத்துக்கு தூண்டல் பேறுடைய நவீன வீரியரக (Hybrids) தாவரங்களை பண்ணையில் வளர்த்துக் கொண்டு அவற்றுக்கு மாட்டெருவை போட்டு வளர்த்தால் அவை போதிய வளர்ச்சியைக் காட்டமாட்டாது. பழமை என்னும் இயற்கை வேளாண்மைக்கு நவீன ரகப் பயிர்கள் என்பது முரண்நகை அல்லவா .நான் பார்த்த இயற்கை வேளாண்மைப் பண்ணையில் வீரியரக ரெட் லேடி ரக பப்பாசியை வைத்துக் கொண்டு மாட்டெரு இட்டு வளர்க்கிறார்கள். கிழமைக்கு ஒரு இறைப்பு மட்டுமே. அந்தப் பப்பாசிகளும் நோஞ்சலாக நான்கைந்து காய்களுடன் மட்டுமே நிற்கின்றன.



உண்மையில் வீரியரக ரெட் லேடி பப்பாசிக்கு இரண்டு மாதங்களுக்கு ஒருதடவை, பப்பாசிக்கு எனத் தயாரிக்கப்பட்ட என்.பி.கே( NPK) கலப்பு உரம் இட்டு நான்கு நாள்களுக்கு ஒருதடவை நீர் பாய்ச்ச வேண்டும் .

அப்போதுதான் ரெட் லேடி உச்சவிளைச்சலைக் கொடுக்கும்.

இவர்கள் இயற்கை வேளாண் பண்ணையில் வைத்திருக்க வேண்டியது குப்பையில் தானாக முளைத்து பயன் தரும் நாட்டு பப்பாசியே. இந்த நாட்டுப் பப்பாசி முன்பு உங்கள் வீடுகளில் தானாக முளைத்து கனி கொடுத்ததை பார்த்திருப்பீர்கள். இந்த பாப்பாசிக்கு நீர் பாய்ச்சியோ உரமிட்டோ அறிந்திருக்க மாட்டோம். இயற்கையானது , எந்த இடத்திலும் , எந்தச் சூழலிலும் வளர்ந்து கனி கொடுக்குமாறு அதனைப் படைத்துள்ளது.

இயற்கை வேளாண்மைக்கு முதலாவதாக நாம் செய்ய வேண்டியது இயற்கைச் சூழலில் போட்டி போட்டு வளரக் கூடிய நம் பாரம்பரிய நாட்டுரக விதைகளைத் தேடிக் கண்டுபிடித்து அவற்றைப் பயிரிடவேண்டும் .

மொட்டைக்கறுப்பன் மற்றும் சீனட்டி நெல் ரகங்களும், மாதகல் கறுப்பன் மிளகாயும் , மட்டுவில் முட்டிக்கத்தரியும், மிருசுவில் குரங்குவால் பயிற்றையும் ,பச்சையின பாவல் வர்க்கமும் , குடத்தனை சர்க்கரைப்பூசணியும் , பூநகரி முட்டிச் சுரைக்காயும், தென்மராட்சி வத்தாளைக் கொடியும், வன்னியின் வட்டுக்கத்தரியும் மீண்டும் தேடியெடுத்து பயிர்செய்தாலே அது இயற்கை வேளாண்மை எனப்படும். இல்லையேல் அது வெறும் பொழுதுபோக்கு விவசாயம் தான். இயற்கை வேளாண்மை எமக்கு புதிதானதா என்றால் அப்படி அல்ல என்பேன். நம் முன்னோர் செய்து வந்த வேளாண் செய்முறைகளும், இன்றைய சேனைப் பயிர் செய்கையும் இயற்கை வேளாண்மைதான். சிங்கள பிரதேசங்களில் இப்போதும் கன்னி நிலத்தில் சேனைப் பயிர் செய்கையாக இயற்கை வேளாண்மையே செய்கை பண்ணப்படுகிறது . இங்கு உரம், பூச்சிகொல்லிகள், களைகொல்லிகள் எதுவும் பாவிக்கப்படுவதில்லை . ஏன் நீர்ப்பாசனம் கூட செய்யப் படுவதில்லை . மழையை நம்பி உழுந்து, பயறு , சோளம் , கௌபி என்பவை செய்கை பண்ணப்படுகின்றன.

## பெருகிவரும் உலக சனத்தொகைக்கு இயற்கை வேளாண்மை உணவு கொடுக்குமா ?

சனத்தொகை அதிகரிக்க அதிகரிக்க , நிலத்துக்கும் நீருக்கும் போட்டி ஏற்படுகிறது . இந்தப் போட்டியைச் சமாளிக்க குறைந்த நிலப்பரப்பில் அதிக விளைச்சலை பெறவேண்டும் . ஜப்பானும், பிலிப்பைன்ஸும் இந்த முறையிலேயே தமது நெல்லுற்பத்தியை மேற்கொள்கின்றன.

"விளைச்சல் குறைந்த பாரம்பரிய ரகங்களை பயிரிட்டு அதிக உற்பத்தியை பெறவேண்டுமாயின் அதிகளவு நிலப்பரப்பில் பயிர்செய்கை மேற்கொள்ளப்படவேண்டும் . இதனால்காடுகள் அழிக்கப்பட்டுவிளைநிலங்களாக்கப்பட அது இயற்கை சமநிலையை குழப்பும் பாரிய இடராக அமையும்" என்று இயற்கை விவசாய ஆர்வலர் நடேசன் குகதாசன் தெரிவிக்கிறார் .


## யாரால் இயற்கை வேளாண்மை செய்ய முடியும்?

வீட்டில் இடம் இருக்கக்கூடிய எவரும் இயற்கை விவசாயத்தை செய்ய முடியும் . மாடிகளிலும் யன்னல் ஓரங்களிலும் வீட்டு முற்றத்திலும் கொள்கலன்களில் மரக்கறிப் பயிர்வகைகளை நட்டு வெற்றிகரமாக இயற்கை வேளாண்மையை மேற்கொண்டு, எமக்குத் தேவையான நஞ்சற்ற மரக்கறிவகைகளை நாமே உற்பத்திசெய்து கொள்ள முடியும் .இதில் முக்கியமாக கவனிக்க வேண்டியது பாரம்பரிய இனங்களையே வீட்டுத்தோட்டத்திலும் செய்கை பண்ண வேண்டும். இல்லையேல் நீங்கள் பயிர்நோயுடன் போராட வேண்டி இருக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆரம்பத்தில் ஒருநாள், 2 நாள்கள், பின்னர் ஒருவாரம் என்று நீண்டு கொண்டு வந்த இவரது தூக்கம் ஒரு கட்டத்தில் மாதத்தில் 25 நாள்கள் என்ற நிலைக்கு வந்தது.

# கலியுக கும்பகர்ணன்

இ கும்பகர்ணன், நாம் அனைவரும் நன்கு அறிந்த பெயர். இராமாயணத்தில் வரும் கதாபாத்திரம். கும்பகர்ணனின் அடையாளம் ஆழ்ந்த தூக்கம்.

இந்தப் புராணக் கதைகளைக் கேட்டு ஆச்சரியமடைந்திருக்கின்றோம். அவ்வாறு நடத்திருக்குமா என்று சந்தேகப்பட்டிருக்கின்றோம். ஆனால் நிகழ்காலத்தில் ஒரு கும்பகர்ணன் வாழ்ந்து கொண்டிருக்கிறார். புராணக் கதையில் வரும் கும்பகர்ணனை விஞ்சியவர் இவர்.

புராணக் கதையில் வரும் கும்பகர்ணன் ஆண்டில் ஆறு மாதங்கள் தூங்குவான், மீதி ஆறு மாதங்கள் விழித்திருப்பான். ஆனால் நிகழ்கால கும்பகர்ணனோ ஆண்டில் 300 நாள்களை தூங்கியே கழிக்கிறார் என்றால் நம்புவீர்களா? ஆனால் நம்பித்தான் ஆக வேண்டும். ஏனெனில் அதுதான் நிஜம்.

புர்காராம். வயது 42. இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில், ஜோத்பூரில் உள்ள நாகூரைச் சேர்ந்தவர். இவர்தான் இந்த நவீன கும்பகர்ணன்.


ஆரம்பத்தில் புர்காராமின் வாழ்க்கையும் ஏனையோரைப் போலவே இருந்தது. பலசரக்குக் கடை நடத்தி வந்த இவர் திருமணமும் செய்து கொண்டு மகிழ்ச்சியாகத்தான் இருந்தார். ஆனால் மெல்ல மெல்ல இவருக்குப் பிரச்சினை ஆரம்பித்தது.

ஆரம்பத்தில் ஒருநாள், இரண்டு நாள்கள், பின்னர் ஒருவாரம் என்று நீண்டு கொண்டு வந்த இவரது தூக்கம் ஒரு கட்டத்தில் மாதத்தில் 25 நாள்கள் என்ற நிலைக்கு வந்தது. மாதத்தில் 5 நாள்கள் மட்டுமே தனது பலசரக்குக் கடையைத் திறக்கும் நிலைமைக்குத் தள்ளப்பட்டார்.

புர்க்காராமின் விநோத செயற்பாடுகளால், தொடரும் தூக்கத்தால் மிரண்டு போனார் அவரது மனைவி. பொறுத்தது போதும் என்று புர்காராமை மருத்துவரிடம் இழுத்துச் சென்றிருக்கிறார்.

இருவரும் சொன்னவற்றைக் கேட்டு மருத்துவர்களுக்கு ஒரே அதிர்ச்சியும், ஆச்சரியமும். உடனடியாகப் பரிசோதனைகளில் இறங்கியிருக்கின்றனர். நீண்ட பரிசோதனைகளின் முடிவில் புர்க்காராமின் பிரச்சினையை ஒருவாறு மருத்துவர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர். ஆக்சிஸ் ஹைப்பர்சேமியா என்ற விநோத நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார் புர்க்காராம். இந்த நோய் ஒரு விநோதமான நோய். இந்த நோய்ப் பாதிப்பு ஏற்பட்டால், தூக்கத்தில் இருந்து எழ முயற்சித்தாலும், பாதிக்கப்பட்டவர்களின் உடல் அதற்கு ஒத்துழைக்காதாம். அத்தோடு, இவருக்குத் தூக்கம் வருவதற்கு முன்னர் கடும் தலைவலியும் இருக்குமாம். புர்காராமின் வியாதியைக் கண்டுபிடித்தாலும், அதற்கு மருத்துவம் செய்வதோ அல்லது இந்த நோயை முற்றிலும் குணப்படுத்துவதோ அவ்வளவு எளிதான காரியம் அல்ல என்கின்றனர் மருத்துவர்கள்.

புர்காராம் இப்படித் தூங்குவது சில நாள்களாக என்று நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை. சுமார் 23 ஆண்டுகளாக அவர் இந்த விநோத நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார். மெய்மறந்து தூங்கும் புர்க்காராம் உணவு உண்பதுகூட தூக்கத்தில்தானாம். அவரது மனைவியும், தாயும் தான் அவருக்கு உணவூட்டி விடுகிறார்கள். இவரது இந்த விநோத நோயால் புர்க்காராமை விடவும் அவரது தாயும், மனைவியும் கடும் நெருக்கடிகளைச் சந்திக்கின்றனர். புர்க்காராம் தூங்கியவுடன், அவரது பலசரக்கு வியாபாரமும் படுத்த படுக்கையாவிட்டது. அதனால் அந்தக் குடும்பம் வருமானத்துக்கு வழியின்றித் தவித்து வருகின்றது. ஆனாலும் அவர்கள் புக்காராமை நன்றாகக் கவனித்துக் கொள்ளத் தவறவில்லை. மருத்துவர்கள் கைவிரித்துள்ளபோதும் புர்க்காராமின் தாயும், மனைவியும் அவர் குணமாவர் என்ற நம்பிக்கையுடன் நாள்களைக் கடத்திக் கொண்டிருக்கின்றனர். புர்க்காராமின் இந்த அதீத தூக்கத்தால் அந்த ஊரில் உள்ளவர்கள் அவரை கும்பகர்ணன் என்று பட்டப் பெயர்சூட்டிக் கிண்டலடிக்கிறார்களாம். ஆனால் புர்க்காராம் அது பற்றி அலட்டிக்கொள்வதோ, கவலைப்படுவதோ இல்லையாம். எப்படி என்று கேட்கிறீர்களா? புர்காராம் தான் நித்திரை கொள்கிறாரே.!!





○ மயூ

# ஏன் மெலிந்தாள் இசக்கியம்மாள்?

கு ழந்தைகள், சிறுவர்கள் உள்ள வீடுகளில் உள்ள பெரியவர்கள் அவதானமாக இருக்க வேண்டும். வீட்டில் உள்ள பொருள்கள் தொடர்பாக அவதானத்துடன் இருக்க வேண்டும். ஆபத்தை விளைவிக்கும் பொருள்கள் குழந்தைகளின், சிறுவர்களின் கைகளில் எட்டாதவாறு வைத்திருக்க வேண்டும். சிறு கவனக் குறைவால் எவ்வளவு பெரிய பிரச்சினைகள், பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்பதற்கு இசக்கியம்மாள் ஒரு சாட்சியாக மாறியிருக்கிறாள். இசக்கியம்மாளுக்கு ஐந்து வயது. தமிழகத்தின் தென்காசி மாட்டத்தில் உள்ள செங்கோட்டை அவளது ஊர். தந்தை ஒரு கட்டுமானப் பணியாளர், தாய், இரு குழந்தைகள் என அளவான குடும்பம். இசக்கியம்மாள் கடைக்குட்டி. பார்ப்பதற்கு கொள்ளை அழகுள்ள குட்டிச் செல்லம். கடந்த மார்ச் மாதம் 16ஆம் திகதி பெற்றோர் ஒரு அலுவல் காரணமாக வெளியே சென்றிருக்கின்றனர். இசக்கியம்மாள் தனது சகோதரியான 11 வயது தனலட்சுமியுடன் வீட்டில் இருந்திருக்கிறாள். விளையாடிக் கொண்டிருந்த இசக்கியம்மாளின் கண்களில் பட்டது அந்தப் பொருள். வெள்ளை வெளேர் என்றிருந்த அந்தப் பொருளைப் பார்த்த இசக்கியம்மாளுக்கு இனிக்கும் சீனி தான் நினைவுக்கு வந்தது. அதை எடுத்து மடமடவென வாயில் போட்டுக் கொண்டது அந்தக் குழந்தை. ஆனால் அவள் சீனியென நினைத்து உட்கொண்டது, கழிவறைகளைச் சுத்தப்படுத்தப் பயன்படுத்தப்படும் "பிளீச்சிங் பவுடர்".

இது நடந்து சில நாள்களுக்குப் பின்னர் சாப்பிட முடியாமலும், தண்ணீர் அருந்த முடியாமலும் சிரமப்பட ஆரம்பித்தாள் இசக்கியம்மாள். என்ன காரணம் என்று தெரியாத பெற்றோர் நாட்டு மருந்துகளைக் கொண்டு குணமாக்க முயன்றிருக்கின்றனர். ஒரு கட்டத்தில் தண்ணீரைக் கூட அருந்த முடியாத நிலைமைக்குச் சென்றாள் இசக்கியம்மாள்.



அதன்பின்னர்தான் தென்காசி மருத்துவமனைக்கு இசக்கியம்மாளை எடுத்துக் கொண்டு ஓடியிருக்கின்றனர் பெற்றோர். சிறுமியைப் பரிசோதித்த மருத்துவர்கள் உணவுக் குழாய் மற்றும் குடலில் பாதிப்பு இருப்பதைக் கண்டுபிடித்து நெல்லை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். சிறுமியின் குடல் பகுதியை மருத்துவர்கள் பரிசோதித்தபோது விசத்தன்மை கொண்ட பொருளை சிறுமி உட்கொண்டிருப்பதைக் கண்டுபிடித்தனர். இதற்கிடையில் உணவு உண்ணவோ, நீர் அருந்தவோ முடியாமல் இசக்கியம்மாள் உருக்குலைந்து போனாள். அவளது உடல் எடை 7 கிலோ என்ற அளவுக்கு வந்துவிட்டது. "பசியால துடிக்கும் குழந்தை பிஸ்கட், பால்னு எல்லாத்தையும் கேட்கும். ஆனா சாப்பிட முடியாமல் தவிக்கிறதைப் பார்த்து நாங்க அழுவுறதைத் தவிர எதுவும் செய்ய முடியல" என்று கண்ணீர் விடுகின்றனர் பெற்றோர்.

மருத்துவர்கள் நீண்ட போராட்டத்தின் மத்தியில் சிறுமியின் உணவுக் குழாயில் இருந்த 3 அடைப்புகளை சத்திர சிகிச்சை மூலம் சரி செய்திருக்கிறார்கள். அதன்பின்னர் சற்று உடல் நலம் பெற்ற சிறுமி, சொந்த ஊருக்குச் சென்றபோதும், மீண்டும் உணவு உண்ண முடியாது போயிருக்கிறது.

இந்த விடயத்தை அறிந்த செங்கோட்டை அரசு மருத்துவமனை மருத்துவர் ராஜேஷ் கண்ணா சிறுமியை மீண்டும் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்து வந்திருக்கிறார். மீண்டும் பரிசோதனைகளும் சிகிச்சைகளும் இசக்கியம்மாளுக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளனது.

சிறுமியின் உணவுக் குழாயில் மீண்டும் பிரச்சினை ஏற்பட்டுள்ளமை பரிசோதனைகளில் தெரியவந்திருக்கிறது. இந்தத் தகவல்களை அறிந்த தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சிறுமியை சென்னையில் உள்ள எழும்பூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று உரிய சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்.

எழும்பூரில் தங்கியிருக்கும் சிறுமியின் குடும்பத்தினருக்கு ஏற்பட்டுள்ள நிதிச் சுமையைக் கவனத்தில் கொண்டு, தனக்கு ஒதுக்கப்பட்ட சட்டமன்ற விடுதியில் உள்ள அறையில் அவர்களைத் தங்கிக்கொள்ள அனுமதித்துள்ளார்.

இப்போது சிறுமியின் வயிற்றில் துளையிட்டு உணவு செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மருத்துவர்களின் சிறப்பான சிகிச்சை காரணமாக 6 கிலோ எடையுடன் மருத்துவமனைக்கு வந்த சிறுமி இசக்கியம்மாள், தற்போது இரண்டு கிலோ எடை அதிகரித்திருக்கிறார். சிறுமி உடல் நலம் பெறப் பிரார்த்திப்போம். அதேநேரம் "ஆபத்து மிகுந்த பொருள்களை குழந்தைகளின் கைக்கு எட்டும் இடத்தில் வைப்பதைத் தவிர்க்க வேண்டும்." என்பதையும் மனதில் இருத்துவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதிக போதை, தற்கொலை"

அவன் நன்றாகப் படித்தவன். தந்தையின் கடின உழைப்பால், எதையும் இல்லை என்று கூறாமல் கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுக்குமளவுக்கு சிறப்பான குடும்பப் பொருளாதார நிலை. ஆசையாகக் கேட்ட புதியரக மோட்டார் சைக்கிளும் வாங்கிக் கொடுத்து அழகு பார்த்த குடும்பம்.

கல்வி நடவடிக்கைக்காக அவன் வெளிமாவட்டம் ஒன்றில் சிலகால தங்கியிருக்க வேண்டியிருந்தது. போதைப்பொருள் விற்பனை மற்றும் பாவனை அதிகமாக உள்ளதாகச் சொல்லப்படும் மாவட்டம் அது. அங்கு தங்கியிருந்தபோது கூட அவனை எவ்வித தீய பழக்கங்களும் அண்டியதில்லை.

ஆனால் கலாசாரம் நிறைந்த மாவட்டம் எனப் போற்றப்படும் யாழ்ப்பாணத்துக்கு வந்த பின்னர் அவனது போக்கே மாறியது. கொஞ்சம் கொஞ்சமாக அவனுக்கு நண்பர்கள் கூடினர். அப்படியே ஹெரோய்ன் பழக்கமும் தொற்றிக்கொண்டது .அவனது இயல்பும் அடியோடு மாறிப்போனது.

சின்னச் சின்ன விடயங்களுக்கு கூட கோபப்பட்டு சத்தமிடத் தொடங்கினான்.பெற்றோரின் புத்திமதியைக் கேட்க மறுத்தான். தன்னுடைய வாழ்க்கையை அவனே கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கத் தொடங்கினான். அவனைப் பார்த்து,அவனது தம்பிகளும் தடம் மாறிப்போய்விடுவார்களோ என்ற அச்சம் பெற்றோருக்கு. எனினும் அவன் திடீரென ஒருநாள் போதைப்பொருள் பாவனையில் இருந்து விடுபடவும், அதற்கான சிகிச்சை பெறவும் சம்மதித்தான். மீண்டும் அந்தக் குடும்பத்தில் மகிழ்ச்சி. தாங்கள் கும்பிட்ட தெய்வம் கண்ணைத் திறந்துவிட்டதாக பெற்றோர் ஆனந்தமடைந்தனர். ஆனால் அது நீண்ட நாட்கள் நிலைக்கவில்லை. சிகிச்சை முடிவடைந்து சிலகாலத்துக்கு பின்னர் மீண்டும் அவன் முருங்கை மரமேறிய வேதாளம் போல, ஹெரோய்னுக்கு அடிமையானான். யாழ்.நகர் கடையொன்றில் பணிபுரியத் தொடங்கியவன். வேலை முடிந்ததும் அப்படியே வீட்டுக்கு அருகில் உள்ள மைதானத்துக்குச் சென்று நண்பர்களோடு சேர்ந்து போதை ஊசியை ஏற்றுவதை வழக்கமாகக் கொண்டான்.

அறும் அப்படித்தான். மைதானத்துக்குள் ஆளுக்கு ஆள் மாறி மாறி போதை ஊசிகளை ஏற்றி இன்னொரு உலகில் சஞ்சரிக்கத் தொடங்கினர். போதை கொஞ்சம் தெளியத் தொடங்கியபோதே, அவன் பேச்சு மூச்சற்று மைதானத்தில் கிடப்பதை கவனித்தனர். போதையின் மயக்கத்தில் அப்படி இருப்பதுண்டு. அதனால் அவன் மயங்கியிருக்கிறான் என நினைத்து, உடனடியாக ஓட்டோவில் அவனி ஏற்றி வீட்டுக்கு அனுப்பினர். ஆனால் போதை அவன் கதையை முடித்து விட்டிருந்தது. உடற்கூற்றுப் பரிசோதனையில், "அதிக போதை, தற்கொலை" என்று அவன் சாவுக்கான காரணம் குறிப்பிடப்பட்டது.

## அதே காரணம்; அதே சாவு

இது இன்னொருவனின் கதை.
இவன் 26 வயதான இளைஞன். தனியார் நிறுவனம் ஒன்றில் பணி
யாற்றி வந்தான். இந்த நிலையில் இவனும் ஹெரோய்ன் போதைப்
பொருள் பாவனைக்கு அடிமையானான். சுமாரான குடும்பப் பொருளா
தார நிலை. சகோதரர்கள் அரச உத்தியோகம் . சமூகத்தில் மதிப்புடன்
பேசப்பட்ட குடும்பம். ஆனால் இவனின் போதைப்பொருள் பாவனையால்
அந்தக் குடும்பத்துக்குள்ளும் குழப்பம். சந்தோஷம் கரைந்து போனது.
வீட்டாரோடு இவன் எந்நேரமும் போதையில் முரண்படத் தொடங்கினான்.
எங்கே போகிறான்? எப்போது வருவான்? எதுவும் இவன் சொல்வதில்லை.
இரண்டு மூன்று நாள்கள் கழித்தும் வீட்டுக்கு வருவான். இவனது வாழ்க்
கையை மட்டுமல்ல குடும்பத்தின் மன அமைதியையும் பாதித்திருந்தது
போதைப்பொருள் பாவனைப் பழக்கம். ஒழுங்காக வேலைக்கும் செல்
வதில்லை. இரண்டு வருடங்களுக்கும் மேலாக இந்த போதைப்பொருள்
பாவனைக்கு இவன் அடிமையாகியிருந்தான்.
திடீரென ஒருநாள். போதை ஊசி ஏற்றிய நிலையில் இவன் உயிர் பிரிந்
தது. இவனுடைய உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையும் "அதிக
போதை, தற்கொலை" என்றே அவன் சாவுக்கான காரணத்தை சொன்
னது.

## புதியமுறையில் போதை

மெல்ல மெல்ல தாம் தற்கொலை செய்கிறோம் என்று தெரியாமலே பல இளைஞர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாகி தினந்தோறும் போதைப் பொருளை பயன்படுத்துகின்றனர்.

முன்னரெல்லாம் ஹெரோய்ன் போதைப் பொருளைச் சூடாக்கி அந்த சந்தர்ப்பத்தில் வரும் புகையை நுகர்ந்து போதையேற்றிக் கொள்வர். ஆனால் யாழ்ப்பாணத்தில் இப்போது அந்தப் போதையேற்றும் முறை பழசாகிவிட, உச்சக்கட்ட போதையை பெற புதிய முறையைப் பின்பற்றுகிறார்கள் என்ற திடுக்கிடும் [illegible] கிடைத்தது.

குறிப்பாக கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள கிராமமொன்றிலேயே இந்தப் புதிய விதமான போதையேற்றும் முறை அதிகம்.




அதிக போதை, தற்கொலை என்று அவன் சாவுக்கான காரணம் குறிப்பிடப்பட்டது.

"போதைப்பொருளை வாங்குவதற்காக எந்த செயலைச் செய்வதற்கும் தயாராகவே உள்ளனர்."

மீன்களுக்குள் போதைப் பொருளைப் பதுக்கி கடத்திவந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

ஹெரோய்ன் போதைப்பொருளை வெற்று பியர் ரின் ஒன்றில் போட்டு அதனுள் தேசிக்காய் சாற்றை பிழிந்து விடுவார்கள். பின்னர் பியர் ரின்னை நெருப்பில் சூடாக்குகின்றனர். அதன் போது போது மருந்து செலுத்துவதற்காக பயன்படும் 'வெற்று ஊசி சிறிஞ்ச்' ஒன்றைப் பயன்படுத்து, சூடாக்கிய போதைப்பொருளை அதற்குள் இழுத்து . பின்னர் தமக்குத் தாமே ஏற்றிக்கொள்வர். சிலர் ஊசியைக் குற்றி தமது இரத்தத்தை கொஞ்சமாக உள்ளிழுத்து பின்னர் அதனோடு சேர்த்து சூடாக்கிய போதைப்பொருளையும் தமக்குள் செலுத்திக்கொள்கின்றனர். இதனால் தமக்கு 'சூப்பர் பவர்' கிடைப்பதாக நினைத்துக் கொள்கிறார்கள். ஆனால் உண்மையில் "நனைந்த கோழி" அல்லது "நோய்க் கோழி" போன்று தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு இருப்பார்கள் இந்தப் போதைக்கு அடிமையானவர்கள்.

### குச்சி மருந்தும் குருதி உறைவும்

குறித்த பகுதியில் ஒரு முள் (தீக்குச்சி மருந்தளவு) ஹெரோய்ன் 1200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இந்த போதைக்கு அடிமையானவர்கள் வேலைக்கு செல்வதைத் தவிர்த்து வீட்டில் பணத்தைக் கேட்டு தொந்தரவு கொடுப்பதுடன் வீட்டில் உள்ள பொருட்களையும் திருடிச் சென்று விற்று போதைப்பொருளினை வாங்கிக்கொள்கின்றனர். போதைப்பொருளை வாங்குவதற்காக எந்த செயலைச் செய்வதற்கும் தயாராகவே உள்ளனர். இதற்கு அந்தப் பகுதியில் அண்மையில் நிகழ்ந்த பல குற்றங்களே சாட்சி. ஊசி மூலம் போதைப் பொருளைச் செலுத்தும்போது குருதி உறைதல் ஏற்படுகிறது. இதனால் அவர்கள் தங்கள் இளமைக் காலத்திலேயே குருதி உறைதல் ஏற்பட்டு இறந்து விடுவார்கள். ஆயினும் உடல் நிலையைப்பொறுத்து இறப்புக்கான காலம் கூடிக்குறையலாம்.

### போதைவியாபாரிகளின் 'டெக்னிக்'

யாழ் நகரை அண்டியுள்ள 'பொம்மை வெளி' என அழைக்கப்படும் இடத்தில் உள்ள போதைப் பொருள் வியாபாரியான பெண் ஒருவரிடமிருந்தே கோப்பாய் பகுதிக்கு போதைப்பொருட்கள் பரிமாறப்படுகின்றன. கடந்த "லொக்டவுண்" காலங்களில் கூட தடையின்றி தாராளமாகவே இந்த போதைப்பொருள் கிடைத்துள்ளது. கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இந்தக் கிராமத்தில் சுமார் மூன்று பேர் வரை போதைப் பொருள் வியாபாரிகள் இருக்கின்றனர்: அவர்கள் மொத்தமாக போதைப்பொருளை கடத்திவந்து. கிராமத்துக்குள் விற்பனையில் ஈடுபடுகின்றனர் என அந்தப்பகுதி மக்கள் கவலையோடு சொல்கிறார்கள். இதனால் பிரதேச இளைஞர்களில் அதிகமானவர்கள் இந்த போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களாக மாறத் தொடங்கியுள்ளனர்.

அண்மையில் யாழ் நகரை அண்டிய பகுதி ஒன்றில் வைத்து. இந்தியாவிலிருந்து போதைப்பொருளைக் கடத்திவந்து விற்பனையில் ஈடுபடும் குழுவைச் சேர்ந்த பிரதான சந்தேகநபர் யாழ். குற்றத்தடுப்பு பொலிஸாரால் போதைப்பொருள்களோடு கைதுசெய்யப்பட்டிருந்தார். இவர் தனது நான்கு படகுகளையும் போதைப்பொருள் கடத்தி வருவதற்கு பயன்படுத்தியதுடன் கொழும்புக்கு மீன் ஏற்றுவது போல் , மீன்களுக்குள் போதைப் பொருளைப் பதுக்கி கொழும்புக்குகு கடத்திவந்தமை இதன் பின்னர் கண்டறியப்பட்டுள்ளது.


அதேபோல் மற்றுமொரு பிரதான போதைப்பொருள் கடத்தல் குழுத் தலைவன் யாழ். நகரை அண்டிய பகுதியில் உள்ள தீவுப்பகுதி ஒன்றில் வசித்து வருகிறார். சொந்தமாக படகுகள் வைத்திருந்து இந்தியப் பகுதிக்குச் சென்று போதைப்பொருள்களைக் கடத்தி வருகிறார் . இவர் அந்தப்பகுதியில் பலருக்கு வீடுகள் கட்டிக் கொடுத்திருப்பதாகவும் அந்த நன்றிக்கடன் காரணமாக அந்தப்பகுதி மக்கள் போதைப்பொருள் கடத்தல் தொடர்பான தகவல்களை அதிகாரிகளுக்கு தெரிவிப்பதில்லை என்றும் சொல்லப்படுகின்றது. இதனால் குறித்த போதைப்பொருள் கடத்தல் குழுவைச் சேர்ந்தவர்களைக் கைதுசெய்து. சட்ட நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான சாட்சிகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறது. எனவே இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கிறது அவரின் போதை வியாபாரம்.

### வெள்ளைவேட்டி போதை வியாபாரிகள்

யாழ்ப்பாணத்தில் உள்ள சில வர்த்தகர்களும் போதைப் பொருளைக் கடத்தி விற்பனையில் ஈடுபடுபவர்களுக்கு பெருமளவில் நிதியைக் கொடுக்கின்றனர் என்கின்றனர் பொலிஸார். "இந்த போதைப் பொருளில் முதலீடு செய்துவிட்டு கடத்தலிலோ விற்பனையிலோ எந்தவிதத்திலும் தொடர்புகொள்ளாமல் இருந்துகொள்வர். கடத்தி வரப்பட்ட போதைப்பொருள் விற்பனையாகியதும், இலாபத்தில் ஒரு பகுதி அந்த வியாபாரிகளுக்கு வழங்கப்படுகிறது. பெருமளவு நிதியை வழங்கி போதைப்பொருள் வியாபாரத்தை மறைமுகமாகச் செய்துகொண்டு வெள்ளை வேட்டி சட்டையுடன் பணக்கார வர்த்தகர்களாக சிலர் எம் சமூகத்தின் மத்தியில் உள்ளனர்" என்று கூறுகிறார் அதிகாரி ஒருவர்.

கஞ்சா ஹெரோயின் , ஐஸ் என பல போதைப் பொருட்கள் வடக்கில் எங்கும் வாங்கக் கூடியவாறு போதைப்பொருள் சில்லறை வியாபாரிகள் அதிகம். இந்த போதைப்பொருள் பாவனையால் பலர் மனநலம் பாதிக்கப்பட்ட நிலையில் தெல்லிப்பழை மனநல சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பலர் இந்த பழக்கங்களில் இருந்து விடுபட விரும்பி புனர்வாழ்வும் பெற்று, மீண்டும் இயல்பு வாழ்வுக்கு திரும்பியுள்ளனர்.

இருப்பினும் இந்தச் சூழல் தொடருமாயின் எதிர்காலத்தில் யாழ்ப்பாணம் மட்டுமல்லாது வடக்கு மாகாணம் முழுதுமே போதைப்பொருளுக்கு அடிமையானவர்களால் நிறையும் அபாயமும் உண்டு. எனவே போதைப்பொருள் வியாபாரத்தின் சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்து அவர்களை சிறைக்குள் தள்ளி, மக்களைக் காக்க வேண்டிய கடமையை உரிய தரப்புகள் செய்ய வேண்டும். செய்வார்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் சுடர்

# பீனிக்ஸ் பறவை



இது ஒரு புனித தீப் பறவையாக வருணிக்கப்படுகின்றது. எகிப்திய, கிரேக்க, கிறிஸ்தவ புராண (தொன்மவியல்) கதைகளிலும், நவீன வரை கதைகளிலும் பீனிக்ஸ் பறவை இடம்பிடிக்கின்றது. "தானே தீக் குளித்து பின்னர் அதன் சாம்பலில் இருந்து உயிர்த்தெழுவதாக" என்று புராண கதைகளில் பீனிக்ஸ் பறவையின் தன்மையை எடுத்தாள்வதை காண்கிறோம்.

புராதனகதைகளின் படி கற்பனைப் பறவை ஆகிய இதன் தோற்றம் கடும் சிவப்பு நிற உடலையும் தங்க நிறத்திலான வால்ப்பகுதியையும் கொண்டு காணப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.மேலும்பீனிக்ஸ் பறவையின் நிறம் குறித்து ஒவ்வொரு புராணக்கதைகளிலும் ஒவ்வொரு விதமாக கூறப்பட்டுள்ளது. பீனிக்ஸ் பறவையானது 500 தொடக்கம் 1000 வருடங்கள் வரையிலான வாழ்க்கை சுழற்சியை கொண்டதாக நம்பப்படுகிறது.

இப்பறவையானது தனது ஆயுள் முடிவதாக உணரும் தறுவாயில் தானாகவே தனக்கென்று ஓர் மரத்தின் சிறு கிளைகளைக் கொண்டு கூடு ஒன்றை அமைத்து அதில் தனக்கு தானே தீ வைத்துக்கொள்ளுமாம். தீ வைத்துக் கொண்ட பீனிக்ஸ் பறவையும் அதன் கூடும் முற்றாக எரிந்து தீர்ந்ததும் அதில் எஞ்சிய சாம்பலில் இருந்து புதிய பீனிக்ஸ் பறவை அல்லது புதிய பீனிக்ஸ் பறவையின் முட்டை தோன்றுவதாக நம்பப்படுகிறது.

இவ்வாறாக மீண்டும் பிறக்கும் பீனிக்ஸ் பறவை சுயமாகவே தான் வாழும் காலத்தை நிர்ணயித்து புதிய ஒரு வாழ்க்கை சுழற்சியில் வாழுமாம்.

எவ்வாறு இருப்பினும் இவை உயிர் வாழ்ந்தமைக்கான எவ்வித தடயங்களும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. எனினும் புராணக் கதைகளிலும் பண்டைய புகழ் பெற்ற ஓவியங்களி லும் இவை முக்கியமான இடத்தை பெற்றுள்ளன.

# வாசித்தல்



ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் மாதத்தில் தேசிய வாசிப்பு மாதம் கொண்டாடப்பட்டு வருகின்றது. மொழியில் வாசிப்பு முக்கிய இடத்தை வகிக்கிறது.மொழியின் ஆரம்பம் சைகையாகும்.பின்பு எழுத்துருவம் பெற்ற காலத்தில் வாசிப்பு முக்கியத்துவம் பெறலாயிற்று. கல்வித்துறையில் குறிப்பாக ஆரம்பக் கல்விப் புலத்தில் வாசிப்பின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது.


வாசிப்பானது கற்கின்ற ஒரு வழிமுறை.வாசிப்பின் மூலம் ஒருவன் (மாணவன்) கற்றுக் கொள்கின்றான்.அறிவைப் பெற்றுக் கொள்கின்றான். அவனது விளக்கம் விருத்தியடைகிறது. இவ்விருத்தியானது பிள்ளையின் புத்திசார் விருத்தியில் முக்கிய பங்கு வகிக்கிறது.நூல்கள் மூலம் காலம், நேரம் மற்றும் ஏனையோரில் தங்கியிருப்பதிலிருந்து மாணவன் விடுதலை பெறுகின்றான்.

வாசிப்பானது புதிய அறிவைப் பெற்று அனுபவத்தை விரிவாக்கிக்கொள்ள உதவுகிறது. மற்றைய சமயத்தவர்களின் கலாசார விழுமியங்களை அறிந்து இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வைப் பெறுவதற்கும்.இனஒற்றுமையுடன் வாழ்வதற்கும் வாசிப்பு முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது.


வாசிப்பு ஒரு பிள்ளையின் சிறுபராயத்திலிருந்து உருவாக வேண்டும். இன்றைய நவீன உலகில் வாசிப்புத்திறன் அருகி வருகின்றது. வாசிக்கும் சமூகத்தினை உருவாக்க ஆரம்பத்திலிருந்தே முயற்சிப்போம்.



# பிஞ்சு தூரிகைகள்




எஸ்.அபிநயா
தரம்-6
J/K.T.C.C.



த.புகழ்சீரன்
தரம்-9C
சென்.ஜோன்ஸ்
கல்லூரி.




Vinclaus Epshipa,
தரம்-9
மானிப்பாய் சென்.ஆன்ஸ்
றோ.க.த.க. பாடசாலை




பி.சஞ்சய்,
தரம்-2
யா/கொக்குவில் இந்து
ஆரம்பப் பாடசாலை

## விலங்கு புதிர்

இந்தப் படத்தில் பல விலங்குகளின் உடல் உறுப்புகள் ஒளிந்துள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்.



1. தலை..............................?
2. உடம்பு............................?
3. கால்கள்...........................?
4. வால்...............................?



# அம்மா

அம்மாவை வழிபட்டால்
ஆலயங்கள் தேவையில்லை!
அம்மாவை உன் தெய்வமென கருது
நீ எந்த தவறும் செய்யமாட்டாய்!
எவ்வளவு தான் கோயிலில்
தொண்டு செய்தாலும்
நீ உன்தாய்க்கு செய்யும்
கடமையை மறந்து விடாதே!
அவ்வாறு நீ செய்தால்
உன் தாய்க்கு நீ கொடுக்கும் மரியாதை
அது தான் உன் தாய் உன்னை
பெற்றதற்கு நீ செய்யும் நன்றிக்கடன்.

**ஸ்ரீகாந்தன் சதுரத்திகன்**
தரம் 8, ஸ்ரான்லி கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடுகளும் கோலங்களும்



## குப்பிழான் ஐ.சண்முகனின் பவளவிழாக் குறிப்பு

ச.இராகவன்

2002 நடுப்பகுதியில் நாங்கள் பன்னிரண்டு பேரிணைந்து நண்பர்கள் வட்டவெளியீடாக 'இங்கிருந்து பன்னிரண்டு சிறுகதைகள்' எனும் தலைப்பில் சிறுகதைத் தொகுப்பொன்றைக் கொண்டு வந்திருந்தோம். இந்தத் தொகுப்பை வெளிக்கொணர்வதில் அரவிந்தன் அண்ணா (உடுவில் அரவிந்தன்), கதிரண்ணை (தொல்புரம் சி.கதிர்காமநாதன்) பளையான் (கோகுலராகவன்) ஆகியோர் முக்கிய செயற்பாட்டாளர்களாக இருந்தனர். முதலில் இந்தத் தொகுப்புக்கான முன்னுரைக்காக ஒரு முதுபெரும் படைப்பாளியை கதிரண்ணையும் பளையானும் அணுகியபோது "நான் முன்னுரையெல்லாம் வழங்குவதில்லை. வெளியீட்டு விழாவுக்கு விமர்சன உரையாற்றக் கூப்பிட்டால் வருவேன். முன்னுரை வேண்டுமென்றால் நீங்கள் குப்பிழானை அணுகுங்கள்" எனச் சொல்லி அனுப்பியிருக்கிறார். இதனால் பளையான் சில நாள்கள் அந்த முதுபெரும் படைப்பாளியின் மீது கடுப்பிலிருந்தது தனிக்கதை. அந்தத் தொகுப்பின் முன்னுரைக்காக சண்முகனை , அவர்கள் அணுகியபோது இன்முகத்தோடு வரவேற்று, குறித்த தினத்தில் முன்னுரையும் எழுதிக் கொடுத்திருந்தார். அது மேலோட்டமாக எழுதப்பட்ட முன்னுரையல்ல ஒவ்வொருவரினமும் கதைகளை ஆழ்ந்து நோக்கி நேர்மையாக எழுதப்பட்ட முன்னுரையாகும். எழுத்தார்வம் கொண்ட இளந்தலைமுறையினரை வரவேற்று ஊக்குவித்துக் கைதூக்கிவிடுவதில் சண்முகனுக்கு நிகராக எவருமேயில்லை.

'இங்கிருந்து பன்னிரண்டு சிறுகதைகள்' தொகுப்பு நூலின் வெளியீட்டு விழா முடிந்ததும் சண்முகனுக்குரிய பிரதியை என்னிடந்தந்து அவரிடம் சேர்ப்பித்துவிடுமாறு அரவிந்தன் அண்ணா பொறுப்பளித்திருந்தார். அதற்கு முன்னர் நான் சண்முகனை ஒருபோதும் சந்தித்திருக்கவில்லை. அரவிந்தன் அண்ணா அவரது வீட்டின் அமைவிடங் குறித்தும் எனக்குச் சொல்லிருந்தார். எனது வீட்டிலிருந்து சைக்கிளில் செல்ல இருபது நிமிடத்தூரம். ராகுகாலம் சுபநேரமெல்லாம் பார்க்காமல் தொகுப்பு நூலை எடுத்துக்கொண்டு அவரது வீட்டுக்குப் போனேன். அதற்கு முன் நான் சண்முகனை நேரடியாகச் சந்தித்திருக்காதபோதும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் (இப்போது நெல்லியடி மத்திய கல்லூரி) அவர் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்ததால் அவர் பாடசாலை முடிந்ததும் சைக்கிளில் ஒரே சீரான வேகத்தில் குஞ்சர் கடை வீதியால் வீடு செல்லும்போது காற்றின் விரல்கள் கோதிவிடுமந்தத் தும்பைப் பூப் போன்ற குஞ்சியழகை சில வேளைகளில் ரசித்திருக்கிறேன். இதைத் தவிர ஒரு தடவை வதிரி வடக்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற சிறுகதைப் பயிலரங்கில் சண்முகன் வந்து 'கோசலையையும் தனது இருளிலிருந்தே ஒளிபிறக்கிறது' பிரதியையும் வாசித்து உரை நிகழ்த்தியபோது அங்கேயொரு பார்வையாளனாகக் கலந்துகொண்டிருக்கிறேன். அது நான் எழுதத் தொடங்கியிராத காலம். அதனால் சண்முகனை நேரடியாகச் சந்தித்துக் கதைக்க நான் துணியவில்லை. ஆனால் இதுவொரு தவிர்க்க முடியாத சந்திப்பாக நிகழ்ந்துவிட்டது.

ஒரு முற்பகல் வேளைதான் நான் அவரது வீட்டுக்கு சென்றிருந்தேன். இன்முகத்தோடு வரவேற்றார். அவருக்குரிய பிரதியைக் கொடுத்து என்னை அறிமுகப்படுத்திக்கொண்டேன். எனது சிறுகதைகளைச் சஞ்சீவியில் வாசித்திருப்பதாகச் சொன்னார். "அண்மையில் வாசித்த புத்தகம் எது?" எனக் கேட்டார். என்ன பதில் சொன்னேன் என்பது நினைவில்லை. அன்றவர் எனக்கு ஒரு புத்தகம் வாசிக்கத் தந்தார். புத்தகத்தின் பெயர் 'வாமன யாத்திரை' எழுதியவர் 'உமாவரதராஜன்' என்றிருந்தது. "உமாவரதராஜன் ஒரு பெண் எழுத்தாளரா?" என அவரிடம் கேட்டேன். 'கொண்டுபோய் வாசித்துப் பாரும் விளங்கும்' என்று சொன்னார். இப்படியே பத்தொன்பது ஆண்டுகள் கடந்துவிட்டன. 2014 நடுப்பகுதி வரை தினந்தோறும் பிற்பகலில் சண்முகன் வீட்டுக்குச் சென்று கதைத்துவிட்டு வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். அதன் பின்னர் வடமராட்சி கிழக்குக்கு தொழில் இடமாற்றம் நிகழ்ந்ததால் இது வெகுவாகக் குறைந்தது. கைத்தொலைபேசி உரையாடல்களாகச் சுருங்கிவிட்டது. 2006 ஓகஸ்ட் தொடங்கி நிலைமை சீராகும் வரையான காலப்குதியில் கூட நான் பிற்பகல் வேளைகளில் சண்முகன் வீட்டுக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தேன்.

சண்முகத்துடன் இதுவரை கால நட்பில் நான் கற்றதும் பெற்றதும் ஏராளம். திருக்கோவில் கவியுவனை எனக்கு 'வாழ்தல் என்பது' கதைத் தொகுப்பினூடாக முறையாக அறிமுகப்படுத்தி வைத்ததில் தொடங்கி ஈழத் தமிழ்ச் சினிமாவின் தந்தையெனக் கருதத் தக்க மாமனிதன் ஞானரதனின் (வை.சந்திதானந்தசிவம்) வீட்டுக்கு என்னை அழைத்துச் சென்று நேரடியாகச் சந்திக்க வைத்தது வரை சண்முகன் எனக்கு நிறையச் செய்திருக்கிறார். அவர் படைப்பாளர்கள், இலக்கியவாதிகளை இளையவர், மூத்தவர், உயர்ந்தவர் தாழ்ந்தவர்கள் எனத் தரம் பிரித்துப் பழகுவதில்லை.

சண்முகனின் Master pieceகளில் ஒன்றான 'வேட்டைத் திருவிழாவை' சண்முகம் சிவலிங்கம், 'இது எனக்கொரு fluke- கெடா' என நக்கலடித்ததை ஒரு பகிடியாகச் சொல்லிச் சிரித்த சண்முகனின் பக்குவநிலையைக் கண்டு வியந்திருக்கிறேன். வெங்கட்சாமிநாதன் இதுவரை 'அம்மணராசாவின் ஆடை வடிவமைப்பை விபரிக்கும் பாங்கிலான விமர்சனங்களையே ஆற்றி வந்துள்ளார் என்பதை சண்முகனின் 'இலுப்பை மரமும் இளஞ் சந்ததியும் குறித்து கணையாழியில் அவர் எழுதியிருந்த குறிப்பொன்றே போதுமானதென்பதையும் இங்கே குறிப்பிடத் தோன்றியது. சண்முகனுக்கு 2006 ஓகஸ்ட்டில் மணிவிழாக் குறிப்பை எழுதினேன். இன்று பவளவிழாக் குறிப்பை எழுதுகிறேன். நூற்றாண்டு விழாக் குறிப்பையும் எழுத வேண்டுமென்பது என் பேரவா.

# அவள் பெயர் முத்தழகு...!

சிறுகதை

பாலாஜினி

காதல் பிரிவென்பது எப்படி இருக்கக்கூடும். ஆழமானதாக, அளவிட முடியாததான ஒரு விடயம் தான் காதல். அப்படியென்றால் பிரியங்களினூடானது தானே காதல். உண்மை எதுவோ எனக்கு தெரியாது. ஆனால் என்னை பொறுத்த வரைக்கும் பிரியத்துக்கு மறுபெயர்தான் காதல். ஆம், அவள் எனக்கு அப்படி தான் இருந்தாள். அவளுக்கும் எனக்குமான உறவென்பது பெருங்காலத்துக்குரியதல்ல. குறுகிய காலம் தான். ஆனால் பிரியங்களுக்கு குறுகிய காலம் நீண்ட காலம் என்ற வேறுபாடு உண்டா என்ன? அது எல்லா இடங்களிலும் தானே வேர்விட்டு கிளைகொண்டு தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்கின்றது.

அவளது பிரியங்களும் அப்படித்தான். மெல்ல மெல்ல என்னுள் மொட்டுவிட்டு பூத்து கிடக்கின்றன. அந்தப் பூக்காடெங்கிலும் அவள் உலவிக் கொண்டுதான் இருக்கின்றாள். மென்மையான அவளது ஸ்பரிசங்கள் இன்னும் கூட என்னை தடவிக்கொண்டே தான் இருக்கின்றன. இருந்தும் அவளது பிரிவுத் துயர் என்னை இறந்து போன காலத்துக்குள்ளேயே பூட்டி வைத்திருக்கிறது. அதில் இருந்து வெளிவர எனக்கு விருப்பமும் இல்லை. வழியும் தெரியவில்லை. ஏனெனில் அவள் பிரிவென்பது தற்காலிகமான ஒன்றல்லவே. இனி ஒரு தடவை கூட நானும் அவளும் சந்திக்க முடியாத, பேசிக்கொள்ள முடியாத, முத்தமிட்டு கொள்ள முடியாத, அணைத்துக் கொள்ள முடியாத நிரந்தரமான பிரிவது. என் மடியிலே என் கண்முன்னே தன் இருவிழிகளில் நீர் கசிய எனை பிரிய மனமின்றி பிரிந்துவிட்டிருக்கின்றாள்.




எந்தளவுக்கு அவளது பிரிவு நான் எதிர்பார்த்திராது சடுதியாக நிகழ்ந்ததோ அதை போலதான் எனக்கும் அவளுக்குமான அறிமுகமும் முற்றிலும் எதிர்பாராத ஒன்று. சுமார் ஆறேழு மாதங்களுக்கு முன்னர் நிலவு தன்னை இரவு கடமையில் ஈடுபடுத்தி இரண்டு நாழிகைகள் ஆன வேளையில் தான் நாம் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டோம். வெண்மையும் மெல்லிய மண்நிறமும் கலந்த அவள் தேகத்தில் செதுக்கிய சிவந்த உதடுகள் எனை சிலிர்க்க வைத்தன. அந்த ஒரு சோடிக் கண்களை பற்றி சொல்லவே தேவையில்லை. அந்த இருவிழிகளுக்குள் என்னை சிறைப்பிடித்துக்கொண்டாள் அவள். ஒய்யார நடையும் ஓரவிழி பார்வையுமாக என் படர்ந்த வெளிகளெங்கிலும் நடந்து திரிந்தாள் அவள். அவள் பின்னால் அலைந்து கிடந்தேன் நான். அள்ளி அணைத்தேன். அன்பினை தந்தாள் அவள். களைப்புறும் நேரங்களில் நான் அவளை கட்டிக் கொள்ளும் போதெல்லாம் மறுப்பேதும் சொல்லாமல் என் மடிமீது துயில் கொண்டிருக்கிறாள். காதலர்கள் என்றால் சண்டை வருமாமே. ஆனால் எங்களுக்குள் ஒருபோதும் அப்படி நடந்ததில்லை. என் குரலுக்கு செவிசாய்ப்பாளவள். அவள் கூப்பிட்ட குரலுக்கு ஓடிச் செல்வேன் நான்.

அவள் பெயர் முத்தழகு. என் கை அணைப்பினிலே அதிகம் மகிழ்பவள். கடந்து போன எத்தனையோ பொழுதுகளில் நானும் அவளும் ஒன்றாக உறங்கியிருக்கிறோம். சுற்றித் திரிந்திருக்கிறோம். கண்களால் பேசியிருக்கிறோம். அவள் அம்மாவை ஏய்த்து விட்டு அவளை அழைத்து வருவதில் கில்லாடி நான். என்னுலகமோ வேறு. அவள் உலகமோ வேறு. ஆனால் எங்கள் இருவரையும் இணைத்து வைத்தது இந்த பிரியம் தான். முத்தழகின் ஆசைகளுக்கோ அளவில்லை. என்னை தூக்க சொல்லி அத்தனை தளிர்களையும் அழகாக கிள்ளிக்கொள்வாள் . எனது வீட்டிலோ அவளுக்கு விசேட வரவேற்பு. எத்தனை விதிகள் இருந்தாலும் அத்தனையும் அவளுக்கு மட்டுமே விதிவிலக்கு. கொஞ்சம் கூட வெட்கம் இல்லாமல் என் படுக்கையறை வரை வந்து செல்லக்கூடியவள். இப்படியான என் பிரியத்தை பற்றி எனக்கு நிறைய கனவுகள் இருந்தன. அத்தனையையும் கலைத்து விட்டு எப்படி பிரிந்து செல்ல மனம் வந்திருக்கும் அவளுக்கு? பாதி வழியிலேயே பிரிந்திடுவோம் என முதலிலேயே தெரிந்திருக்குமானால் அவளை மீண்டும் ஒரு முறை இறுக்கமாக அணைத்திருப்பேன். அவள் நுதலிலே முத்தமழை பொழிந்திருப்பேன். அவள் கேச அணைப்பினில் மீண்டும் ஓர் முறை உறங்கியிருப்பேன். இப்போது என்ன செய்ய முடியும். இறந்த காலங்களிலேயே வாழ்வதொன்றை தவிர. என் வேதனையும் என் துக்கமும் உங்கள் யாருக்குமே புரியப்போவதில்லை. ஆனால் ஒன்று மட்டும் தெரியும்.

"ம்மேய்.....!" என செல்லமாக எனை அழைத்திடும் அவள்,

மூச்சுக்கு முந்நூறு முறை உச்சரிக்கும் என் நான்கு கால் காதலி... எனை பைத்தியம் என்று எண்ண வேண்டாம். காதல் என்றால் இப்படி தான் இருக்க வேண்டும் என்று ஓர் வரையறை போட்டு வைத்திருக்கும் நீங்கள் தான் சுத்த பைத்தியங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மந்திரத்தாலே மாங்காய் விழுவதில்லை



ம.மயூரபாலன்

ஒரு வைர வியாபாரி வியாபார நிமித்தம் அருகில் உள்ள நகரத்துக்கு சென்றிருந்தான். மறுநாள் காலையில் அவன் அந்த ஊரைச் சுற்றிப் பார்க்க கிளம்பினான். அங்கே ஒரு ஆற்றங்கரையோரமாக நடந்து சென்று கொண்டிருந்தான். அங்கு ஒரு குடிசை இருந்தது. குடிசையின் உள்ளே சென்று பார்த்தால் ஒரு முனிவரும் அவரின் அருகே மிகப் பெரிய ஒரு வைரக்கலும் இருப்பதைக் கண்டான். அவ்வாறான ஒரு பெரிய வைரக்கல்லை அவன் தனது வாழ்நாளில் கண்டதேயில்லை.

சில நிமிடங்கள் முனிவருடன் பேசிய பின்னர் "இந்த வைரக் கல்லை எனக்குத் தருவீர்களா?" எனக் கேட்டான். முனிவரும் எதுவும் பேசாமலே உடனடியாக அதனை எடுத்து அவனது கையில் கொடுத்துவிட்டார். வைர வியாபாரிக்கு மிகவும் ஆனந்தம். இந்த வைரத்தை விற்று என்னவெல்லாம் செய்யலாம் என அவன் மனக்கோட்டை கட்ட ஆரம்பித்துவிட்டான். அன்று இரவு முழுவதும் அவனாலே ஒழுங்காக தூங்க முடியவில்லை. மறுநாள் ஒழுங்காக சாப்பிடவும் முடியவில்லை. இந்த வைரத்தை எவ்வாறு பாதுகாப்பது என்ற கவலையிலே அவனது நாள் முழுவதும் கழிந்தது. இவ்வாறு ஓரிரு கிழமைகள் ஓடிவிட்டன. வியாபாரி ஒழுங்கான தூக்கம், உணவு இன்றி சஞ்சலமான மனதுடன் இருந்தான். ஒரு கட்டத்திலே அவனாலே தாங்க முடியவில்லை. இப்பொழுது அவன் மீண்டும் அந்த நகரத்துக்கு சென்று முனிவரைச் சந்தித்தான். "ஐயா இந்த வைரக்கல்லை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். இது எனது வாழ்வின் நிம்மதியை கெடுத்துவிட்டது. நான் கேட்ட பொழுது இந்த வைரக்கல்லை எந்தவித தயக்கமும் இன்றி நீங்கள் எனக்கு தந்தீர்கள். இந்த வைரக்கல்லுக்கு பதிலாக உங்களிடம் உள்ள பரந்த மனப்பான்மையை எனக்கு தாருங்கள். உங்களிடம் உள்ள பற்றற்ற தன்மையை எனக்கு தாருங்கள்" எனக் கேட்டான்.

அதற்கு அந்த முனிவர் "இந்த உலகத்து பொருள்களை உடனடியாக பெறுவதற்கு உன்னிடம் வசதிகள் இருக்கலாம் ஆனால் உண்மையான கருணை, அன்பு போன்ற பண்புகளை வளர்க்க நீதான் முயற்சி செய்ய வேண்டும்" என்றார். அதற்கு வியாபாரியோ "ஐயா நீங்கள் கூறுவது ஒன்றும் எனக்கு புரியவில்லை" என்றான். முனிவரும் அதற்கு விடை சொல்லாது "வா இரண்டு பேரும் சென்று ஊரை சுற்றிப் பார்ப்போம்" எனக் கூறினார்.

அவ்வாறே இரண்டு பேரும் சென்று கொண்டிருக்கும்போது வழியிலே ஒரு கழிவுப் பொருள்கள் சேர்க்கும் இடம் இருந்தது. அந்த நகரத்து குப்பைகள் எல்லாவற்றையும் அங்குதான் சேர்த்து வைப்பார்கள். அதில் இருந்து வந்த துர்நாற்றம் வயிற்றைக் குமட்டியது. அவனாலே அதனை சகிக்க முடியவில்லை. ஆனால் அங்கு பார்த்தால் ஒரு சிறிய தேநீர்க் கடை இருந்தது பலர் குப்பைகளை பொறுக்கிக் கொண்டிருந்தார்கள். சிறிய சிறிய குடிசைகள் இருந்தன. அவன் மிகுந்த கோபத்துடன் "என்னை ஏன் இங்கு கூட்டி வந்தீர்கள்?" எனக் கேட்டான். அதற்கு முனிவரும் "அங்கே பார். அங்கு பலரும் எந்தவித அருவருப்பும் இன்றி சாதாரணமாக இருப்பது தெரிகிறதா? ஏனெனில் அவர்கள் அந்த துர்நாற்றத்துக்கு பழக்கப்பட்டு விட்டார்கள். இப்பொழுது அவர்களுக்கு அது சாதாரணமாகி விட்டது. இங்கு கவனத்தில் கொள்ள வேண்டிய மிகவும் முக்கியமான விஷயம் என்னவென்றால் நாமும் சில வேளைகளில் வாழ்க்கையில் நடைபெறும் துன்பங்களுக்கு பழக்கப்பட்டு இதுதான் வாழ்க்கையென எண்ணி வாழ்கின்றோம். நாமும் கோபம், பொறாமை, பேராசை போன்றவற்றுக்கு பழகிப்போய்விடுகிறோம். இவை எல்லாவற்றிலும் மோசமானது என்னவென்றால் நாம் அறியாமையில் வாழ்வதற்கு பழகிப்போய் விடுகிறோம். பொய்களை உண்மையென்று நம்புகிறோம். இப்பொழுது நமக்கு நல்லது கெட்டது என்பவற்றுக்கு இடையே பெரிய வித்தியாசம் தெரிவதில்லை. துன்பங்களும் துயரங்களும் நம்மை நம் உள்ளே உள்ள பேரானந்தத்தை நோக்கி உந்த வேண்டுமேயன்றி அவற்றுக்கு நாம் பழகிப்போகக்கூடாது" எனக் கூறினார்.

அவர்கள் தொடர்ந்து தமது நடைப் பயணத்தை ஆரம்பித்தார்கள். செல்லும் வழியிலே ஒரு புதர் நிறைந்த காணித்துண்டு ஒன்று யாராலும் பராமரிக்கப்படாமல் காடுபோல் இருந்தது. அது பார்ப்பதற்கு மோசமாக யாருக்கும் எந்த ஒரு பயனும் இல்லாதிருந்தது. அங்கு புற்களும் புதர்களும் பாம்பு புற்றுக்களும் நிறைந்திருந்தன. மேலும் சில தூரம் சென்ற பின்னர் வேறு ஒரு இடம் வந்தது. அந்தக் காணியிலே அழகான தோட்டம் ஒன்று இருந்தது. அது மிகவும் நன்றாக பராமரிக்கப்பட்டிருந்தது. அங்கே பயன்தரும் பல மரங்களும் செடிகளும் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன.

அப்பொழுது முனிவர் அந்த மனிதனைப் பார்த்து "இந்த இரண்டு தோட்டங்களுக்கு இடையே உள்ள வித்தியாசம் என்னவென்றால் ஒரு தோட்டத்தில் யாரோ ஒருவர் முயற்சி போட்டு வேலை செய்திருக்கின்றார். மற்றைய தோட்டத்திலே யாரும் எந்தவித முயற்சியும் செய்யவில்லை. ஒன்றுமே செய்யவில்லை என்பதன் அர்த்தம் அங்கே ஒன்றுமே முளைக்காது என்பது அல்ல. அந்த நிலத்திலும் ஏதாவது நிச்சயம் முளைக்கத்தான் போகிறது. ஆனால் அவை நாம் விரும்பாத நமக்கு பயன் அற்றவையாகத்தான் இருக்கும். நமக்கு நன்மைதரும் குணங்களும் இந்த செடி கொடிகள் போன்றவைதான். அவற்றை நாம் தான் அனுதினமும் வளர்த்து எடுக்க வேண்டும்" எனக் கூறினார்.

நமது வாழ்விலும் நல்ல விஷயங்களுக்காக முயற்சி போட வேண்டியுள்ளது. தேகாப்பியாசம் தேகாரோக்கியத்துக்கு நல்லது என்பது நமக்கு தெரியும். ஆனால் தேகாப்பியாசம் செய்யாமல் இருப்பது மிகவும் இலகுவாக உள்ளது. ஊட்டச்சத்து உள்ள உணவு உடலுக்கு நல்லது என்பது நமக்குத் தெரியும். ஆனாலும் மனம் துரித உணவகத்துக்கு செல்லத்தான் விரும்புகிறது. இருப்பினும் அவற்றின் விளைவுகள் நமக்கு அனுகூலமாக இருக்கப்போவதில்லை. அது போலவே நமது மனதில் அமைதியும் ஆனந்தமும் ஏற்பட வேண்டுமென்றால் அதற்காக முயற்சிசெய்ய வேண்டியது அவசியமாகும்.

நமது வாழ்க்கை எனும் இந்த தோட்டத்தை அறிவு எனும் ஏர் கொண்டு உழுது அன்பு, கருணை, பொறுமை என்பவற்றின் விதைகளை விதைத்து நல்லோர் சொல்கின்ற வார்த்தைகள் எனும் தண்ணீரைப் பாய்ச்சினோம் என்றால் நமது தோட்டத்திலும் நிம்மதி எனும் பழங்களை வாழ்நாள் முழுவதும் ஆனந்தமாக உண்டு மகிழலாம். துன்பம் வேதனை எனும் வெயில் தாக்கும்பொழுது அந்த மரங்களின் நிழலிலே பாதுகாப்பாக ஓய்வாக இருக்க முடியும்.






# மருத்துவர் பணிக்கு கோடி நன்றி!

வேலணையூர் சுரேஷ்

21. நித்தம் சொல்கிறோம் நன்றிகள் கோடி!
நினைந்தெமைக் காக்கும் மருத்துவர் வாழி!
சத்திய மாகவே கடவுள் ஆவார்
சாவினில் மீண்டவர் நெஞ்சினில் என்றும்!
நித்திய கடமைக்கு ஒப்புக் கொடுப்பர்
நித்திலம் மீதில் கைப்பலம் ஆவர்!
ஒத்தடம் போல அவர் குரல் இருக்கும்
ஒற்றைத் துணையும் இல்லா எவர்க்கும்!

22. தூரத் தூர உற்றவர் நிற்கவும்;
துணிந்து நோயாளி அருகில் நிற்பர்!
ஆறச் சோர அமர்ந்து அறியர்
அக்கறை யோடு கருமம் காப்பர்!
நேரத் தோடு நாங்கள் உண்போம்
நேரம் இருந்தால் மட்டும் உண்பர்!
கோரக் கொரோனா தொற்றுக் குள்ளும்,
குடும்பம், நன்மை ஒன்றும் பாரர்!

23. தம்மை ஒறுத்துப் பணிகள் செய்வர்
தற்துணி வாக ஆறுதல் சொல்வர்!
செம்மை யாகவே செயலிற் திழைப்பர்
செய்வதைச் செவ்வனே செய்ய உழைப்பர்
எம்மைப் போலவே தானே அவர்கள்
என்றாலும் எம்மில் உயர்ந்தே இருப்பர்!
பொம்மை போன்று போர்த்துக் கட்டி
பொறுப்பாக நிற்பர் கொரோனாவுக்குள்ளே!

24. வைத்தியர், தாதியர், சுகாதாரத் தொண்டர்
மனதில் வைத்துப் போற்றப்படுவர்
சத்தியம் இவர்கள் கடவுளின் வடிவாய்
சார்ந்தவர் எவர்க்கும் கண்ணில் தெரிவர்!
அத்தனை தெய்வமும் கைவிட்ட போதும்
உற்ற தெய்வமாய் உடனிருப்பவர்கள்
எத்தனை நேர்த்தி வைத்தாலும் எமக்கு
என்றும் இவர் போல் யார் கிடைப்பார்கள்?

26. மருத்துவர் பகரும் அறிவுரை கேட்டு
மதித்து நடந்தால் அகலும் தொற்று!
விருத்தி யுறாமல் நோயைத் தடுக்க
விவேகம் கொண்டால் போகும் அற்று!
திருத்தவே முடியாது எம்மவர் பலரை?
நிமிர்த்த முடியா நாய்வால் போல!
கருத்திற் கொண்டு கவனம் காப்போம்
களத்தில் நிற்கும் மருத்துவர் பாவம்!!

தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆர்.பிரகாஷ்

# ஆப்கானிஸ்தானில் சீனாவின் 'ருவிஸ்ட்'

உலக உலா

வில்லன் யார்? என்று கணிக்க முடியாத ஒரு திகில் திரைப்படம் நகர்வதைப்போன்று நகர்ந்து கொண்டிருக்கின்றது ஆப்கானிஸ்தான் விவகாரம். ஆப்கானிஸ்தான் மீண்டும் ஒருதடவை வல்லரசுகளின் பகடையாட்டத்துக்கு இரையாக்கப்படவுள்ளதா என்ற ஐயப்பாடு மிகையாகவே எழுந்துள்ளது. தலிபான்களின் ஆகப்பிந்திய அறிவிப்பான, 'ஆப்கானிஸ்தான் மண்ணை சீனாவுக்கு எதிராகப் பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம்' என்பதில் இருந்து தோன்றியுள்ளது இந்தப் பேரச்சமும் ஐயப்பாடுகளும்.

இரண்டல்ல, மூன்றல்ல சுமார் 20 ஆண்டுகாலம் அமெரிக்காவின் எண்ணங்களும் சித்தாந்தங்களும்தான் ஆப்கானிஸ்தானின் தலைவிதியைத் தீர்மானித்துக் கொண்டிருந்தன. இரட்டைக் கோபுரத் தகர்ப்புக்குப் பின்னர் ஆரம்பித்த இந்தத் தலையீடு இந்த வருடம் வரையில் நீண்டது. 'உலகப் பயங்கரவாத எதிர்ப்பு' என்ற பொதுக் கொள்கையின் கீழ் தலிபான்களை 20 ஆண்டுகாலப் போரில் தோற்கடிக்க முடியாத நிலையில் இந்த வருடம் தனது படைகளை முழுவதுமாக திரும்பப் பெறுகின்றது அமெரிக்கா. இது ஒரு அறிவிக்கப்படாத தோல்வி.

அமெரிக்காவின் இந்த 'ஸீரோ போர்ஷஸ்' கொள்கையை அடுத்து ஆப்கானிஸ்தானில் மிகப்பெரும் எழுச்சியில் தாக்குதல்களை ஆரம்பித்தது தலிபான். மிகக் குறுகிய நாள்களிலேயே ஆப்கானிஸ்தானின் எல்லைப் பகுதிகள் தலிபான்களிடம் வீழ்ந்தன.

தலிபான்களை பல தடவைகள் சமரசப் பேச்சுக்கு அழைக்கும் அளவுக்கு அந்த அமைப்பின் தாக்குதல் மூர்க்கம் பெற்றது. தலிபான்களின் இந்த எழுச்சியும் விரைவு முன்னேற்றமும் அமெரிக்காவால் கூட கணிக்கப்படாத விடயம்தான். இதனால், தலிபான்களுக்குப் பின்னால் ஏதோவொரு சக்தி இருக்கின்றது என்றும் அது பாகிஸ்தானாக இருக்கலாம் என்றும் ஆப்கானிஸ்தான் பலமுறை திரும்பத் திரும்ப குற்றஞ்சாட்டிய நிலையில் அந்தச் சக்தி சீனாவாக இருக்கலாம் என்ற சந்தேகங்கள் தற்போது வலுப்பெற்றுள்ளன.

ஆப்கானிஸ்தானுடன் எல்லையைப் பகிரும் நாடான பாகிஸ்தான், அமெரிக்காவுடன் மனக் கசப்புக்களையே கொண்டுள்ளது. அத்துடன் அமெரிக்காவின் 'வர்த்தக' எதிரி என்று கருதப்படும் சீனாவை தன் நட்பு நாடாக பார்க்கின்றது பாகிஸ்தான். ஆக, தன் இருப்புக்கு 'அமெரிக்க விரோத கொள்கையுள்ள' தலிபான்களை அரவணைக்க வேண்டிய தேவை பாகிஸ்தானுக்கு. எதிரியின் எதிரி நண்பன் என்பதற்கேற்ப அதே அமெரிக்க விரோதக் கொள்கைதான் தலிபான்களை சீனாவும் ஆதரிக்கும் படியாக அமைந்துள்ளது. தலிபான்களால் தற்போது பயன்படுத்தப்படும் உச்சக்கட்ட இலத்திரனியல் தொழில்நுட்பம்கூட 'தலிபான்கள், சீனா, பாகிஸ்தான்' என்ற கூட்டணியொன்று உருவாகிவிட்டதா என்ற கேள்விகளைத்தான் எழுப்பி நிற்கின்றது.

அமெரிக்காவின் ஆளுகை ஆப்கானிஸ்தானில் மிகையாக இருந்த காலப்பகுதிகளில்கூட ஆப்கானிஸ்தான் பாகிஸ்தான் எல்லைப் பகுதிகள் பயங்கரவாதிகளினதும் ,பயங்கரவாதத்தினதும் சொர்க்கபுரியாகத்தான் இருந்தன. இவ்வாறிருக்கையில் அஸ்ரப் கனி அரசு ஆட்சியில் இருந்து வீழ்த்தப்பட்டு தலிபான்கள் ஆட்சியமைத்தால் ஆப்கானிஸ்தான் எவ்வாறிருக்கும் என்பது கற்பனைகூட செய்து பார்க்க முடியாத பயங்கரம்தான். அதிலும் வல்லரசு உட்பட இரு நாடுகளின் ஆதரவு கிட்டினால், ஆப்கானிஸ்தானில் இனி அழுகைதான் மிச்சம்.

ஆர்.லயனல்




# இலங்கை அணி மீள்கிறதா?

விளையாட்டு

நீண்ட நாள்களுக்குப் பின்னர் இலங்கை ரசிகர்களுக்கு ஒரு விருந்து கிடைத்திருக்கின்றது. தொடர் தோல்விகள், அழுத்தங்கள் இவற்றில் இருந்து விடுதலை கிடைத்து ஒரு வெற்றிப்பாதை ஏற்பட்டு விடாதா என்று ஏங்கியிருந்த இலங்கை அணிக்கும் அதன் ரசிகர்களுக்கும் இந்தியாவுக்கு எதிரான ரி-20 தொடர் ஒரு நிம்மதிப் பெருமூச்சுத்தான். அதில் இரண்டாம் கருத்து இருக்க முடியாது.

இலங்கை அணி வெற்றிபெற்றாலும் அது கொண்டாடப்படக்கூடிய வெற்றியாக இல்லை என்பது பொதுவான விமர்சனம். காரணம் கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக ஒன்றல்ல இரண்டல்ல எட்டு வீரர்களை பறிகொடுத்து பெரும் சரிவுக்குள் தள்ளப்பட்டது இந்திய அணி. துடுப்பாட்ட வீரர்கள் இல்லாத நிலையில், வழக்கமாக இறுதி வீரராகக் களமிறங்கும் குல்தீப் யாதவ் ஆறாவது வீரராக களமிறங்க வேண்டிய அளவுக்கு நெருக்கடி இந்தியாவை சூழ்ந்தது.

தொடரை கைவிடுவதற்கான முடிவு இந்திய கிரிக்கெட் சபையிடம் என்று ஐ.சி.சி. அறி வித்த பின்னர் மீதமிருந்த வீரர்களை வைத்து தொடரை நடத்தி முடித்துள்ளது இந்தியா. அதற்காக இந்திய அணியை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

அதேபோல இந்தத் தொடரில் களமிறக்கப்பட்ட இலங்கை அணியும் , பல முக்கியமான வீரர்கள் இல்லாத நிலையிலேயே இருந்தது. மத்யூஸ், குசல் பெரேரா, பானுக ராஜபக்ச, லக்மால், குசல் மெண்டிஸ், டிக்வெல, தனுஷ்க குணத்திலக போன்றோரில்லாத நிலையில், கையில் அகப்பட்ட இளம் வீரர்களை ஒரு அணியாகச்சரிக்கட்டியே இலங்கை அணியும் இந்திய அணியை எதிர் கொண்டது.




எனவே இரு அணிகளும் ஒப்பீட்டளவில் சமபலம் கொண்டவையாகவே ரி 20 போட்டியில் இருந்தன. இந்த நிலையில் ஏற்கனவே தொடர் தோல்விகள், அனுபவ வீரர்கள் இல்லாமை, சம்பளப் பிரச்சினை, அரசியல் தலையீடு, தலைமைத்துவக் குழப்பங்கள், ஒழுக்கப் பிரச்சினை, வீரர்களின் காயங்கள் என்று பல காரணிகளால் இலங்கை அணி நொந்து நூடில்ஸாகியிருந்தது. இந்தத் தடுமாற்றமே ரி-20 உலகக்கிண்ணத்தில் தகுதியாட்டத்தில் விளையாடி முதன்மைச் சுற்றுக்கு செல்ல வேண்டிய நிலை முன்னாள் உலகச் சம்பியனான இலங்கைக்கு ஏற்பட்டது. இலங்கை அணி ரசிகர்கள் கூட தமது அணியை இகழும் மிகப்பரிதாபமான நிலைதோன்றியிருந்தது. இவற்றையெல்லாம் தீர்க்கும் அருமருந்தாக ஒரு வெற்றி இலங்கைக்கு தேவைப்பட்டது. இந்த இந்லையில் இந்திய அணியை ரி-20 யில் வென்று நீண்ட காலத்துக்கு பிறகு ஒரு கிண்ணத்தை இலங்கை சுவீகரித்துள்ளது. தற்போது அணிக்குள் ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. ஆரம்ப வீரர்கள், முன் வரிசை வீரர்கள் என்று அணிக்குள் ஓர்மத்தோடு கூடிய ஆட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. வனிந்து ஹசரன்க பந்துவீச்சில் நம்பிக்கை கொடுக்கின்றார். கருணாரத்ன பின்வரிசையில் வெளுத்துவாங்கும் வீரராகவும் சொல்லிக்கொள்ளும்படியான பந்துவீச்சை வெளிப்படுத்துபவராகவும் உள்ளார். அதுபோக அணித்தலைவர் தசுன் சானக சிறந்த முறையில் அணியைக் கொண்டு செல்கின்றார். தசுன் சானக ஒன்றும் ஆஹாஓஹோ என்று மெச்சும்படியான வீரர் இல்லை. ஆனால் அவர் தலைமைத்துவக் குணாதிசயத்தை சரிவரக் கொண்டுள்ளார். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமாயின் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எவ்வாறு டேரன் சமியோ அவ்வாறுதான் இலங்கைக்கு சானக. வழக்கம்போன்ற 'ஒரு தொடருக்கு ஒரு தலைவர் ' என்ற அபத்தமான சேட்டைகளை தசுன் விடயத்தில் இலங்கை கிரிக்கெட் செய்துவிடக்கூடாது. அவரை அணித் தலைவராகத் தொடர அனுமதிக்க வேண்டும். அதுபோக பின்வரிசை வீரர் கருணாரத்னவையும் அதே இடத்தில் களமிறங்க அனுமதிக்க வேண்டும். இந்திய அணிக்கு எதிரான தொடரில் கைக்கொள்ளப்பட்ட இந்த உத்தி இலங்கை அணியில் தொடர வேண்டும். முதன்மை அணிகளுடன் தோல்வியடைந்தாலும் ஒரு சகிப்புத்தன்மை இலங்கைக் கிரிக்கெட்டுக்கு இருக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org